தமிழரசு
Tamilarasu
(Monthly)

ஆகஸ்ட் 2024 (August 2024)
விலை ரூ.30/– (Price Rs.30/-)

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

மலர் (Vol.) : 55
இதழ் (Issue) : 2

நடுத்தர மக்களின் வீடு கட்டும் கனவை எளிதாக்க

தமிழ்நாட்டில் முதல் முறையாக கட்டட அனுமதியை ஆன்லைன் மூலம் உடனடியாக வழங்கும் திட்டம்

www.onlineppa.tn.gov.in

வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை

சுய சான்றிதழின் அடிப்படையில் உடனடி கட்ட அனுமதி வழங்கும் புதிய திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்

இம்மாத இதழில்....

அகில இந்திய குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மையத்தின் வாயிலாக பயிற்சி பெற்ற 87 ஆர்வலர்கள் ஐ.ஏ.எஸ் முதன்மைத் தேர்வுகளில் வெற்றி பெற்றுள்ளனர்.

சொன்னதைச் செய்யும் நம் முதல்வர் !

ஊரகப் பகுதிகளில்
மக்களுடன் முதல்வர்

கலைஞர் கனவு இல்லத் திட்டத்தினை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

தொடங்கி வைத்தார்

நாள் : 11.07.2024

இடம் :

பாளையம் புதூர்

அரசு மேல்நிலைப்

பள்ளி, தருமபுரி

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2055
குரோதி வருடம்: ஆடி - ஆவணி
ஆகஸ்ட் 2024

மலர் : 55 விலை ரூ.30 இதழ் : 02

ஆசிரியர் - வெளியிடுபவர்
மரு. **இரா.வைத்திநாதன்,** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
இரா. அண்ணா
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
க.அ. முகம்மது ரசூல்
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
எஸ். உதயா கதிரவன்
ப. கருணாகரன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
சி. சுஜிதா
இரா. பாலாஜி
கு. சுபாஷ்

நிருபர்கள்
எஸ்.ஆர்.எஸ்.ஸ்ரீந்தர்
ஜெ.ஜெயசிம்ஹன்

ஓவியர்
இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தா தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

உரைப்பா ருரைப்பவை யெல்லாம் இரப்பார்க்கொன்
றீவார்மேல் நிற்கும் புகழ். (குறள் : 232)

போற்றுவோர் போற்றுவனவெல்லாம் இல்லாதவர்க்கு ஒன்று வழங்குவோரின் புகழைக் குறித்தே அமையும்.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

★ ஊரகப் பகுதிகளில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் 2,23,536 மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்ட "முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்" 4

★ இளைய சமுதாயமானது கல்வி, தனித்திறமை, விளையாட்டிலும் சிறந்து வளர்ந்து மாபெரும் சக்தியாகத் திகழ வேண்டும் 12

★ "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து நாகப்பட்டினம், வேலூர், திருப்பூர், தூத்துக்குடி, மதுரை மாவட்டப் பொதுமக்களுடன் கலந்துரையாடல் 18

★ வீடு கட்டும் கட்டட அனுமதியை இணையதளம் வாயிலாக ஒற்றைச்சாளர முறையில் உடனடியாகப் பெறும் புதிய திட்டம் 27

★ தருமபுரி மாவட்டத்தில் ரூ.444.77 கோடிச் செலவில் "மக்களுடன் முதல்வர்" திட்டத் தொடக்க விழாவில் 621 முடிவுற்ற திட்டப்பணிகள் 34

★ கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் ஆய்வு 50

★ ஆதிதிராவிட மக்களின் நலன் காப்பதில் இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாக விளங்கும் தமிழ்நாடு 57

★ சென்னை, இராயப்பேட்டை, ஆலப்பாக்கம், பூந்தமல்லியில் ரூ. 63.246 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் இரண்டாம் கட்ட மெட்ரோ திட்டப் பணிகள் 63

★ தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வினா – விடைத்தாள் 74

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 22.07.2024 அன்று தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறையின்கீழ் இயங்கும் நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் சார்பில், தமிழ்நாட்டில் முதல்முறையாகப் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர் மற்றும் நடுத்தர மக்கள் இணைய தளம் வாயிலாகச் சுயசான்றிதழ் அடிப்படையில் அதிகபட்சம் 2,500 சதுர அடி பரப்பளவு கொண்ட மனையிடத்தில் 3,500 சதுரஅடி அளவிற்குள் கட்டப்படும் குடியிருப்புக் கட்டுமானத்திற்கு உடனடியாக ஒற்றைச் சாளர முறையில் கட்டட அனுமதிகளைப் பெறும் ஒருங்கிணைந்த புதிய திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

ஊரகப் பகுதிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் 2,23,536 மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்ட

“முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்”

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், திருவள்ளூர் மாவட்டம், கீழச்சேரி, அரசு உதவிபெறும் புனித அன்னாள் தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளான 15.07.2024 அன்று உலகிற்கே முன்னோடியான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விரிவுபடுத்தி தொடங்கி வைக்கும் விதமாக, மாணவ, மாணவியர்களுக்கு காலை உணவு வழங்கி தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
தொடங்கி வைத்தார் - 15.07.2024

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

“நகரப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் பள்ளிக்குச் செல்லக்கூடிய குழந்தைகள் காலையிலேயே புறப்பட்டு விடுவதால், பெரும்பாலான குழந்தைகள் காலை உணவு சாப்பிடுவது இல்லை என்ற தகவல் அரசுக்குக் கிடைத்திருக்கிறது. பள்ளிகள் தூரமாக இருப்பது மட்டுமல்ல, சிலருடைய குடும்பச் சூழலும் இதற்குக் காரணமாக இருக்கிறது. இதனை மனதில் கொண்டு, அரசுப் பள்ளி மாணவர்களுக்குக் காலை நேரத்தில் சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை

நாம் தீட்டி இருக்கிறோம். முதற்கட்டமாகச் சில மாநகராட்சி, நகராட்சிகளிலும், தொலைதூரக் கிராமங்களிலும் இத்திட்டம் தொடங்கப்படும். ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலக்கூடிய தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு அனைத்துப் பள்ளி நாட்களிலும் காலை வேளையில் சத்தான சிற்றுண்டி வழங்கப்படும்" என்று ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவு பெற்றதையொட்டித் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 07.05.2022 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விதி 110-இன் கீழ் அறிவிப்பு வெளியிட்டார்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் குறிக்கோள்

மாணவ, மாணவியர்கள் பசியின்றிப் பள்ளிக்கு வருதல், ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் பாதிக்கப்படாமலிருத்தல், ஊட்டச்சத்து நிலையை உயர்த்துதல், பள்ளிகளில் மாணவர்களின் வருகையை அதிகரித்தல், வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் பணிச்சுமையைக் குறைத்தல் ஆகியவற்றை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தொடக்கம்

அரசுப் பள்ளி மாணவர்களுக்குக் காலை உணவு வழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை மதுரை, ஆதிமூலம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் மாணவர்களுக்குக் காலை உணவினைப் பரிமாறி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 15.09.2022 அன்று தொடங்கி வைத்து, மாணவர்களுடன் உணவருந்தினார்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தொடங்கப்பட்டது முதல் தற்போது வரையிலான செயல்பாடுகள்

முதற்கட்டமாக, தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில், இத்திட்டத்தினைச் செயல்படுத்திட ரூ.33.56 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 1,14,095 மாணவர்கள் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெற்றனர். மேலும், 28.02.2023 முதல் இத்திட்டம் நீட்டிக்கப்பட்டு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டச் செயலியின் படி 1,005 நகர்ப்புற மையங்களில் 1,12,883 குழந்தைகளும், 963 கிராமப்புற மையங்களில் 41,225 குழந்தைகளும் பயனடைந்து வந்தனர். அதனைத் தொடர்ந்து, 25.08.2023 அன்று நாகப்பட்டினம் மாவட்டம், திருக்குவளையில் நடைபெற்ற விழாவில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரிவுபடுத்தித் தொடங்கி வைத்தார்.

தற்போது முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தில், 30,992 அரசு தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் சுமார் 18 இலட்சத்து 50 ஆயிரம் அரசுப் பள்ளி மாணவ, மாணவியர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் – மாணவர்கள், பெற்றோர் வரவேற்பு

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மாணவர்களிடமும், பெற்றோர்களிடமும் மிகுந்த வரவேற்பு பெற்றுள்ளதோடு, சத்தான உணவினை வழங்குவதன் காரணமாகப் பள்ளிகளில் மாணாக்கர்களின் வருகையும் அதிகரித்துள்ளது. வேலைக்குச் செல்லும் தாய்மார்கள், காலை உணவு தயாரிக்கும் நேரம், பொருட்செலவு மீதமாவதோடு மட்டுமல்லாமல், தங்கள் குழந்தைகளின் ஆரோக்கியம், மகிழ்ச்சி, படிப்புத்திறன் அதிகரித்துள்ளதைக் கண்டு பாராட்டும், மகிழ்ச்சியும் தெரிவித்து வருகின்றனர்.

கள ஆய்வு வெளிப்பாடு

முதலமைச்சரின் காலை உணவு வழங்கும் திட்டம் தொடர்பாக மாநிலத் திட்டக் குழுவினரால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, காலை உணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்ட பிறகு அரசுப் பள்ளிகளில் மாணவ, மாணவியர்களின் வருகை அதிகரித்துள்ளது கண்டறியப்பட்டுள்ளது.

மாநில மதிப்பீடு, செயலாக்கத் துறையினரின் தொடர் ஆய்வு மற்றும் மதிப்பீடுகளில், மாணவர்களிடையே கற்றலில் ஈடுபாடு, ஆர்வம் அதிகரித்து கற்றல் திறன் மேம்பட்டுள்ளதுடன், மாணவர்களின் ஊக்கம், கவனிக்கும் திறன் மேம்பட்டுள்ளதாகவும், நேரம் தவறாமை, தொடர் வருகை (Regular Attendance) அதிகரித்துள்ளதும் கண்டறியப்பட்டுள்ளது.

ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளிகளுக்கும் விரிவுப்படுத்தப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

2024-2025ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் இயங்கிவரும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் சுமார் 2.50 இலட்சம் மாணவர்கள் பயனடையும் வகையில் வரும் கல்வி ஆண்டு முதல் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, பள்ளிக் கல்வியை மேலும் பரவலாக்கவும், கற்றலை இனிமையாக்கவும், எல்லாக் குழந்தைகளும் பசியின்றிக் கல்வியறிவு பெற்றிடவும், தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளிலும் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு இந்தத் திட்டத்தினை விரிவுபடுத்தி, கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடப்படும் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளான 15.07.2024 அன்று திருவள்ளூர் மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 04.07.2024 அன்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, திருவள்ளூர் மாவட்டம், கீழச்சேரி, புனித அன்னாள் தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், ஊரகப் பகுதிகளில் உள்ள 3,995 அரசு உதவிபெறும் தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் 2,23,536 மாணவ, மாணவியர்கள் தினசரி பயன்பெறும் வகையில் ஊரகப் பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்பட்ட முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாணவ, மாணவியர்களுக்கு உணவு பரிமாறித் தொடங்கி வைத்தார்கள்.

மேலும், அம்மாணவ, மாணவியர்களுடன் சேர்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உணவருந்தியபோது, உணவு சுவையாக இருக்கிறதா என்றும், நேரம் தவறாமல், சரியான நேரத்தில் காலை உணவை தினசரி உண்ண வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். முன்னதாக அப்பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் மாணவ, மாணவியர்களுக்கு

வழங்கப்படவுள்ள உணவின் தரத்தினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுவைத்துப் பார்த்து ஆய்வு செய்தார்.

சிறுபான்மை அமைப்பினரால் நடத்தப்படும் அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கும், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை விரிவுபடுத்தி செயல்படுத்தியமைக்காக

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கிறிஸ்துவ அமைப்பைச் சேர்ந்த அருட்தந்தைகள், அருட்சகோதரிகள் மற்றும் வாணியம்பாடி முஸ்லீம் கல்வி கழக துணைச் செயலாளர் திரு. முகமது நஹீம் மற்றும் இஸ்லாமிய கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களும் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

முன்னதாக, பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்தநாளையொட்டி, கீழ்ச்சேரி, புனித அன்னாள் தொடக்கப் பள்ளி வளாகத்தில், பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

விழுப்புரம் கோட்டம் – தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் 10 புதிய பேருந்துகளை மக்களின் பயன்பாட்டிற்காகத் தொடங்கி வைத்தல்

விழுப்புரம் கோட்டம் – தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 2023-2024ஆம் ஆண்டிற்கு 247 புறநகரப் பேருந்துகள், 64 நகரப் பேருந்துகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் பழைய பேருந்துகளுக்கு மாற்றாக இதுவரை 134 புறநகரப் பேருந்துகள், 12 நகரப் பேருந்துகள் புதியதாக கூண்டு கட்டி தடத்தில் இயக்கப்பட்டுள்ளது. மேலும், தற்போது

இப்பகுதி மக்கள் பயனடையும் வகையில் ரூ.3.81 கோடிச் செலவில் 8 புறநகரப் பேருந்துகள், 2 புதிய மகளிர் விடியல் பயண நகரப் பேருந்துகள், என மொத்தம் 10 புதிய பேருந்துகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மப்பேடு கூட்ரோட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை:

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான காலை வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மிக மிக மகிழ்ச்சியாக உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன். என் மகிழ்ச்சிக்கு என்ன காரணம் என்று கேட்டீர்கள் என்றால், 'முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்', 'நான் முதல்வன்', 'புதுமைப்பெண்', 'கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்' எனத் தமிழ்நாட்டில் இருக்கின்ற, பெண்கள் – குழந்தைகள் – மாணவர்கள் – இளைஞர்கள் என்று உங்களுடைய முன்னேற்றத்திற்கும், எதிர்காலத்திற்கும் முதலமைச்சராக இருந்து பணியாற்றக்கூடிய வாய்ப்பு, பாடுபடக்கூடிய எண்ணம் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்து கொண்டிருக்கிறது. இந்த மகிழ்ச்சியை வழங்கிய தமிழ்நாட்டு மக்களான உங்களுக்கு முதலில் என்னுடைய நன்றி!

பள்ளிக்கு வரக்கூடிய குழந்தைகளுடைய பசியைப் போக்கவேண்டும் என்று முடிவு செய்து உருவாக்கிய திட்டம்தான், இந்தக் காலை உணவுத் திட்டம்!

சென்னையில், ஒரு பள்ளி விழாவிற்குச் சென்றபோது, ஒரு குழந்தை, "இன்னும் காலை உணவு சாப்பிடவில்லை" என்று சொன்னதைக் கேட்டவுடனே, ஒரு பெற்றோருக்கே உரிய பாச உணர்வுடன் நான் உருவாக்கிய திட்டம்தான், இந்தக் காலை உணவுத் திட்டம்!

"அரசாங்கத்திற்கு எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை, ஒரு குழந்தை கூட பசியோட ஸ்கூல்ல தவிக்கக் கூடாது" என்று இந்தத் திட்டத்தைத் தொடங்க உத்தரவிட்டேன்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளில் இந்தத் திட்டத்தைத் தொடங்கினேன். இன்றைக்குப் பெருந்தலைவர் காமராஜரின் பிறந்தநாளில் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தியிருக்கிறேன்.

"அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மட்டும்தானா? எங்களுக்கு இல்லையா?" என்று அரசு உதவி பெறும் பள்ளி மாணவ, மாணவியர் கேட்டார்கள்... அதனால்தான், கிட்டத்தட்ட 18,50,00 அரசுப் பள்ளி மாணவ, மாணவியர் வயிறாரச் சாப்பிடக் காரணமான இந்தத் திட்டத்தை இன்றைக்கு விரிவுபடுத்தியிருக்கிறேன்.

இனிமேல், அரசு உதவி பெறும் பள்ளிகளைச் சேர்ந்த 2,23,000க்கும் அதிகமான மாணவர்கள் காலை உணவு சாப்பிட இருக்கிறார்கள். மொத்தமாகச் சொல்லவேண்டும் என்றால், நாள்தோறும் 2,73,000க்கும் அதிகமான குழந்தைகள் சத்தான – சுவையான காலை உணவைச் சாப்பிடுகிறார்கள்.

புறநானூறு, திருக்குறள், மணிமேகலை என்று நம்முடைய இலக்கியங்கள் மட்டுமில்லை. அவ்வையார், வள்ளலார் போன்ற சான்றோர்களும் பசிப் பிணியைப் போக்குவதைப் பற்றி, உயர்வாக சொல்லியிருக்கிறார்கள்!

சங்க காலத்தைச் சேர்ந்த ஒரு குறுநில மன்னர், ஏழை எளியோருடைய பசியைப் போக்கியதால், 'பசிப்பிணி மருத்துவன்' என்று போற்றப்படுகிறார். பசிப்பிணி போக்கும் பணி – அரசுக்கும் பொருந்தும்! ஏழை, எளிய மாணவர்களுக்கு உணவு அளிப்பது மூலமாக, குழந்தைகளை நலமான, வளமான அறிவுமிக்க சமூகமாக வளர்த்தெடுக்கிறோம்! ஏனென்றால், குழந்தைகள்தான் தமிழ்நாட்டின் எதிர்காலச் சொத்து! அதனால்தான், காலை உணவுத் திட்ட ஒதுக்கீடு பற்றி, அதிகாரிகள் என்னுடன் விவாதித்தபோது, "அதை நிதி ஒதுக்கீடு என்று சொல்லாதீர்கள், வருங்காலத் தலைமுறையை உருவாக்குகிற முதலீடு என்று சொல்லுங்கள்" என்று ஆணித்தரமாகச் சொன்னேன். ஆனால், இந்தத் திட்டம் மாணவ, மாணவியருக்கு தன்னம்பிக்கையை அளிக்கின்றது. பெற்றோர்களுக்கு பொருளாதார சுமையைக் குறைக்கின்றது. பள்ளிகளுக்கு வரும் மாணவர்களுடைய எண்ணிக்கையை அதிகரிக்கின்றது. இடைநிற்றலைக் குறைக்கின்றது!

இதுபோல, ஏராளமான நன்மைகள் காலை உணவுத் திட்டத்தால் விளையுது! சிறிது நாளுக்கு முன்னால், ஒரு பெண் அளித்திருந்த பேட்டியைப் பார்த்தேன்... டிவி-யில் பார்த்தேன், வாட்ஸ் ஆப்-பிலும் பார்த்தேன். அதில், "காலை உணவுத் திட்டம் ஏழை, எளிய குடும்பங்களுக்கு மட்டுமில்லை, பெற்றோர் இரண்டு பேருமே வேலைக்குப் போகின்ற மிடில் கிளாஸ் குடும்பங்களுக்கும் பயனுள்ளதாக இருக்கிறது" என்று பேட்டி கொடுத்திருந்தார்கள்.

இதுபோல, நம்முடைய திராவிட மாடல் அரசு கொண்டு வருகின்ற ஒவ்வொரு திட்டத்தையும், பத்திரிக்கைகள் பாராட்டுகின்றதோ இல்லையோ, பயன்பெறுகிற மக்கள் பாராட்டிக் கொண்டுதான் இருக்கிறார்கள்!

இல்லாத கற்பனைக் கதைகளுக்கு வடிவம் கொடுப்பதையும், ஈரைப் பேனாக்கும் வேலையைச் செய்பவர்களுக்கும் நம்மைப் பாராட்டுவதற்கு மனமில்லை! அதைப்பற்றி நமக்குக் கவலையுமில்லை!

எந்தவொரு சிறு பிரச்சினை நடந்தாலும் – நம்முடைய அரசு உடனடியாக அதைக் கவனத்தில் எடுத்து, அதைத் தீர்த்து வைக்கின்றது! எந்த விவகாரத்திலாவது நம்முடைய அரசு செயல்படாமல் தேங்கி நின்றிருக்கிறதா? இல்லை!

நாள்தோறும் மக்களுக்கான நலத்திட்டங்கள், தமிழ்நாட்டின் எதிர்கால முன்னேற்றத்திற்கு தேவையான செயல்பாடுகள் என்று நாங்கள் தொடர்ந்து செய்துகொண்டு, இயங்கிக்கொண்டு தான் இருக்கிறோம். பொய்ச் செய்திகள் மூலம் ஒரு சில கருத்துருவாக்கங்களை உருவாக்கி, அதில் குளிர் காயலாம் என்று நினைக்கின்ற அந்த மக்கள் விரோத சக்திகளுடைய அஜெண்டா எந்தக் காலத்திலும் நடக்காது. ஏனென்றால், ஒவ்வொரு குடும்பமும் பயன்பெறக்கூடிய வகையில் மக்கள் நலத் திட்டங்களைப் பார்த்துப் பார்த்துச் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறோம்!

குறிப்பாக, இந்தக் காலை உணவுத் திட்டம் நம்முடைய திராவிட மாடல் அரசுக்கு நீடித்த புகழைத் தேடித் தந்திருக்கிறது!

நாம் தொடங்கிய பின்பு, இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில், ஏன் கனடா போன்ற நாடுகளிலும் தொடங்கப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் அமைச்சர்களையும், அதிகாரிகளையும், சட்டமன்ற உறுப்பினர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, “எந்த ஊரிலும் – எந்த ஸ்கூலிலும் – உணவின் தரம் ஒரு துளிகூட குறையக் கூடாது!

உங்கள் குழந்தைகள் சாப்பிடுகிற சாப்பாட்டை எப்படிக் கவனமாகப் பார்த்துக் கொள்வீர்களோ அதுபோல, அரசுப் பள்ளி, அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்களுடைய சாப்பாட்டையும் கவனமாக ‘ஸ்பெஷல் கேர்’ எடுத்துப் பாருங்கள். நான் ஆய்வுக்கு வெளியூர் போகும் போதெல்லாம்,

மாணவச் செல்வங்களின் பசிபோக்கிய மனநிறைவு அடைந்தேன்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், திருவள்ளூர் மாவட்டம், கீழச்சேரி, அரசு உதவிபெறும் புனித அன்னாள் தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற விழாவில்,பெருந்தலைவர்காமராசர்அவர்களின் பிறந்த நாளான 15.07.2024 அன்று உலகிற்கே முன்னோடியான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை ஊரகப் பகுதிகளிலுள்ள அனைத்து அரசு உதவிபெறும் பள்ளிகளிலும் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் 2,23,536 மாணவ, மாணவியர்களுக்கு விரிவுபடுத்தித் தொடங்கி வைத்தது தொடர்பாக வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு.

“முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்” விரிவாக்கம் செய்யப்பட்டவுடன் தமிழ்நாடு முழுக்க எத்தனை குழந்தைகளுக்கு உணவளிக்கப்பட்டது என்பதை முதலமைச்சரின் தகவல் பலகை (CM Dash Board) வழியாகக் கண்காணித்து, மாணவச் செல்வங்களின் பசி போக்கிய மனநிறைவு அடைந்தேன்!

– ஊரகப் பகுதிகளுக்கு முதலமைச்சரின்
காலை உணவுத் திட்டத்தை விரிவுபடுத்தித்
தொடங்கி வைத்தது தொடர்பாக
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு – 15.07.2024

ஏதாவது ஒரு ஸ்கூலுக்கு திடீர் என்று போகிறேன். அங்கே இருக்கின்ற பிள்ளைகளுடன் பேசுகிறேன். காலை உணவு எப்படி இருக்கும் என்று பார்க்கிறேன். அந்த உணவை நானே சாப்பிட்டும் பார்க்கிறேன். மாண்புமிகு அமைச்சர் தம்பி உதயநிதிகூட சுற்றுப்பயணம் போகிறபோது, நிகழ்ச்சிக்குப் போகிறபோது இதுபோல ஆய்வு செய்வதைப் பார்க்கிறேன். மற்ற அமைச்சர்களும், மக்கள் பிரதிநிதிகளும் மாவட்ட ஆட்சியர்களும், அதிகாரிகளும் அவரவர்கள் பகுதிகளில் இருக்கின்ற பள்ளியில் இப்படித் திடீர், திடீரென்று ஆய்வுகளை மேற்கொள்ளவேண்டும் என்று மிகவும் பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

திராவிட மாடல் அரசையும், என்னையும் பொருத்தவரைக்கும் நம்முடைய தமிழ்நாட்டுப் பசங்க படிப்பதற்கு எதுவும் தடையாக இருக்கக் கூடாது என்று நினைக்கிறோம். அது பசியாக இருந்தாலும் சரி, நீட் தேர்வாக இருந்தாலும் சரி, ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கையாக இருந்தாலும் சரி, எந்தத் தடை வந்தாலும் அந்தத் தடைகளை உடைப்பதுதான் எங்களுடைய முதல் பணி!

நீட் தேர்வை நாம் எதிர்க்கத் தொடங்கியபோது ஏன் எதிர்க்கிறீர்கள் என்று சிலர் எதிர்கேள்வியைக் கேட்டார்கள். ஆனால், இன்றைக்கு நீட் தேர்வில் நடக்கின்ற முறைகேடுகளைப் பார்த்து, மாண்பமை உச்சநீதிமன்றம் கேள்வி கேட்கின்றது. மாணவர் சமுதாயம் போர்க்கொடி தூக்குகின்றது. பல முதலமைச்சர்கள், தேசியத் தலைவர்கள் நீட் வேண்டாம் என்று குரல் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள். ஏன்? ஒட்டுமொத்த இந்தியாவும் தமிழ்நாட்டு வழியில், நீட் தேர்வை எதிர்க்கின்றது!

ஒன்றிய பா.ஜ.க. அரசு அரசியலுக்காக இப்போது, நெருக்கடி நிலையைப் பற்றி நாடாளுமன்றத்தில் தொடர்ந்து பேசுகிறார்கள். ஆனால், நாம் அவர்களிடம் கேட்கின்ற கேள்வி நெருக்கடி நிலை காலத்தில், ஒத்திசைவுப் பட்டியலுக்கு மாற்றப்பட்ட கல்வியை உடனடியாக மாநிலப் பட்டியலுக்கு மாற்ற ஒன்றிய அரசு தயாராக இருக்கிறதா? இந்த ஆக்கப்பூர்வமான செயலை அவர்கள் செய்வார்களா?

நம்மைப் பொறுத்தவரை, நீட் தேர்வு – புதிய கல்விக் கொள்கை தேவையற்றது. அதை எதிர்க்கிறோம். ஒருபக்கம் அரசியல், சட்டப் போராட்டங்களை நடத்துகிறோம். இன்னொரு பக்கம் மாணவர்களின் நலனுக்காகப் பள்ளிக்கல்விக்கும், கல்லூரிகளுக்கும், உயர்கல்விக்கும் ஏராளமான திட்டங்களைத் தீட்டுகிறோம். எனவே, தடைகளை நாங்கள் உடைக்கிறோம். மாணவர்கள் கல்வியில் மட்டும் கவனம் செலுத்துங்கள். ஏனென்றால், நான் திரும்பவும் சொல்கிறேன், கல்விதான் யாராலும் திருட முடியாத சொத்து, அந்தச் சொத்தைத் தமிழ்நாட்டு மாணவர்கள் பெற்றாக வேண்டும்.

மாணவச் செல்வங்களே! "படிங்க... படிங்க... படிங்க... நீங்கள் உயர படிங்க.. நீங்கள் உயர... உங்கள் வீடும் உயரும்! இந்த நாடும் உயரும்!" என்று உங்களையெல்லாம் மனதார வாழ்த்தி விடைபெறுகிறேன்.

இளைய சமுதாயமானது கல்வி, தனித்திறமை, விளையாட்டிலும் சிறந்து வளர்ந்து மாபெரும் சக்தியாகத் திகழவேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் 748 மாணவ, மாணவியர்களுக்குக் கல்விக் கட்டணம் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை - 31.07.2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 31.07.2024 அன்று சென்னை, கொளத்தூர், அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் 748 மாணவ, மாணவியர்களுக்குக் கல்விக் கட்டணம், கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப் பைகளையும், 3 உதவிப் பேராசிரியர்கள், ஒரு உடற்கல்வி இயக்குநர், ஒரு கண்காணிப்பாளர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகளையும், கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் உதவிகள் கோரி மனுக்கள் அளித்த 147 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் பயிற்சி முடித்த மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினிகள், தையல் இயந்திரங்கள், மூக்குக் கண்ணாடிகளையும் வழங்கினார். மேலும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் கொளத்தூரில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் இரத்தச் சுத்திகரிப்பு (Dialysis) மற்றும் மறுவாழ்வு மையம், பகிர்ந்த பணியிடத்திற்கான கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்குக் கல்விக் கட்டணம், கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப் பைகளையும், பணி நியமன ஆணைகளையும் வழங்குதல்

இந்து சமய அறநிலையத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்கள் வழிபாட்டுத் தலங்களாக மட்டுமல்லாமல் சமூக நோக்கோடு செயல்படும் அறநிலையங்களாகவும் செயல்பட்டு வருகின்றன. அந்த வகையில் திருக்கோயில்களின் சார்பில் 25 பள்ளிகளும், 10 கல்லூரிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் 22,247 மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 02.11.2021 அன்று சென்னை, கொளத்தூரில் அருள்மிகு கபாலீசுவரர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கி வைக்கப்பட்டது. இக்கல்லூரியில் B.Com., B.B.A., B.C.A., B.Sc. (Computer Science), B.A., (சைவ சித்தாந்தம்) ஆகிய 5 பாடப் பிரிவுகள் பயிற்றுவிக்கப்படுகிறது. இக்கல்லூரி தொடங்கப்பட்ட 2021ஆம் ஆண்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 240 மாணவ, மாணவியர்களுக்கு கல்வி கட்டணம் ரூ.10,000, கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப் பைகளை மாணவ, மாணவியர்களுக்கு வழங்கினார். அதனைத் தொடர்ந்து, 2022ஆம் ஆண்டில் 480 மாணவ, மாணவியர்களுக்கும், 2023ஆம் ஆண்டில் 685 மாணவ, மாணவியர்களுக்கும் கல்விக் கட்டணம், கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப் பைகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.

அதன் தொடர்ச்சியாக, நான்காம் ஆண்டாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இக்கல்லூரியில் பயிலும் 748 மாணவ, மாணவியர்களுக்குக் கல்விக் கட்டணம் ரூ.10,000, கல்வி உபகரணங்களுடன் கூடிய புத்தகப் பைகளையும், இக்கல்லூரிக்குத் தொகுப்பூதியத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள 3 உதவிப் பேராசிரியர்கள், ஒரு உடற்கல்வி இயக்குநர், ஒரு கண்காணிப்பாளர் பணியிடத்திற்கான பணி நியமன ஆணைகளையும் வழங்கினார்.

அனிதா அச்சீவர்ஸ் அகாடமி மாணவ, மாணவியர்களுக்கு உதவிகள் வழங்குதல்

பெரியார் நகர் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் பயின்ற 355 மாணவ, மாணவியர்களுக்குத் தையல் இயந்திரங்கள், 125 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள், 1,000 பயனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடிகள் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

திரு.வி.க.நகர் மண்டலம், ஜவஹர் நகரில் அமைந்துள்ள கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பள்ளி மாணவ, மாணவியர்களுக்குக் கல்வி உதவித் தொகை, பயனாளிகளுக்கு மருத்துவ உதவித் தொகை, திருமண உதவித் தொகை, அரவை இயந்திரங்கள், மூன்று சக்கர வண்டிகள்,

காது கேட்கும் கருவிகள் என மொத்தம் 147 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

கொளத்தூரில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு (Dialysis) மற்றும் மறுவாழ்வு மையம், பகிர்ந்த பணியிடம் கட்டுமானப் பணிகளைப் பார்வையிடுதல்

இரத்த சுத்திகரிப்பு (Dialysis) மற்றும் மறுவாழ்வு மையம்

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், கொளத்தூர், ஜெகந்நாதன் தெருவில், ரூ.17.50 கோடி மதிப்பீட்டில் அடித்தளம், நான்கு தளங்களுடன் கட்டப்பட்டு வரும் இரத்த சுத்திகரிப்பு, மறுவாழ்வு மையக் கட்டுமானப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த மறுவாழ்வு மையக் கட்டடத்தின் தரைத்தளத்தில் நியாயவிலைக் கடைகள், இரு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம், மின்தூக்கி மற்றும் வரவேற்பு அறையும், முதல் தளத்தில் 5 ஆலோசனை அறைகள், மருந்தகம், நோயாளிகளுக்கான காத்திருப்புப் பகுதி, நிர்வாகப் பகுதியும், இரண்டாவது தளத்தில் இயன்முறை மருத்துவம் (பிசியோதெரபி), உடற்பயிற்சிக் கூடம், அல்ட்ராசவுண்ட் மெழுகு சிகிச்சை, 3 எலக்ட்ரோதெரபி அறைகள் உள்ளிட்ட உடற் சிகிச்சைக்கான வசதிகள், நடமாடும் எக்ஸ்ரே வசதியும், மூன்றாம் தளத்தில் டயாலிசிஸ் சிகிச்சைக்கான அத்தியாவசிய வசதிகள், தனிமைப்படுத்தப்பட்ட நோயாளிகளுக்கான 2 தனிப் படுக்கைகள், நோயாளிகளின் சிகிச்சைக்காக 11 படுக்கைகளும், நான்காவது தளத்தில் செயற்கை மூட்டு மையம், நோயாளிகளுக்கு பிரத்யேக செயற்கை உறுப்புகள் பொருத்தும் இடம் ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டு வருகிறது.

பகிர்ந்த பணியிடம்

அதனைத் தொடர்ந்து, கொளத்தூர், ஜெகந்நாதன் தெருவில் பெருநகரச் சென்னை மாநகராட்சியால் கட்டப்பட்டு வரும் பன்னோக்கு மையத்தில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமமும் இணைந்து ரூ.2.50 கோடி மதிப்பீட்டில்

அடித்தளம் மற்றும் முதல் தளத்துடன் கட்டப்பட்டு வரும் பகிர்ந்த பணியிடத்திற்கான (Co-working Space) கட்டுமானப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இப்புதிய பகிர்ந்த பணியிடத்தில் 90 இருக்கைகள் கொண்ட நவீனபணியிடம், கூட்டரங்கம், பணியாளர் கலந்துரையாடல் அறைகள், நவீனத் தொழில்நுட்பத்துடன் கூடிய ஆலோசனைக் கூடம், உணவு அருந்தும் இடம், ஓய்வறை, வை-பை, இணைய வசதி, உடைமைகளை வைப்பதற்கான பாதுகாப்பு வசதிகள், அச்சு, ஸ்கேனிங் வசதிகள் போன்ற வசதிகளுடன் கட்டப்பட்டு வருகின்றன.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை:

அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

தமிழ்நாடு முழுக்க நான் சுற்றிக் கொண்டிருந்தாலும், கொளத்தூருக்கு வருகின்றபோது என்னையே அறியாமல் ஒரு உற்சாகம், ஒரு ஊக்கம், ஒரு எழுச்சி ஏற்படுகின்றது. அதுவும் கொளத்தூரில் இருக்கக் கூடிய மாணவச் செல்வங்களைப் பார்க்க வருகின்றபோது அதைவிட அதிகமான அளவிற்கு மகிழ்ச்சியும், எழுச்சியும் ஏற்படுகின்றது.

அதனால்தான், எவ்வளவு வேலைகள் இருந்தாலும், முடிந்த அளவுக்குப் பத்து நாளுக்கு ஒரு முறையோ; வாரத்துக்கு ஒரு முறையோ கொளத்தூருக்கு நான் வந்து விடுகிறேன். கொளத்தூருக்கு வந்தாலே ஒரு புத்துணர்ச்சி எனக்கு ஏற்படுகிறது!

எனக்காகக் கொளத்தூரைப் பாதுக்காக்கக் கூடியவராக என்னுடைய சார்பில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் சேகர்பாபு அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்.

கொளத்தூர் தொகுதியைப் பொருத்தவரைக்கும், நம்முடைய பணிகளால் ஒரு முன்மாதிரி தொகுதியாக இதை மாற்றிக் கொண்டிருக்கிறோம். இப்படி சொல்வதினால் எனக்கு ஏதோ ஒரு சுயநலம் (selfish) என்று நீங்கள் நினைத்துவிடக் கூடாது. தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய 234 தொகுதிகளும் என்னுடைய தொகுதிகள்தான். அது ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க் கட்சியாக இருந்தாலும் சரி, கூட்டணிக் கட்சியாக இருந்தாலும் சரி, தோழமைக் கட்சியாக இருந்தாலும் சரி, அனைத்துத் தொகுதிகளிலும் ஒரே கண்ணோட்டத்தோடு தான் நான் பார்த்துக் கொண்டு இருக்கிறேன். அந்த அடிப்படையில்தான், இந்தக் கொளத்தூர் தொகுதியில்,

- ★ புதிய வட்டாட்சியர் அலுவலகம்,
- ★ புதிய காவல் துணை ஆணையாளர் அலுவலகம்,
- ★ புதிய காவல் நிலையம்,
- ★ புதிய தீயணைப்பு நிலையம்,
- ★ புதிய சார்பதிவாளர் அலுவலகம்

ஆகியவை விரைவில் அமைய இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடுநான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுவும் கொளத்தூர் தொகுதிக்கு மட்டும் இல்லை; தமிழ்நாட்டின் பல தொகுதிகளுக்கு வர இருக்கிறது.

ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும், தங்களுடைய தொகுதிக்குத் தேவையான பத்துத் திட்டங்களைக் கொடுக்க வேண்டும் என்று நான் சட்டமன்றத்தில் அறிவித்தேன். அது ஆளுங்கட்சி மட்டுமல்ல; எதிர்க்கட்சி மட்டுமல்ல; (234) தொகுதிகளில் இருக்கக் கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் உங்கள் தொகுதிக்கு முதற்கட்டமாக 10 திட்டங்களைக் கொடுங்கள். அந்தப் 10 திட்டங்களில் எதை உடனடியாக நிறைவேற்ற முடியுமோ இந்த ஆண்டிற்குள் நிறைவேற்றித் தருகிறோம் என்று சொல்லி, அதை அறிவித்து, அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கி அந்தப் பணியை செய்து கொண்டிருக்கிறோம். இந்தியாவில் எந்த மாநிலங்களிலும் கிடையாது. நம்முடைய மாநிலத்தில் மட்டும்தான். நம்முடைய கழக ஆட்சியில்தான், நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில்தான்.

எந்த விருப்பு, வெறுப்பும் இல்லாமல் எதிர்க்கட்சியினர் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதிகளுக்கு முக்கியத்துவம் தந்து, திட்டங்களை எல்லாம் நாம் வரிசைப்படுத்தி, முறைப்படுத்தி, விரைவுப்படுத்திச் செயல்படுத்திக் கொண்டிருக்கக்கூடிய ஆட்சி தான் நம்முடைய திராவிட மாடல் ஆட்சி!

நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். சட்டமன்றத் தேர்தல் முடிந்து ஆட்சிப் பொறுப்பேற்ற நேரத்தில் அந்த வெற்றியை நம்முடைய தலைவருடைய நினைவிடத்திற்குச் சென்று நான் மாலை வைத்து, மரியாதை செய்தேன். அப்போது பத்திரிகை நிருபர்கள் என்னிடத்தில் கேட்ட கேள்விக்குப் பதிலளித்துக் கொண்டிருந்தபோது இடையில் ஒரு கேள்வி. அந்தக் கேள்விக்கு நான் பதில் சொன்னேன். இந்த ஆட்சி, எங்களுக்கு ஓட்டுப் போட்ட மக்களுக்காக மட்டுமல்ல; ஓட்டுப் போட தவறியவர்களுக்கும் சேர்த்து, அதாவது ஓட்டுப் போட்டவர்கள் மகிழ்ச்சியடைய வேண்டும். ஓட்டுப் போடாதவர்கள் ஐய்யய்யோ இப்படிப்பட்ட ஆட்சிக்கு போடாமல் விட்டுவிட்டோமே என்று வருத்தப்படக்கூடிய அளவிற்கு எங்கள் ஆட்சி இருக்கும் என்று அன்றைக்கு சொன்னேன். அதுதான் இப்போது நடந்து கொண்டிருக்கிறது.

பல்வேறு திட்டங்கள் அதில் குறிப்பாக, நம்முடைய பெருமதிப்பிற்குரிய அய்யா பொன்னம்பல அடிகளார் வந்தவுடனே சொன்னார்கள். இதுவரைக்கும் அறநிலையத் துறையில் இப்படி ஒரு அமைச்சர் இருந்து பணியாற்றியதை நான் பார்த்ததே கிடையாது என்று என்னிடம் பெருமையாகச் சொன்னார்.

அந்த அளவிற்கு, தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில், அதில் அமைச்சராக இருக்கக்கூடிய சேகர் பாபு அவர்கள், அவருடன் துணையாக இருக்கக்கூடிய அதிகாரிகள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டு வருகிறார்கள். அதையெல்லாம் இப்போது பட்டியலிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், நேரம் போதாது. இந்த நிகழ்ச்சி முழுக்க அது பற்றியேதான் பேசிக் கொண்டு இருக்க வேண்டும். இன்னும் பல நிகழ்ச்சிகளுக்கு நான் செல்ல வேண்டியிருக்கிறது. அதனால், ஹைலைட்டான சில திட்டங்களைத் தலைப்புச் செய்திகளாக மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்.

இதுவரைக்கும் 1,921 திருக்கோயில்களில் குடமுழுக்கு நடத்தி இருக்கக்கூடிய ஆட்சிதான் இந்தத் திராவிட மாடல் ஆட்சி. ரூ.6,147 கோடி மதிப்பிலான கோவில் சொத்துக்களை மீட்டிருக்கிறோம். கோயில்கள் சார்பில் 10 கல்லூரிகளை உருவாக்கி வருகிறோம். அதில் ஒரு கல்லூரிதான் மயிலை அருள்மிகு கபாலீஸ்வரர் கல்லூரி என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்!

இறைப்பணியோடு சேர்த்துக் கல்விப் பணியையும் அறநிலையத்துறை செய்கிறது. அறநிலையத் துறையாக மட்டுமல்லாமல் இது அறிவுத் துறையாகவும் செயல்பட்டுக் கொண்டு வருகிறது.

இந்த நிகழ்ச்சியில், 748 மாணவ – மாணவியர்களுக்கு கல்விக் கட்டணமும், கல்விக்குத் தேவையான கருவிகளையும் வழங்கியிருக்கிறோம். உங்களுக்கு மட்டுமில்லை, கடந்த 2021ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2ஆம் நாள் இந்தக் கல்லூரியைத் திறந்து வைத்ததிலிருந்து, கடந்த மூன்று ஆண்டுகளில் 1,405 மாணவ – மாணவிகளுக்கும் இதேபோல கல்விக் கட்டணம், கருவிகளை வழங்கியிருக்கிறோம்.

சாதி, மதம், பொருளாதாரம், சமுதாயச் சூழல் என்று, இது எதுவுமே ஒருவர் கல்விக்குத் தடையாக இருக்கக் கூடாது. இதுதான் என்னுடைய எண்ணம். கல்விதான் உங்களிடமிருந்து யாரும் திருட முடியாத சொத்து. இதைத்தான் நான் தொடர்ந்து மாணவர்களிடம் சொல்லிக் கொண்டு வருகிறேன்.

'படிப்பு - படிப்பு – படிப்பு' இது மட்டும்தான் உங்கள் கவனத்தில் இருக்கவேண்டும். அதற்காகத்தான் எண்ணற்ற திட்டங்களை நம்முடைய திராவிட மாடல் அரசு தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. முக்கியமாக, இதுவரைக்கும், அரசுப் பள்ளியில் படித்து, உயர்கல்விக்கு வரக்கூடிய மாணவியருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப்பெண் திட்டம். அந்தத் திட்டத்தின்கீழ் 2 இலட்சத்து 73 ஆயிரம் மாணவிகள் பயன்பெற்று வருகிறார்கள்.

அடுத்து, இதுபோல மாணவர்களுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கும் 'தமிழ்ப்புதல்வன்' திட்டத்தை வருகிற ஆகஸ்ட் 9ஆம் நாள் கோவையில் நான் தொடங்கி வைக்கப் போகிறேன்.

படிப்புடன் சேர்த்துப் பல்வேறு தனித்திறமைகளையும் தமிழ்நாட்டு மாணவர் சமுதாயம் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில்தான் 'நான் முதல்வன்' திட்டம் தொடங்கப்பட்டிருக்கிறது.

நம்முடைய திராவிட மாடல் அரசு ஏற்படுத்தித் தருகின்ற வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொண்டு தமிழ்நாட்டு மாணவர்கள் முன்னேற வேண்டும். பேச்சுத் திறமை, எழுத்துத் திறமை, படைப்புத் திறமை, நிர்வாக ஆற்றல், அறிவியல்பூர்வமான சிந்தனை, புதிய கண்டுபிடிப்பு என மாணவச் சமுதாயம் வளரவேண்டும். பட்டங்களோடு சேர்த்து அனைத்துத் திறமைகளும் கொண்டவர்களாக நீங்கள் வளரவேண்டும்!

அண்மையில் டாக்டர் குழுமத்தின் தலைவர் மரியாதைக்குரிய சந்திரசேகர் அவர்கள், ஒரு பேட்டியில் குறிப்பிட்டுக் காட்டினார். உடல்நலத்தைப் பற்றி அக்கறையோடு அவர் பேசியிருக்கிறார். மாணவர்கள், இளைஞர்கள் இடையே obesity எனப்படும் உடல் எடை கூடி வருவதாகச் சொல்லியிருக்கிறார். சாப்பாட்டு பழக்க வழக்கங்கள், துரித உணவுகள்தான் இதற்குக் காரணம் என்று அவர் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்.

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும்! எனவே, உடல் ஆரோக்கியமாக இருந்தால்தான் படிக்க முடியும்; திறமைகளை வளர்த்துக் கொள்ளமுடியும். அந்த வகையில்தான், மாணவர்களும், இளைஞர்களும் விளையாட்டு, உடற்பயிற்சி ஆகியவற்றிலும் கவனம் செலுத்த வேண்டும்.

தமிழ்நாட்டு இளைய சமுதாயமானது கல்வியிலும், தனித்திறமைகளிலும், விளையாட்டிலும், உடல் நலத்திலும் சிறந்தவர்களாக வளர்ந்து, மாபெரும் சக்தியாகத் திகழ வேண்டும் என்று கேட்டு, இந்தச் சிறப்பான நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மகிழ்ச்சியடைந்து, உங்களை வாழ்த்தி விடைபெறுகிறேன்.

“மக்களுடன் முதல்வர்” திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து நாகப்பட்டினம், வேலூர், திருப்பூர், தூத்துக்குடி, மதுரை மாவட்டப் பொதுமக்களுடன் கலந்துரையாடல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 27.07.2024 அன்று தலைமைச் செயலகத்தில், “மக்களுடன் முதல்வர்” திட்டத்தின்கீழ் நடைபெற்றுவரும் பணிகள் குறித்து ஆய்வுக்கூட்டம் மேற்கொண்டதோடு, காணொலி வாயிலாக நாகப்பட்டினம், வேலூர், திருப்பூர், தூத்துக்குடி, மதுரை மாவட்ட ஆட்சியர்கள், பொதுமக்களுடன் கலந்துரையாடி முகாம் ஏற்பாடுகள் குறித்தும், பெறப்பட்ட மனுக்களின் விவரங்கள், வழங்கப்பட்ட நலத்திட்ட உதவிகள் குறித்து பயனாளிகளிடமும் கேட்டறிந்தார்.

அரசு துறைகளைத் தொடர்பு கொள்ளும் பொதுமக்களுக்கு அரசு அலுவலர்கள் வழங்கும் சேவைகளை மேலும் செம்மைப்படுத்தி, வெளிப்படைத் தன்மையினை அதிகரித்து அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும் சென்று சேரும் வகையில் “மக்களுடன் முதல்வர்” என்ற புதிய திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடிக் கண்காணிப்பில் முதல்வரின் முகவரித்துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முதற்கட்டமாக, பொதுமக்கள் அதிகமாகப் பயன்பெறும் 13 அரசுத் துறைகள் சார்ந்த கோரிக்கைகள் அடையாளம் காணப்பட்டுச் சம்பந்தப்பட்ட துறைகள் அனைத்தும் ஒருங்கிணைத்து ஒரே குடையின்கீழ்க் கோரிக்கைகளைப் பெறும் வண்ணம் அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், நகர்புறங்களை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் “மக்களுடன் முதல்வர்” திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 18.12.2023 அன்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டு,

பயனுள்ள திட்டம் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பயனாளிகள் நன்றி...

பின்னர் அனைத்து மாவட்டங்களிலும் டிசம்பர், ஜனவரி மாதங்களில் சுமார் 2,058 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் பெறப்பட்ட அனைத்து மனுக்களும் விரைவாக பரிசீலிக்கப்பட்டு உரிய பயன்கள் முறையாக பயனாளிகளுக்குச் சென்று சேர்ந்துள்ளது. மேற்கண்ட முகாம்கள் வாயிலாக மொத்தம் 8.75 இலட்சம் மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

நகரப்பகுதிகளில் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின்கீழ் பொதுமக்கள் பெருமளவில் பயன் பெற்றதைத் தொடர்ந்து, ஊரகப்பகுதிகளிலும் "மக்களுடன் முதல்வர்" திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 11.07.2024 அன்று தருமபுரி மாவட்டம், பாளையம்புதூர் ஊராட்சியில் தொடங்கி வைக்கப்பட்டது. அனைத்து மாவட்டங்களில் உள்ள ஊரகப்பகுதிகளில் 2,341 முகாம்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டு, தற்போது வரை 861 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

ஊரகப் பகுதிகளில் மக்கள் பயன்பெறும் வகையில் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் கீழ்ப் பொதுமக்கள் அதிகளவில் அணுகும் அரசுத் துறைகளான, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை, எரிசக்தித் துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, காவல் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, வேளாண்மை-உழவர் நலத்துறை, கால்நடைப் பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, கூட்டுறவுத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை ஆகிய 15 துறைகள் சார்ந்த கோரிக்கைகள் சிறப்பு முகாம்கள் மூலம் பெறப்பட்டுத் தீர்வு காணப்பட்டு வருகின்றன.

"மக்களுடன் முதல்வர்" திட்டத்தின்கீழ் நடைபெற்றுவரும் பணிகள் குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆய்வுக்கூட்டம் மேற்கொண்டார். அதனைத் தொடர்ந்து காணொலி வாயிலாக நாகப்பட்டினம், வேலூர், திருப்பூர், தூத்துக்குடி, மதுரை மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் பொதுமக்களுடன் கலந்துரையாடி முகாம் ஏற்பாடுகள் குறித்துக் கேட்டறிந்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "மக்களுடன் முதல்வர்" திட்ட முகாம்களின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் கேட்டறிந்த விவரங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன், முகாமிற்கு மக்களுடைய வரவேற்பு எப்படி இருக்கிறது

என்றும், முகாமிற்கு வருகை தந்துள்ள பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, கழிப்பறை வசதி போன்ற வசதிகள் செய்து தரப்பட்டுள்ளதா என்றும், எத்தனை முகாம்கள் நடைபெற்றுள்ளன என்றும், இதுவரை நடைபெற்ற முகாம்களில் பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை குறித்தும், சராசரியாக ஒரு நாளைக்கு எத்தனை மனுக்கள் பெறப்படுகிறது என்பது குறித்தும், அதிகமாக எந்தெந்தத் துறைகளின் கோரிக்கைகள் தொடர்பாக மனுக்கள் பெறப்படுகின்றன, முகாம்களில் எத்தனை கவுன்ட்டர்கள், கனிணிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன போன்ற விவரங்களைக் கேட்டறிந்தார். "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் சிறப்பு முகாம்கள் நடைபெறுவது குறித்து பொதுமக்களுக்கு விளம்பரம் மூலம் எவ்வாறு தெரிவிக்கப்பட்டது என்பது குறித்தும், முகாம்கள் காலை எத்தனை மணிக்குத் தொடங்கப்படுகிறது என்பது குறித்தும் கேட்டறிந்தார்.

"மக்களுடன் முதல்வர்" திட்டச் செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அளித்த விளக்கம்

திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கிறிஸ்துராஜ், இ.ஆ.ப., அவர்கள், பொதுமக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளதாகவும், முகாம் ஒன்றிற்குச் சராசரியாக 900 மனுக்கள் பெறப்பட்டு வருகின்றன என்றும் தெரிவித்தார். மேலும், திருப்பூர் மாவட்டத்தில் 77 முகாம்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டு, 19 முகாம்கள் இதுவரை நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ப. ஆகாஷ், இ.ஆ.ப., அவர்கள், 19 கவுன்ட்டர்கள் கணிணி வசதியுடன் ஏற்பாடு செய்யப்பட்டு மனுக்கள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன என்றும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் 54 முகாம்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டு, 18 முகாம்கள் இதுவரை நடத்தப்பட்டு, 7,400க்கும் மேற்பட்ட மனுக்கள் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். நாளொன்றுக்குச் சராசரியாக 400 முதல் 450 மனுக்கள் பெறப்பட்டு வருவதாகவும், இதில் வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித்தொகை, மின்சார இணைப்பு பெயர் மாற்றம், மருத்துவ காப்பீட்டு அட்டை போன்றவற்றைக் கோரி அதிகமாக மனுக்கள் வருவதாகவும் தெரிவித்தார்.

மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. எம்.எஸ். சங்கீதா, இ.ஆ.ப., அவர்கள், முகாம்கள் காலை 9 மணிக்குத் தொடங்கப்பட்டதாகவும், மதுரை மாவட்டத்தில் 73 முகாம்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டு, 15 முகாம்கள் இதுவரை நடத்தப்பட்டு, 6,700 மனுக்கள் பெறப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வி.ஆர்.சுப்புலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள், வேலூர் மாவட்டத்தில் 49 முகாம்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டு, 27 முகாம்கள் இதுவரை நடத்தப்பட்டு, 21,654 மனுக்கள் பெறப்பட்டுள்ளன என்று தெரிவித்தார். மேலும், நாளொன்றுக்குச் சராசரியாக 800 முதல் 900 மனுக்கள் பெறப்பட்டு வருவதாகவும், மனுக்கள் அளிக்க வருகை தரும் பொதுமக்களுக்குத் தேநீர், பிஸ்கட்டுகள் வழங்கப்பட்டு வருகின்றன என்றும், அவர்களுக்குத் தேவையான குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார். மேலும், குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல்,

கேட்டறிந்தார். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இத்திட்டம் குறித்துப் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் கிராமம் கிராமமாக சென்று ஆட்டோக்களில் ஒலிபெருக்கி மூலமாக விளம்பரம் செய்யப்பட்டதாகவும், முகாம் நடைபெறும் விவரம் குறித்துச் சுவரொட்டிகள் மூலமாகவும் விளம்பரம் செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார். மேலும், முகாம்களில் பொதுமக்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

நீக்கம், முதியோர் உதவித்தொகை, மின்சார இணைப்பு பெயர், பட்டா மாறுதல் போன்றவற்றைக் கோரி அதிகமாக மனுக்கள் வருவதாகவும் தெரிவித்தார்.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஜி.லட்சுமிபதி, இ.ஆ.ப, அவர்கள், தூத்துக்குடி மாவட்டத்தில் 72 முகாம்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டு, 32 முகாம்கள் இதுவரை நடத்தப்பட்டு, 26,468 மனுக்கள் பெறப்பட்டுள்ளன என்று தெரிவித்தார். நாளொன்றுக்குச் சராசரியாக 800 மனுக்கள் பெறப்பட்டு வருவதாகவும், இதில் இலவச வீட்டுமனைப் பட்டா, மனை உட்பிரிவு பெயர் மாற்றம், சாதிச் சான்றிதழ், வருவாய் சான்றிதழ் கோரியும், மின்சார இணைப்பு பெயர் மாற்றம் போன்றவற்றைக் கோரி அதிகமாக மனுக்கள் வருவதாகவும் தெரிவித்தார்.

"மக்களுடன் முதல்வர்" திட்டச் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு அமைச்சர் திரு. மூர்த்தி அவர்கள், நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் விளக்கம்

மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற முகாமில் கலந்து கொண்ட மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் திரு. பி. மூர்த்தி அவர்களிடம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் முகாம் குறித்து மக்களிடம் விளம்பரப்படுத்தப்பட்ட விவரங்கள் குறித்தும், முகாம்களில் மக்களுக்குச் செய்து தரப்பட்டுள்ள வசதிகள் குறித்தும்

நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜெ.முகம்மது ஷாநவாஸ் அவர்கள் பேசும் போது, "மக்களுடன் முதல்வர்" திட்டமானது ஒரு மகத்தான திட்டம் என்றும், கோரிக்கைகள் விரைந்து நிறைவேறுவதால் இந்த முகாம்களில் மக்கள் ஆர்வமாகக் கலந்து கொள்வதாகவும், தமிழ்நாடு இந்தியாவிற்கே முன்னோடியாக பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி, நிர்வாகப் புரட்சி செய்து வருவதாகவும், அரசு அலுவலகங்களை நாடி மக்கள் சென்ற காலம் போய், மக்களைத் தேடி அரசு அலுவலர்கள் வருகை தந்து, மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது என்றும் தெரிவித்தார். மேலும், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதியில் நீண்ட நாட்களாகத் தீர்க்கப்படாமல் உள்ள பத்து முக்கியமான கோரிக்கைகளை முன்னுரிமைப்படுத்திப் பட்டியல் அனுப்பிட கேட்டுக் கொண்ட கோரிக்கையில், தான் அனுப்பிய 5 கோரிக்கைகளை நிறைவேற்றியதற்காக நன்றி தெரிவித்துக் கொண்டார்.

"மக்களுடன் முதல்வர்" திட்ட முகாம்களுக்கு வருகை தந்த பொதுமக்களிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்துரையாடிய விவரங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முகாம்களுக்கு வருகை தந்த பொதுமக்களிடம் கலந்துரையாடினார். அப்போது திருப்பூர்

மாவட்டத்திலிருந்து திரு. சந்திரன் அவர்கள், மின்சார இணைப்புப் பெயர் மாற்றத்திற்காகக் காலை 9 மணிக்கு வந்து மனு அளித்ததாகவும், சிறிது நேரத்திலே பெயர் மாற்றம் செய்து அதற்கான உத்தரவினை வழங்கி விட்டதாகவும், மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளதாகவும் தெரிவித்தார். காங்கேயத்தைச் சேர்ந்த திருமதி பரிமளா அவர்கள், தையல் இயந்திரம் கோரி மனு அளித்ததாகவும், உடனடியாகத் தையல் இயந்திரம் வழங்கப்பட்டதாகவும், அதற்காகத் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி ராஜலெஷ்மி அவர்கள், மருத்துவக் காப்பீட்டு அட்டை கேட்டு விண்ணப்பித்ததாகவும், உடனே காப்பீட்டு அட்டை வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி திரு. முனியாண்டி அவர்கள், சக்கர நாற்காலி கோரி விண்ணப்பித்ததாகவும், உடனடியாகத் தனக்குச் சக்கர நாற்காலி வழங்கப்பட்டதாகவும், அதற்குத் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளி ஒருவர், பட்டா பெயர் மாற்றம் கோரி விண்ணப்பித்ததாகவும், துரிதமாக தனக்கு பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டு அதற்கான ஆணை வழங்கப்பட்டதாகவும், அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். குடியாத்தத்தைச் சேர்ந்த மூளை முடக்கவாத நோயினால் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி பிரசன்னராஜின் தாயார் அவர்கள், தனது மகனுக்குச் சக்கர நாற்காலி கோரி விண்ணப்பித்ததாகவும், சக்கர நாற்காலி உடனடியாக வழங்கப்பட்டதாகவும், அதற்காகத் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த மாணவி, ஸ்ரீதேவி, குலசேகரப்பட்டணத்தில் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் படித்து வருவதாகவும், அரசு உதவி பெறும் பள்ளியில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை தமிழ்வழிக் கல்வி பயின்றதாகவும், புதுமைப் பெண் திட்டம் பற்றி அறிந்து, தற்போது அத்திட்டத்தில் பயன்பெறுவதற்காக மனு அளிக்க வந்ததாகவும், இத்திட்டம் மாணவிகளுக்கு மிகவும் பயனுள்ள திட்டமாகும், தன்னுடைய சக தோழிகள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற்று வருவதாகவும் தெரிவித்தார். மேலும், இம்மாவட்டத்தைச் சேர்ந்த கல்லூரி மாணவர் ஒருவர், வருவாய்ச் சான்றிதழ் மற்றும் சாதிச் சான்றிதழ் கோரி விண்ணப்பித்ததாகவும், உடனடியாக இரண்டு சான்றிதழ்களும் கிடைத்து விட்டதாகவும், அதற்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

இம்மாவட்டத்தில் பட்டா மாற்றம் கோரி விண்ணபித்த திருமதி மதுபாலா அவர்கள், தனக்கு உடனடியாகப் பட்டா மாற்றம் செய்யப்பட்டு அதற்கான ஆணை வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார். மகளிர் உரிமைத் தொகை திட்டம் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டதற்கு, இத்திட்டம் மிகவும் பயனுள்ள திட்டமென்றும், தங்கள் பகுதிப் பெண்கள் இத்திட்டத்தால் மிகவும் பயனடைந்து வருவதாகவும், சிறப்பானதொரு ஆட்சி நடைபெற்று வருவதாகவும் மகிழ்ச்சி தெரிவித்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களுக்கு, "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின்கீழ் நடத்தப்படும் சிறப்பு முகாம்கள் மூலம், மக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள்மீது உடனுக்குடன் தீர்வு கண்டு, உரிய பயன்கள் பயனாளிகளுக்குச் சென்று சேர்வதை உறுதிசெய்ய வேண்டும் என்று அறிவுரை வழங்கினார்.

மக்களை முன்னேற்றிடும் வருவாய்த்துறைப் பணிகள்

ஒரு பார்வை...

வருவாய்த்துறை ஆங்கிலேயர் காலத்தில் உருவாக்கப்பட்ட துறை. இந்தத் துறை ஒரு காலத்தில் நிலவரி வசூல் செய்கின்ற பணியை மட்டுமே செய்து வந்தது. இந்தத் துறை தற்போது பொது நிருவாகத் துறையாக, மக்களின் நலன் காக்கும் துறையாகச் செயல்பட்டு வருகிறது. பொதுமக்களுக்குத் தேவையான சான்றிதழ்கள் வழங்குதல், ஓய்வூதியம் வழங்குதல், சமூக நலத் திட்டங்களைச் செயல்படுத்துதல், குறைதீர்க்கும் முகாம்கள் நடத்தி, பொதுமக்களின் குறைகளை அறிந்து அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்தல். பேரிடர் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், பேரிடரின்போது பொதுமக்களைப் பாதுகாத்தல் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குதல், நில உரிமையாளர்களுக்குப் பட்டா வழங்குதல், அரசு வளர்ச்சித் திட்டங்களுக்கு நிலம் கையகப்படுத்திக் கொடுத்தல், அரசு நிலங்களைப் பாதுகாத்து ஆக்கிரமிப்புகளை அகற்றுதல், நிலச் சீர்திருத்தச் சட்டங்களைச் செயல்படுத்துதல், அரசு நிலத்தைத் தனியாருக்குக் குத்தகைக்கு வழங்குதல், பட்டா மாறுதல் செய்கின்ற நிலத்தின் எல்லைகளை அளந்து காட்டுதல் இதுபோன்ற செயல்களை மட்டுமல்லாமல், சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கின்ற பணிகளையும், பொதுத் தேர்தல் நடத்துகின்ற பணிகளையும் வருவாய்த்துறை இன்றைக்கு செய்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கிய இலவச வீட்டுமனைப் பட்டாக்கள்

மாண்புமிகு முதலமைச்சர் திராவிட நாயகர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் விளிம்பு நிலையில் உள்ள மக்களுக்கு 6,52,559, இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கியுள்ளார்கள்.

முதலமைச்சர் அவர்கள் உருவாக்கிய எங்கிருந்தும் எப்போதும் இணையம்வழி பட்டா மாறுதல் திட்டம்

பொதுமக்கள் இணையம் வாயிலாக எந்நேரமும் எங்கிருந்தும் பட்டா மாறுதல் கோரி விண்ணப்பம் செய்வதற்கான சேவையை மாண்புமிகு முதலமைச்சர் திராவிட நாயகர் அவர்கள் 23.09.2022 அன்று தொடங்கி வைத்தார்கள். இரண்டு ஆண்டுகளில் 41,81,723 ஆயிரத்து 723 பட்டா மாறுதல்கள் இணையம் வழியாக வெற்றிகரமாக வழங்கப்பட்டுள்ளன.

இணையத்தில் நகரங்களின் புலப்படங்கள்

மாநிலத்தில் மொத்தம் உள்ள 186 நகரங்களில் 179 நகரங்களுக்கான புலப்படங்கள் கணினிப்படுத்தப்பட்டு இணையத்தில் ஏற்றப்பட்டுள்ளன. எஞ்சிய 7 நகரத்திற்கான புலப்படங்கள் கணினிப்படுத்தப்பட்டுள்ளன. இணையத்தில் ஏற்றும் பணி நடைபெறுகிறது.

புல எல்லைகளை அளந்திட இணையதளம் மூலம் விண்ணப்பிக்கும் புதியமுறை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நில உரிமையாளர்கள் தங்களது புல எல்லைகளை அளவை செய்து அத்துகாட்டுவதற்கு இணையதளம் மூலம் விண்ணப்பிக்கும் புதிய முறையை 20.11.2023 அன்று தொடங்கி வைத்து நில உரிமையாளர்களின் மனக்குறையைத் தீர்த்துள்ளார்கள்.

கையால் எழுதப்பட்ட பழைய ஆவணங்களை ஒளிபிம்ப நகல் எடுத்துப் பராமரித்தல் பணி

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி கையினால் தயாரிக்கப்பட்ட பழைமையான ஆவணங்களை ஒளி பிம்ப நகலெடுத்துப் பராமரிக்கும் பணி சென்னையில் உள்ள ஆவணக் காப்பகம் மற்றும் நில அளவை

மற்றும் நிலவரித்திட்ட ஆணையரகத்தில் நடைபெற்று வருகிறது. மூன்றாண்டுகளில் 9,40,725 தாள்கள் ஒளி பிம்ப நகலெடுத்துப் பாதுகாக்கப்பட்டுள்ளன.

சான்றிதழ் வழங்குதல்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் 1999ஆம் ஆண்டில் பத்தாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு இருப்பிடச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் ஆகியவற்றை அவர்கள் படிக்கும் பள்ளிகளிலேயே வழங்க ஆணையிட்டார்கள். அந்த வகையிலே இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு 2021, 2022, 2023 ஆகிய ஆண்டுகளில் இணையதளம் மூலமாக 26 வகையான சான்றிதழ்கள் வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டு, இந்த மூன்று ஆண்டுகளில் மொத்தம் 2.75 கோடி சான்றிதழ்கள் வழங்கி மக்கள் குறைகள் உடனுக்குடன் தீர்க்கப்பட்டுள்ளன.

முதியோர் உதவித்தொகை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதியோர் ஓய்வூதியம் 1,000 ரூபாய் என்பதை 1,200 ரூபாயாக உயர்த்தியுள்ளார்கள். மாற்றுத்திறனாளிகளுக்கு 1,000 ரூபாயிலிருந்து 1,500 ரூபாயாக உயர்த்தியதும் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான்.

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 34.05 இலட்சம் பேருக்குத்தான் முதியோர் உதவித்தொகை வழங்கப்பட்டது. இன்று திராவிட நாயகர் ஆட்சியில் மூன்றாண்டுக் காலத்தில் 85,000 பேருக்கு முதியோர் உதவித்தொகை கூடுதலாக வழங்கப்பட்டு தற்போது மொத்தம் 34.90 இலட்சம் பேருக்கு வழங்கப்படுகின்றது. மேலும், 80,000 பேருக்கு விரைவில் வழங்கப்படவுள்ளது.

நிதி ஒதுக்கீட்டை உயர்த்திய மாண்புமிகு முதலமைச்சர்

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலே மொத்தம் ரூ.4.87 கோடி தான் முதியோர் ஓய்வூதியத்திற்காக நிதி ஒதுக்கப்பட்டது. திராவிட நாயகர் ஆட்சிக் காலத்தில் ரூ.5,337 கோடி, அ.தி.மு.க. ஆட்சியைவிட ரூ.1,250 கோடி அதிகப்படியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஒதுக்கப்பட்டு முதியோர் உதவித் தொகைத் தாராளமாக வழங்கப்படுகிறது.

மக்கள் தொடர்பு முகாம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கள ஆய்வில் முதலமைச்சர் திட்டத்தில் ஒவ்வொரு மாதமும் மூன்றாவது புதன்கிழமையன்று ஒவ்வொரு பகுதிக்கும் சென்று மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வுசெய்ய வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி ஒவ்வொரு மாதமும் 3ஆவது புதன்கிழமை மாவட்ட ஆட்சித்தலைவர் காலை 9.00 மணிக்கு தாசில்தாருடன் கிராமத்திற்குச் சென்று அந்தப் பகுதியில் காணப்படும் குறைகளை ஆய்வு செய்கிறார். மக்களிடம் மனுக்களைப் பெறுகிறார். மறுநாள் காலை 9.00 மணி வரை அந்தப் பகுதியில் இருந்து, ஆய்வு செய்கிறார். இப்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மக்கள் குறைகள் தீர்வு காணப்படுகின்றன.

இலவச வேட்டி, சேலை திட்டம்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1989ஆம் ஆண்டில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் மக்கள் அனைவருக்கும் பொங்கல் திருநாளில் இலவச, வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்கள். அத்திட்டத்தை சிறப்பாக நிறைவேற்றிவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆண்டுதோறும் ஏறத்தாழ ரூ.1.52 கோடி ஆண்களுக்கு இலவச வேட்டிகளும், ரூ.1.60 கோடி பெண்களுக்கு இலவச சேலைகளும் வழங்கி ஏழை மக்களின் வாழ்த்துகளைப் பெற்று வருகிறார்கள்.

பேரிடர் மேலாண்மை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற நிலையில் கொரோனா தொற்றுத் தமிழ்நாட்டில் மட்டும் இல்லாமல் உயிர்ப் பலிகளை வாங்கி உலகையே வாட்டி வதைத்தது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட நாயகர் அவர்கள் உயிருக்கு அஞ்சாமல் கொரோனா நோயினால் பாதிக்கப்பட்டவர்களை மருத்துவமனைக்கே சென்று நேரில் சந்தித்து ஆறுதல்கூறி, துணிவு தந்து வேண்டிய உதவிகளெல்லாம் செய்து தமிழ்நாட்டு மக்களைப் பாதுகாத்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அப்போது காட்டிய தீரமும், மக்களுக்கு அளித்த உதவிகளும் மற்ற மாநிலங்களுக்கும் வழிகாட்டியாக அமைந்தன.

கொரோனா நோய் மட்டும் அல்லாமல், 3 ஆண்டுகளிலும் புயல்களும், பெரும்மழையும் வெள்ளமும் தமிழ்நாட்டைத் தாக்கின. 2021ஆம் ஆண்டில் Tauktae புயல், Yaas புயல் என இரண்டு

புயல்கள் வந்தன. 2022ஆம் ஆண்டில் Mandous புயல் வந்தது. மயிலாடுதுறை மாவட்டத்தில் கன மழை. காவேரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு. சென்ற 2023ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் பருவம் தவறிய மழை பெய்து பெருத்த சேதத்தை ஏற்படுத்தியது.

2023 டிசம்பரில் மிக்ஜாம் புயல், சென்னைக்கு மிக அருகில் தெற்கு ஆந்திரப் பிரதேசக் கடலோரப் பகுதிக்கு நகர்ந்து, நீண்ட நேரம் நிலைகொண்டிருந்ததன் காரணமாக, 03.12.2023, 04.12.2023 ஆகிய நாள்களில் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்கள் முன் எப்போதும் இல்லாத அளவில்

கனமழை முதல் அதி கனமழை தொடர்ந்து பெய்ததால், பல பகுதிகளை வெள்ளம் சூழ்ந்தது.

மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட சேதங்களுக்கு நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் 16.12.2023 முதல் 18.12.2023 வரை பரவலாகக் கனமழை முதல் அதிகன மழைப்பொழிவு ஏற்பட்டது. வழக்கத்திற்கு மாறான கனமழை, அதனைத் தொடர்ந்த வெள்ளம் காரணமாக மனித உயிரிழப்புகள், கால்நடை இறப்பு ஆகியவை ஏற்பட்டதோடு, வீடுகள் / குடிசைகள், வேளாண் தோட்டக்கலைப் பயிர்கள், சாலைகள், பாலங்கள், மின்சாரம், குடிநீர் வழங்கல் போன்ற பொது உட்கட்டமைப்புகளுக்கும் பெருத்த சேதங்கள் ஏற்பட்டன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாத்திட மிக்ஜாம் புயல், தென் மாவட்டங்களில் ஏற்பட்ட கனமழை, பெரு வெள்ளம் ஆகியவற்றிற்கு ரூ.2,476.89 கோடி மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கினார்கள்."

மிக்ஜாம் புயல் பாதிக்கப்பட்ட 29,54,269 குடும்பங்களுக்கு, குடும்பம் ஒன்றிற்கு ரூ.6,000 வீதம் வாழ்வாதார நிவாரணம் ரூ.14.86 கோடியும்; மிக்ஜாம் புயல் - நிவாரணம் கோரி வரப்பெற்ற விண்ணப்பங்களுள் தகுதியான 2,68,869

குடும்பங்களுக்கு, குடும்பம் ஒன்றிற்கு ரூ.6,000/- வீதம் ரூ.39.51 கோடி வாழ்வாதார நிவாரணமாகவும்; மிக்ஜாம் புயல் வெள்ளம் காரணமாக எண்ணூர் பகுதியில் எண்ணெய் கசிவால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூ.1.15 கோடியும்; மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட வேளாண், தோட்டக்கலைப் பயிர்களுக்கு ரூ.48.18 கோடியும் நிவாரணமாக உடனுக்குடன் வழங்கினார்கள்.

தென் மாவட்டங்களில் வெள்ள நிவாரணம்

தூத்துக்குடி, நெல்லை, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய தென் மாவட்டங்களில் பெய்த கனமழை, பெருவெள்ளத்தால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட 6,63,760 குடும்பங்களுக்கு குடும்பம் ஒன்றிற்கு ரூ.6,000/- மிதமாகப் பாதிக்கப்பட்ட 14,31,164 குடும்பங்களுக்கு குடும்பம் ஒன்றிற்கு ரூ.1,000/- வீதம் ரூ.541.37 கோடி வாழ்வாதார நிவாரணமாக வழங்கினார்கள்.

தென் மாவட்டங்களில் ஏற்பட்ட கனமழையின் காரணமாகப் பாதிக்கப்பட்ட வேளாண், தோட்டக்கலைப் பயிர்களுக்கான நிவாரணமாக ரூ.201.67 கோடியும்;

மிக்ஜாம் புயல், தென் மாவட்டங்களில் ஏற்பட்ட கனமழையின் காரணமாகப் பல்வேறு துறைகளின் உட்கட்டமைப்புகளுக்கு ஏற்பட்ட சேதங்களைச் சீரமைக்க ரூ.130 கோடியும்;

மிக்ஜாம் புயல், தென் மாவட்டங்களில் ஏற்பட்ட கனமழையின் காரணமாக மீன் பிடி படகுகள், வலைகள் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணமாக ரூ.28.10 கோடியும் வழங்கிப் பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்களைத் துடைப்பதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெகுவேகமாக உடனுக்குடன் செயல்பட்டு அதிகாரிகளை அரவணைத்துக் களத்தில் தாமும் நின்று ஆற்றிய பணிகளை பாதிப்புகளுக்குள்ளான மக்களும் நடுநிலையாளர்களும் பத்திரிகையாளர்களும் வெகுவாகப் பாராட்டினர்.

நில அளவைத் துறை

பதிவுத்துறையில் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டவுடன் அவற்றில் 2 ஏக்கர், 3 ஏக்கர் நிலங்கள் ஒருவருக்கே இருந்தால், அவருக்கு உடனடியாகப் பட்டா மாற்றிக் கொடுக்கப்படுகின்றன. உரிய முறையில் இணையத்திலும் பதிவு செய்து கொடுக்கப்படுகின்றன. ஒருவர் இரண்டு ஏக்கருக்கு மேல் நிலம் வாங்கி விற்பனைக்காக மாவட்ட நிருவாகத்தின் அனுமதியுடன் மனைகள் போட்டிருந்தால் விற்பனை செய்யப்படும் மனைகளைப் பதிவு செய்யும்போது மனை வாரியாகப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. முன்பு ஒரு மனை வாங்கினால் துறை அதிகாரி அந்த இடத்திற்குச் சென்று அளந்து கொடுக்க வேண்டும். தற்போது அந்த நடைமுறை எளிமைப் படுத்தப்பட்டுள்ளது. இதுபோன்று அனைத்துப் பணிகளையும் எந்தெந்த முறையில் எளிதாக்க இயலுமோ அந்தந்த முறைகளில் துறையை எளிமைப்படுத்தி மக்களுக்கு நன்மை செய்யும் துறையாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருவாய்த்துறையை மேம்படுத்தியுள்ளார்கள் என்பது பெருமைக்குரிய சாதனைகளில் ஒன்றாகும்.

இப்படி, மாண்புமிகு முதலமைச்சர் திராவிட நாயகர் ஆட்சி ஏற்பட்ட மூன்று ஆண்டுகளில் வருவாய்த்துறை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் உருவாக்கிய உங்கள் தொகுதியில் முதலமைச்சர், முதலமைச்சரின் முகவரித் துறை, கள ஆய்வில் முதலமைச்சர், மக்களுடன் முதல்வர், நீங்கள் நலமா முதலான பல புதுமையான திட்டங்களால் மக்கள் குறைகள் மனு வழங்கிய 15 நாட்களில் தீர்க்கப்படுகின்றன. மக்கள், திராவிட மாடல் அரசைப் பாராட்டுகின்றனர். மற்ற மாநிலங்களுக்கும் திராவிட மாடல் அரசின் வருவாய்த் துறை சீரிய முறையில் வழிகாட்டுகிறது என்றால் அது மிகையாகாது.

“வீடு கட்டும் கட்டட அனுமதியை இணையதளம் வாயிலாக ஒற்றைச் சாளர முறையில் உடனடியாகப் பெறும் புதிய திட்டம்”

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்தார் – 22.07.2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 22.07.2024 அன்று தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறையின்கீழ் இயங்கும் நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் சார்பில், தமிழ்நாட்டில் முதல்முறையாகப் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர், நடுத்தர மக்கள் இணைய தளம் வாயிலாகச் சுயசான்றிதழ் அடிப்படையில் அதிகபட்சம் 2,500 சதுர அடி பரப்பளவு கொண்ட மனையிடத்தில் 3,500 சதுர அடி அளவிற்குள் கட்டப்படும் குடியிருப்புக் கட்டுமானத்திற்கு உடனடியாக ஒற்றைச் சாளர முறையில் கட்டட அனுமதிகளைப் பெறும் ஒருங்கிணைந்த புதிய திட்டத்தைத் தொடங்கி வைத்து, 10 பயனாளிகளுக்கு கட்டுமான அனுமதி ஆணைகளை வழங்கினார்.

2024-2025ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், சுயசான்றிதழ் மூலமாகப் பொதுமக்கள் கட்டட அனுமதி பெறுவதற்குப் புதிய வசதி அறிமுகப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, 2,500 சதுர அடி வரையுள்ள மனையிடத்தில், 3,500 சதுர அடி கட்டடப் பரப்பளவிற்குள் தரைத்தளம் அல்லது தரைத்தளம், முதல் தளம் கொண்ட 7 மீட்டர் உயரத்திற்குட்பட்டுக் குடியிருப்புக் கட்டடத்தைக் கட்டுவதற்கு விரும்பும் பொதுமக்கள் சுயசான்றிதழ் திட்டத்தின்கீழ் கட்டட அனுமதியை எளிதாகவும் உடனடியாகவும் பெற முடியும்.

சுயசான்றிதழ் திட்டம் என்பது, பொதுமக்கள் கட்டட அனுமதிக்காக அலுவலகங்களுக்குச் சென்றுவரும் நேரத்தை முழுமையாகத் தவிர்த்து, அதிகபட்ச வெளிப்படைத் தன்மையுடனும், நடைமுறையில் உள்ள கட்டட விதிகளை எளிமைப்படுத்தியும் மக்கள் கடைப்பிடிப்பதற்கு மேற்கொள்ளப்படும் ஒரு புதுமையான முயற்சியாகும்.

தற்போதுள்ள ஒற்றைச் சாளர முறையின் மூலம் ஒப்புதல் பெறுவதைக் காட்டிலும், இந்தச் சுயசான்றிதழ் திட்டத்தில் ஒப்புதல் பெறும் நடைமுறை மிகவும் எளிதான வகையில் அமைந்து பொதுமக்களுக்குப் பெரிதும் பயனளிக்கும். இது தொடர்பாக, ஒற்றைச் சாளர முறையில் சுயசான்றிதழ் திட்டத்திற்கான மென்பொருள் தொகுப்பு உருவாக்கப்பட்டு, ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

தற்போது, குடியிருப்புக் கட்டடங்களுக்கான கட்டட அனுமதி பெறுவதற்காகப் பெறப்படும் மொத்த விண்ணப்பங்களில் 72 விழுக்காடு ஊராட்சிகளிடமிருந்தும், 77 விழுக்காடு பேரூராட்சிகளிடமிருந்தும், 79 விழுக்காடு நகராட்சி, மாநகராட்சிகளிடமிருந்தும் பெறப்படுகிறது. அவ்விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளால் ஒற்றைச் சாளர முறையில் பரிசீலனை செய்யப்படுகின்றன.

பொதுமக்கள் பயன்பெறும் வகையில், இப்புதிய திட்டத்தின்கீழ் அனுமதி பெறும் கட்டடங்களுக்கும் சாலைக்கும் இடையில், தளர்வு (1.5 மீட்டராகக் குறைக்கப்பட்டுள்ளது), கூராய்வுக் கட்டணம் (scrutiny fee) (சதுர மீட்டருக்கு ரூ.2), உள்கட்டமைப்பு, வசதிகளுக்கான (I & A) கட்டணங்கள் (சதுர மீட்டருக்கு ரூ.375) ஆகியவற்றில் விலக்கு அளிக்கப்படுகிறது.

விண்ணப்பதாரர்கள் தேவையான கட்டணங்களைச் செலுத்தியபின் விரைவுத் துலங்கல் (QR) குறியீட்டுடன் கட்டட அனுமதி, வரைபடங்களை உடனடியாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும், முன் இடக்கள ஆய்வு மேற்கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டு, உடனடியாகக் கட்டுமானப் பணி மேற்கொள்வதற்கும் வழிவகை செய்து கட்டட முடிவுச் சான்று பெறுவதிலிருந்தும் விலக்கு அளிக்கப்படுகிறது.

படமும்/செய்தியும்

செய்தித்துறை மண்டல இணை இயக்குநர்களின் பணி ஆய்வுக் கூட்டம்

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் தலைமையில் 30.07.2024 அன்று சென்னை மாநிலச் செய்தி நிலையக் கூட்டரங்கில் சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, திருநெல்வேலி, மதுரை, தஞ்சாவூர் ஆகிய மண்டல இணை இயக்குநர்களின் பணி ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் திரு. வே. ராஜாராமன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், இ.ஆ.ப., மற்றும் செய்தித்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் 8,883 உறுப்பினர்களுக்கு ரூ.3.29 கோடி நிதி உதவி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் 23.07.2024 அன்று தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் நிருவாகக் குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது.

இந்தியாவிலேயே முதன்முதலாகத் தமிழ்நாட்டில் தான் வணிகப் பெருமக்களின் நலனுக்காக "தமிழ்நாடு வணிகர் நல வாரியம்" என்ற அமைப்பு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1989ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டுச் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு வணிகர் நல வாரியம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களைத் தலைவராகக் கொண்டும், மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் அவர்களைத் துணைத் தலைவராகக் கொண்டும் இயங்கி வருகிறது. இவ்வமைப்பின்கீழ் வணிகவரி மற்றும் பதிவுத் துறைச் செயலாளர், வணிகவரி ஆணையர், நிதித் துறை முதன்மைச் செயலாளர், தொழிலாளர் நலன், திறன் மேம்பாட்டுத்துறை செயலாளர், உறுப்பினர் செயலராக வாரியத்தின் முதன்மைச் செயல் அலுவலர் ஆகியோர் அலுவல் சார்ந்த உறுப்பினர்களாக உள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் நடைபெற்ற தமிழ்நாடு வணிகர் நலவாரியத்தின் நிருவாகக் குழு கூட்டத்தில் ஆற்றிய உரை – 23.07.2024

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் இவ்வாரியம் உருவாக்கப்பட்ட போது 20 அலுவல்சாரா உறுப்பினர்களை உள்ளடக்கியதாக இருந்தது. தற்போது, வளர்ந்து வரும் வணிகத்தைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அலுவல்சாரா உறுப்பினர்களின் எண்ணிக்கை 20லிருந்து 30ஆக உயர்த்தி அரசாணை 07.07.2023 அன்று வெளியிடப்பட்டது.

இவ்வாரியம் வணிகர்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்காகவும், வாரியத்தின் நிருவாகச் செலவினங்களுக்காகவும் தொடக்கத்தில் 1989இல் ரூ.2 கோடியை "திரட்டு நிதியாக" (Corpus Fund) கொண்டு தொடங்கப்பட்டது. பின்னர் இந்நிதி 2012இல் ரூ.5 கோடியாக உயர்த்தப்பட்டு, 2017இல் இவ்வாரியத்தின் திரட்டு நிதி ரூ.10 கோடியாக உயர்த்தப்பட்டது. நாளது தேதியில் ரூ.4.05 கோடி திரட்டு நிதி கையிருப்பு உள்ளது.

மேலும், இவ்வாரியத்தின்கீழ் நடைபாதை வணிகர்கள் அல்லாமல், தொழில் வரி உச்ச வரம்புக்குக் கீழே உள்ள சிறு வணிகர்களும் உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்து பெற்ற உரிமத்தின் அடிப்படையில் ஒரு முறை மட்டும் ரூ.500 கட்டணமாகச் செலுத்தி உறுப்பினர் ஆகலாம் எனக் கொண்டுவரப்பட்டது.

கட்டணமின்றி உறுப்பினர் சேர்க்கை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்தது போல், வணிகர் நல வாரியத்தைச் சீரமைத்து உறுப்பினர் சேர்க்கையை செம்மைப்படுத்தி, திறம்படச் செயல்படும் வகையில், சிறு மற்றும் குறு வணிகர்களின் வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக இந்த வாரியத்தின் மூலம் நலத்திட்டங்களைச் செயல்படுத்த ஏதுவாக சரக்கு மற்றும் சேவை வரி (GST) சட்டத்தில் பதிவுபெற்று "விற்று முதல் அளவு" (Turn Over) ரூ.40 இலட்சத்திற்கு உட்பட்ட சிறு வணிகர்கள் மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி சட்டத்தின் கீழ் பதிவு பெறாத குறு வணிகர்கள் இந்த வாரியத்தில் உறுப்பினர்களாக சேர, சேர்க்கைக் கட்டணத் தொகையான ரூ.500/-ஐ வசூலிப்பதிலிருந்து மூன்று மாதங்களுக்கு விலக்களித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 15.07.2021 முதல் 14.10.2021 வரையிலான காலத்திற்குத் தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு செய்யும் அனைத்துப் புதிய சிறு மற்றும் குறு வணிகர்களுக்குச் சேர்க்கை கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்பட்டது.

மேலும், பல்வேறு வணிகப் பேரமைப்புகளின் கோரிக்கைகளை ஏற்று இச்சேவையை 31.03.2022 வரை கால நீட்டிப்புச் செய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார். இதன் பயனாக, தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு செய்யும் அனைத்துப் புதிய சிறு வணிகர்களுக்குச் சேர்க்கை கட்டணத்திலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. இந்தச் சேவையின் வாயிலாக 40,994 புதிய உறுப்பினர்கள் வணிகர் நல வாரியத்தில் இணைந்துள்ளனர்.

இன்று வரை தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம்/தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம் மற்றும் தமிழ்நாடு சரக்கு மற்றும் சேவை வரிச்சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற வணிகர்களின் உறுப்பினர் சேர்க்கை எண்ணிக்கை 88,219 ஆகும்.

தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் வழங்கப்படும் நலத் திட்ட உதவிகள்

குடும்பநலத் திட்டம்

தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் உறுப்பினர்கள் இயற்கை எய்த நேரிட்டால் அவர்களது குடும்பத்திற்கு உதவி தொகையாக ரூ.1,00,000 வழங்கப்பட்டு வந்தது.

தற்போது இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு 30.05.2022 நாளிட்ட அரசாணையின்படி இந்த உதவித் தொகையானது ரூ.3,00,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் இதுவரை 390 உறுப்பினர்களின் குடும்பத்திற்கு ரூ.142.45 இலட்சம் நலத் திட்ட உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

தீ விபத்து

தமிழ்நாடு வணிகர் நல வாரிய உறுப்பினரின் வியாபாரத் தலத்தில் தீ விபத்து ஏற்பட்டால் முன்னர் ரூ.5,000 வழங்கப்பட்டு வந்தது.

தற்போது கழக அரசு பதவியேற்ற பிறகு ரூ.5,000 ஆக இருந்த தொகையானது 30.05.2022 நாளிட்ட அரசாணையின்படி ரூ.20,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் இதுவரை 29 உறுப்பினர்களுக்கு ரூ.1.45 இலட்சம் நல திட்ட உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

திருமண உதவி

வாரிய உறுப்பினர்களுக்குத் திருமண உதவி தொகையாக ரூ.5,000 வழங்கப்பட்டு வந்தது. தற்போது இவ்வரசு பொறுப்பேற்றப் பிறகு 16.11.2021 நாளிட்ட அரசாணையின்படி உறுப்பினரின் திருமணம், உறுப்பினரின் மகள்/மகன் திருமணம், உறுப்பினரின் மகள் கைம்பெண் திருமணம் ஆகியவற்றிற்குத் திருமண உதவித்தொகை ரூ.10,000/-ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

விபத்துக்கால உதவி

இவ்வரசு பொறுப்பேற்றப் பின் விபத்துக்கால உதவித் திட்டம் துவங்கப்பட்டு, அதன்படி வணிக நல வாரிய உறுப்பினருக்கு விபத்து நேர்ந்தால் இழப்பீட்டுத் தொகையாக ரூ.25,000/- வழங்கப்பட்டு வருகிறது.

மருத்துவ உதவி

தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் உறுப்பினர்களுக்கு இருதய அறுவை சிகிச்சை, புற்றுநோய் அறுவை சிகிச்சைகளுக்கு மருத்துவ சான்றின் பேரில் ரூ.50,000/- வழங்கப்படுகிறது.

இதயம், சிறுநீரகம், புற்றுநோய்களுக்குரிய சிகிச்சைகளான ஆன்ஜியோபிளாஸ்ட், டயாலிசிஸ், கீமோதெரபி, ரேடியேஷன்தெரபி ஆகியவைகளுக்கு ரூ.15,000 வழங்கப்படுகிறது. இச்சிகிச்சைகளுக்குப் பிறகு அறுவை சிகிச்சை செய்து கொள்ள நேரிட்டால் அதற்கும் ரூ.25,000 வழங்கப்படுகிறது. இது தவிர, பெண் உறுப்பினர்களுக்குக் கர்ப்பப்பை அறுவை சிகிச்சைக்கு ரூ.20,000 வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 52 உறுப்பினர்களுக்கு ரூ.13.11 இலட்சம் நல திட்ட உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

கல்வி உதவி

தமிழ்நாடு வணிகர் நல வாரிய உறுப்பினர்களின் ஆயுட்காலத்தில் அவரது பிள்ளைகளில் ஒருவருக்கு ஒவ்வொரு கல்வி ஆண்டிற்கும் கல்லூரி கல்விக்கு ரூ.5,000மும், தொழிற்கல்விக்கு ரூ.10,000மும் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 94 உறுப்பினர்களுக்கு ரூ.3.26 இலட்சம் நலத்திட்ட உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

உறுப்பினரின் வாரிசுகளுக்கு விளையாட்டு நிதி உதவி

சர்வதேச அளவில், தேசிய அளவில், மாநில மற்றும் மாவட்ட அளவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெறும் தமிழ்நாடு வணிகர் நல வாரிய உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு உதவித் தொகையாக முறையே ரூ.25,000, ரூ.10,000, ரூ.5,000, ரூ.3,000 வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 2 உறுப்பினர்களுக்கு ரூ.15 ஆயிரம் நலத் திட்ட உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

நலிவுற்ற வணிகர்களுக்கு நிதியுதவி

"நலிவுற்ற வணிகர்கள்" என உதவி கோரி ஒவ்வொரு ஆண்டிலும் வாரிய உறுப்பினர்களிடமிருந்து பெறப்படும் முதல் பத்து விண்ணப்பங்களுக்கு, கூட்டுறவுத் தொழிற்கூடங்களில் தயார் செய்யப்படும் பெட்டிக்கடை அல்லது மூன்று சக்கர மிதிவண்டி (Tri Cycle) வாங்க ரூ.10,000 வழங்கப்பட்டு வருகிறது. இவ்வரசு பொறுப்பேற்றபின் வணிக பெருமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு பல்வேறு புதிய நலத் திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தை நான் முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் கூட்டத்தில் கலந்து கொண்டு உங்கள் அனைவரையும் சந்திப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்தியாவிலேயே முதன்முதலாக வணிகப் பெருமக்களின் நலனுக்காகத் தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தை 35 ஆண்டுகளுக்கு முன்னால் உருவாக்கியவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

25.09.1989ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட இந்த நல வாரியம் இன்று வரைக்கும் சிறப்பாக நடந்து கொண்டு வருகிறது. முதலமைச்சரைத் தலைவராகவும், வணிகவரித்துறை அமைச்சரைத் துணைத் தலைவராகவும் கொண்டு இந்த நல வாரியம் அமைக்கப்பட்டது.

தலைவர் கலைஞர் அவர்களால் இந்த வாரியம் உருவாக்கப்பட்ட போது அலுவல் சாரா உறுப்பினர்களாக 20 பேர் இருந்தார்கள். கடந்த ஆண்டு ஜூலை மாதம் 7 ஆம் தேதி இந்த எண்ணிக்கையை 30 பேர்களாக நம்முடைய அரசு உயர்த்தியது.

இந்த வாரியம் தொடங்கப்பட்டபோது வாரியத்தின் துவக்க நிதியாக ரூ.2 கோடியாக இருந்தது. அது 2012ஆம் ஆண்டு ரூ.5 கோடியாகவும், 2017ஆம் ஆண்டு ரூ.10 கோடியாகவும் உயர்த்தப்பட்டது. இப்போது ரூ.4.05 கோடி திரட்டு நிதி கையிருப்பு உள்ளது.

தொடக்கத்தில் நடைபாதை வணிகர்கள் இல்லாமல் மற்றவர்கள் ரூ.500 கட்டணமாகச் செலுத்தி உறுப்பினர் ஆகலாம் என இருந்தது. இந்த உறுப்பினர் கட்டணத்தில் சலுகை தர நம்முடைய அரசு முடிவெடுத்ததை உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்ததும், 15.07.2021 முதல் 14.10.2021 வரை மூன்று மாத காலத்திற்குள் உறுப்பினர்களாகச் சேரும் அனைவருக்கும் கட்டணமில்லை என்று அறிவித்தோம். பல்வேறு வணிகர் சங்க பேரமைப்புகள் இந்தச் சேவையை மேலும் நீட்டிக்கச் சொன்னார்கள். அதை ஏற்று 31.03.2022 வரை நீட்டித்தோம். இந்தச் சேவையின் வாயிலாக 40,994 புதிய உறுப்பினர்கள் வணிகர் நல வாரியத்தில் இணைந்திருக்கிறார்கள் என்ற செய்தியை நான் மகிழ்ச்சியுடன் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

இதுவரை தமிழ்நாடு பொது விற்பனை வரிச்சட்டம், தமிழ்நாடு மதிப்பு கூட்டு வரிச் சட்டம், தமிழ்நாடு சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டத்தின்கீழ் பதிவுபெற்ற மொத்த வணிகர்களின் எண்ணிக்கை 88,219ஆக உயர்ந்துள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே வருகை தந்திருக்கக்கூடிய வாரிய உறுப்பினர்களாகிய உங்களிடம் இந்த நேரத்தில் நான் வைக்கின்ற வேண்டுகோள் என்னவென்று கேட்டால், அடுத்த கூட்டத்திற்குள் இந்த எண்ணிக்கை நீங்கள் அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கழக அரசு அமைந்த பிறகு இவ்வாரியத்தின் மூலமாக ஏராளமான நலத்திட்ட முன்னெடுப்புகள் செய்யப்பட்டுள்ளன என்பதை உறுப்பினர்களாகிய உங்கள் அனைவருக்கும் தெரியும்.

✶ கல்வி உதவித் தொகையாக ஒவ்வொரு ஆண்டுக்கும் ரூ.5 ஆயிரமும், தொழிற் கல்வியாக இருந்தால் ரூ.10 ஆயிரமும் வழங்கப்பட்டு வருகிறது. இதனால், 94 மாணவ, மாணவியர் பயனடைந்துள்ளார்கள்.

✶ வாரிய உறுப்பினர்களுக்குத் திருமண உதவித் தொகையாக ரூ.5 ஆயிரம் வழங்கப்பட்ட நிதியை ரூ.10 ஆயிரமாக உயர்த்தி வழங்கி வருகிறோம்.

✶ வணிகர் நலவாரிய உறுப்பினர்களுக்கு மரணம் ஏற்பட்டால், அவர்களது குடும்பத்துக்கு ஒரு இலட்சம் வழங்கப்பட்ட நிதி உதவியை ரூ.3 இலட்சமாக உயர்த்தி இருக்கிறோம். இதுவரை இத்திட்டத்தின் கீழ் 390 குடும்பங்களுக்கு நிதி வழங்கப்பட்டிருக்கிறது.

✶ வியாபார நிறுவனத்தில் தீ விபத்து ஏற்பட்டால், ரூ.5 ஆயிரம் என வழங்கப்பட்ட நிதியை ரூ.20 ஆயிரமாக உயர்த்தினோம். 29 உறுப்பினர்கள் இந்த நிதி உதவியைப் பெற்றுள்ளார்கள்.

✶ விபத்து உதவியாக ரூ.25 ஆயிரம் வழங்க உத்தரவிட்டுள்ளோம்.

✶ இதய அறுவை சிகிச்சை மற்றும் புற்றுநோய் அறுவை சிகிச்சைகளுக்கு மருத்துவச் சான்றின் பேரில் ரூ.50 ஆயிரம் நிதி வழங்கப்படுகிறது.

✶ பெண் உறுப்பினர்களுக்குக் கர்ப்பப்பை அறுவை சிகிச்சைக்கு ரூ.20 ஆயிரம் வழங்கப்படுகிறது.

✶ விளையாட்டு வீரர்களுக்கான நிதியுதவியும் ரூ.3 ஆயிரம் முதல் ரூ.25 ஆயிரம் வரை வழங்கப்படுகிறது.

✶ நலிவுற்ற வணிகர்கள் திட்டத்தின்கீழ் பெட்டிக்கடை அல்லது மூன்று சக்கர மிதிவண்டி வாங்க ரூ.10 ஆயிரம் வழங்கப்படுகிறது.

இந்த அரசு பொறுப்பேற்றது முதல் 8,883 வணிகர்கள் பல்வேறு நிதி உதவிகளைப் பெற்றுள்ளார்கள். ரூ.3.29 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

வருங்காலத்திலும் இது போன்ற பல்வேறு முன்னெடுப்புகளைச் செய்யத் தயாராக இருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்புத் தலைவர் விக்கிரமராஜா, நிருவாகிகள் அடிக்கடி என்னை வந்து சந்திப்பார்கள். அவர்கள் வைக்கின்ற கோரிக்கைகளையும் தொடர்ந்து நிறைவேற்றி வழங்கிக் கொண்டு வருகிறோம்.

சமீபத்தில் கூட உள்ளாட்சி அமைப்புக்களால் கடைகளுக்குத் திறப்பு விழா, ஆண்டுதோறும் புதுப்பிக்கப்படும் வணிக உரிமங்கள் 01.04.2024 முதல் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பித்தால் போதும் என்ற வகையில் இதற்குரிய விதிகள், திருத்தி ஆணைகள் வெளியிடப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் கடைகளுக்கான குத்தகை 9 ஆண்டுகள் என்று இருந்ததை 12 ஆண்டுகள் என விதிகளில் திருத்தம் செய்து 01.08.2024 முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. விக்கிரமராஜா, நிருவாகிகளை சமீபத்தில் சந்தித்தபோது தமிழ்நாட்டின் அனைத்துக் கடைகளிலும் தமிழில் பெயர் பலகை அமைக்க நடவடிக்கை எடுக்கப் போவதாக வாக்குறுதி அளித்துள்ளார்கள். இதுபோன்ற செயல்கள் நாங்கள் சொல்லி, நீங்கள் செய்வதாக இல்லாமல், நீங்களே முன்வந்து செய்வதாக இருக்க வேண்டும்.

தமிழ்நாட்டின் வீதிகளில் தமிழைக் காண முடியவில்லை என்று யாரும் சொல்லக் கூடாது. அந்த அளவுக்குப் பெயர் பலகைகளில் தமிழில் மாற்ற முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எல்லார்க்கும் எல்லாம் என்ற அடிப்படை நோக்கம் கொண்டது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசின் கொள்கை. அது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும்.

மிகப்பெரிய தொழிற்சாலைகள் மட்டுமல்ல – சிறுகடைகளும், வியாபாரிகளும் தங்களது வணிகத்தை மிகச் சிறப்பாக நடத்த வேண்டும் என்பதில் தமிழ்நாடு அரசு கவனமாக இருக்கிறது என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

சிறு வணிகர்களும், வணிக நிறுவனங்களும் நிதி வளர்ச்சிக்கு மட்டுமல்ல, மனித வளர்ச்சிக்கும் அடிப்படையானவை. இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை அளிப்பதாக அமைந்துள்ளது.

வணிகர்கள் தங்கள் வணிகத்தை அமைதியாக நடத்தும் வகையில் அமைதிமிகு மாநிலமாகத் தமிழ்நாடு விளங்கி வருகிறது. உங்களது வணிகத்துக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பதுதான் தமிழ்நாடு அரசின் கொள்கை. அதுபோலதான் செயல்படுகிறோம்.

உங்களது கோரிக்கைகளை எப்பொழுது வேண்டுமென்றாலும் எங்களைச் சந்தித்துச் சொல்லலாம். ஆண்டுதோறும் வணிகர் சங்கப் பேரவை மாநாடுகளில் நானோ அல்லது அமைச்சர்களோ கலந்து கொள்கிறோம்.

நமக்கு இடையில் இடைத்தரகர்கள் கிடையாது, இருக்கவும் கூடாது. எனவே, இதனை மனதில் வைத்து வர்த்தகமாக இல்லாமல் சேவை மனப்பான்மையுடனும் மக்களுக்கு நன்மைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தொடர்ந்து பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு நான் செல்ல வேண்டிய காரணத்தினால், இந்தக் கூட்டத்தை நம்முடைய அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று நடத்தியிருக்கிறார்கள். உங்கள் கருத்துக்களைச் சொல்லுங்கள். நான் அவர்களிடத்தில் கலந்து பேசிவிட்டு, அதிகாரிகளிடத்திலும் கலந்து பேசிவிட்டு, அதற்குப் பிறகு அரசு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அந்த நடவடிக்கை எடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதைச் சொல்லி, உங்களிடமிருந்து இந்த நேரத்தில் நான் உங்கள் அனுமதியோடு விடைபெறுகிறேன்.

தருமபுரி மாவட்டத்தில் ரூ.444.77 கோடிச் செலவில் "மக்களுடன் முதல்வர்" திட்டத் தொடக்க விழாவில் 621 முடிவுற்ற திட்டப் பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் திறந்து வைத்தார் – 11.07.2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 11.07.2024 அன்று தருமபுரி, பாளையம் புதூர் அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில், தருமபுரி மாவட்டத்தில் ரூ.444.77 கோடிச் செலவில் 621 முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்து, பல்வேறு துறைகளின் சார்பில் 2,637 பயனாளிகளுக்கு ரூ.56.04 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற திட்டப் பணிகளின் விவரங்கள்

நெடுஞ்சாலைத் துறை சார்பில், ரூ.339.44 கோடிச் செலவில் தருமபுரி முதல் அரூர் மொரப்பூர் சாலை, திருவண்ணாமலை முதல் அரூர் தானிப்பாடி சாலை வரை இருவழித் தடத்திலிருந்து நான்கு வழித்தடமாக அகலப்படுத்தி, முடிவுற்ற சிறுபாலங்கள், பாலப் பணிகள்;

பள்ளிக்கல்வித் துறை சார்பில், 4 கோடியே 64 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் பி. துறிஞ்சிப்பட்டி, அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி, அரசு மேல்நிலைப் பள்ளி, பேளாரப்பள்ளி, பண்டஅள்ளி, பஞ்சப்பள்ளி அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 22 வகுப்பறைக் கட்டடங்கள், ரூ.17.64 இலட்சம் செலவில் ஏலகிரி அரசு மேல்நிலைப் பள்ளி மாணவிகளுக்கான சுகாதாரக் கட்டடம்;

உயர்கல்வித் துறை சார்பில், ரூ.11.08 கோடிச் செலவில் பாலக்கோடு பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 7 ஆய்வகக் கட்டடங்கள், செட்டிக்கரை அரசுப் பொறியியல் கல்லூரியில் ஒரு உள்விளையாட்டு அரங்கம்;

பால்வளத் துறை சார்பில், ரூ.2.41 கோடிச் செலவில் தருமபுரி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில், தருமபுரி பால் குளிரூட்டும் நிலைய வளாகத்தில் 50,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட புதிய பால் பதப்படுத்தும் மற்றும் பால் பாக்கெட் தயாரிக்கும் தொழிற்சாலை;

ஆதிதிராவிடர் நலத் துறை சார்பில், 4 கோடியே 4 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாய் செலவில் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் 8 பள்ளிகளுக்கு 18 வகுப்பறைக் கட்டடங்கள், அறிவியல் ஆய்வுக்கூடம்;

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில், ரூ.51.17 கோடிச் செலவில் அரூர் வட்டம், பீச்சாங்கொட்டாய் பகுதியில் அனைவருக்கும் வீடு திட்டத்தின்கீழ் 504 அடுக்குமாடிக் குடியிருப்புகள்;

நகராட்சி நிருவாகத் துறை சார்பில், ரூ.60 இலட்சம் செலவில் அன்னசாகரம் கங்கரன் கொட்டாய் பகுதியில் நகர்ப்புற வீடற்றவர்களுக்கான தங்குமிடம்;

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில், 7 கோடியே 74 இலட்சத்து 31 ஆயிரம் ரூபாய் செலவில் மகளிர் விடியல் பயணத் திட்டப் பயன்பாட்டிற்காகத் தற்சமயம் இயங்கிவரும் பேருந்துகளுக்குப் பதிலாக 20 புதிய நகரப் பேருந்துகள்;

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில், 12 கோடியே 77 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் செலவில் சமுதாயக் கூடங்கள், பல்நோக்கு மையக் கட்டடம், கூடுதல் பள்ளிக் கட்டடங்கள், ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடம், வட்டாரச் சுகாதார நிலையம், நியாய விலைக்கடை, அங்கன்வாடி மையக் கட்டடங்கள், தானிய சேமிப்பு கிடங்குகள், பாலங்கள், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, சுகாதார வளாகங்கள்;

மருத்துவம், மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், ரூ.42.70 இலட்சம் செலவில் பாப்பிரெட்டிப்பட்டி வட்டாரம், திப்பிரெட்டி அள்ளியில் துணை சுகாதார நிலையக் கட்டடம்;

பேரூராட்சிகள் துறை சார்பில், 8 கோடியே 1 இலட்சத்து 34 ஆயிரம் ரூபாய் செலவில் தருமபுரி மாவட்டப் பேரூராட்சிப் பகுதியில் சிறுவர் பூங்காக்கள், நவீன நிழற்கூடம், வாரச் சந்தை மேம்பாடு, சிசிடிவி கேமராக்கள், சகடு கழிவுநீர் அகற்றும் மேலாண்மை பணிகள், பேருந்து நிலையம் பராமரிப்புப் பணிகள்;

வனத்துறை சார்பில், 2 கோடியே 25 இலட்சத்து 34 ஆயிரம் ரூபாய் செலவில் வனச்சரக அலுவலகக் கட்டடம், குடியிருப்புக் கட்டடங்கள், தீ கட்டுப்பாடு கட்டடம், பெண் வனப்பணியாளர்களுக்கு கழிப்பறையுடன் கூடிய ஓய்விடக் கட்டடம், வேட்டைத்தடுப்பு முகாம் கட்டடம்;

என மொத்தம் ரூ.444.77 கோடிச் செலவில் 621 முடிவுற்ற திட்டப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த பயனாளிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கிய நலத்திட்ட உதவிகளின் விவரங்கள்

கூட்டுறவுத் துறை சார்பில் பயிர்க் கடன், கால்நடைப் பராமரிப்பு கடன், சுய உதவிக்குழு கடன், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை சார்பில் குளிர்காப்புப் பெட்டியுடன் கூடிய இரு சக்கர வாகனம், வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை சார்பில் ஒருங்கிணைந்த பண்ணையம், வேளாண் பொறியியல் துறை சார்பில், திறனற்ற பழைய மோட்டாருக்கு பதிலாகப் புதிய மோட்டார், சிறுதானிய இயக்கத் திட்டத்தின்கீழ் உழவு மானியம், தோட்டக்கலைத் துறை சார்பில் நுண்நீர்

பாசனத்திட்டம், தேசியத் தோட்டக்கலை இயக்கம், நீர்சேகரிப்பு அமைப்பு, சிப்பம் கட்டும் அறை, பசுமைக் குடில், நிழல் வலைக்கூடம், மகளிர் திட்டம் சார்பில் மகளிர் சுய உதவிக்குழு வங்கிக் கடன், மருத்துவம், மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் நல உதவிகள்;

மாவட்டத் தொழில் மையம் சார்பில் புதிய தொழில் முனைவோர், தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் மூலம் புதிய தொழில் தொடங்க கடனுதவி, தொழிலாளர் நலத்துறை சார்பில் பணியிடத்து விபத்து மரண உதவித் தொகை, விபத்து மரண உதவித்தொகை, இயற்கை மரண உதவித் தொகை வழங்குதல், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில் இலவச தையல் இயந்திரங்கள், குழந்தைகள் நலன், சிறப்புச் சேவைகள் துறை சார்பில் நிதி ஆதரவு கல்வி உதவித் தொகை, வருவாய்த் துறை சார்பில் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் நலத்திட்ட உதவிகள், பென்னாகரம், பாப்பிரெட்டிப்பட்டி, காரிமங்கலம், நல்லம்பள்ளி, அரூர், பாலக்கோடு, தருமபுரி வட்டங்களில் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் பழங்குடியின மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம், கலைஞரின் கனவு இல்லத் திட்டத்தின்கீழ் வீடுகள் வழங்குதல், ஊரக குடியிருப்புகள் பழுது நீக்கத் திட்டத்தின்கீழ் பழுது நீக்கி வீடு வழங்குதல், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில், இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்குதல்;

என மொத்தம் 2,637 பயனாளிகளுக்கு ரூ.56.04 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் தருமபுரி மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாக்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டி, திறந்து வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கிய விவரங்கள்

தருமபுரி மாவட்ட மக்களின் நலன் கருதியும், மாவட்டத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்திடும் நோக்கிலும், கடந்த 30.09.2021, 20.01.2022, 11.03.2024 ஆகிய தேதிகளில் நடைபெற்ற அரசு விழாக்களில், மாண்புமிகு

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.235.53 கோடிச் செலவிலான 937 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, ரூ.72.87 கோடி மதிப்பீட்டிலான 642 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.213.18 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை 17,443 பயனாளிகளுக்கு வழங்கினார். மேலும், 30.09.2021 அன்று வத்தல் மலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 2,116 மலைவாழ் மக்கள், பிற பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.16.47 கோடிச் செலவில் நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

2024-2025ஆம் ஆண்டிற்குத் தருமபுரி மாவட்டத்திற்கு நிதிநிலை அறிக்கை, துறைகளின் மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்ட புதிய திட்டங்களின் விவரங்கள்

ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் கீழ், ரூ.7,890 கோடி நிதி ஒதுக்கீட்டில் தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் பயன்பெறும் வகையில் இரண்டாம் கட்டப் பணிகளைச் செயல்படுத்துதல், தருமபுரி மாவட்டம், சோகத்தூர் அரசு பட்டுப் பண்ணை வளாகத்தில் மின்னணு ஏலமுறை உட்பட நவீன அம்சங்களுடன் கூடிய ஒருங்கிணைந்த பட்டுக்கூடு அங்காடி வளாகம், தருமபுரி நகராட்சியில் புதிய பயோகேஸ் மையம், பாலக்கோடு பேரூராட்சியில் புதிய சந்தை, பென்னாகரத்தில் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவர் விடுதி, பாப்பிரெட்டிபட்டி அரசு மருத்துவமனையில் உட்கட்டமைப்பு, உபகரணங்களுடன் கூடிய விபத்து பிரிவு, தருமபுரி மாவட்ட மக்களின் நலனிற்காக நடமாடும் கண் மருத்துவப் பிரிவு, தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மூன்றாம் பாலினத்தவர்களுக்கான பன்னோக்கு மருத்துவ மையம், மாரண்டஹள்ளி சுகாதார செவிலியருக்கான பயிற்சிப் பள்ளிக்குக் கூடுதல் விடுதிக் கட்டடம், பென்னாகரம் சட்டமன்றத் தொகுதியில் முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம் போன்ற பல்வேறு திட்டங்களைத் தருமபுரி மாவட்ட மக்களின் நலனிற்காகச் செயல்படுத்திட இந்த நிதியாண்டில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இப்பணிகளுக்கான அரசாணைகள் வெளியிடப்பட்டு விரைவில் பணிகள் தொடங்கப்படும்.

மக்களுடன் முதல்வர் ” திட்டத்தை ஊரகப் பகுதிகளிலும் விரிவுபடுத்தி, 12,500 கிராம ஊராட்சிகளில் 2,500 முகாம்களின் மூலம் 15 அரசுத் துறைகளின் வாயிலாக 44 சேவைகளை மக்களுக்கு வழங்கும் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் “மக்களுடன்

முதல்வர்” திட்டத்தை ஊரகப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்தி, 12,500 கிராம ஊராட்சிகளில் 2,500 முகாம்களின் மூலம் 15 அரசுத் துறைகளின் வாயிலாக 44 சேவைகள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்து, மக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்று, மனுக்களைப் பதிவு செய்யும் சிறப்பு முகாமினைப் பார்வையிட்டு, பதிவு செய்ய வந்த மக்களிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்களைக் கேட்டறிந்தார்.

“மக்களுடன் முதல்வர்” திட்டம்

அரசுத் துறைகளை அன்றாடம் அணுகும் பொதுமக்களுக்கு, அரசின் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் அவர்களைச் சென்றுசேரும் வகையிலும், நிருவாகத்தில் வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்திடவும், திராவிட மாடல் ஆட்சியின் மற்றுமொரு மைல்கல்லாக “மக்களுடன் முதல்வர்” என்ற புதிய திட்டத்தை, மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், நகர்ப்புறங்களை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் செயல்படுத்திட சிறப்பு முகாம்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 18.12.2023 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், ஆவாரம்பாளையத்தில் தொடங்கி வைத்தார்.

“மக்களுடன் முதல்வர்” என்ற இப்புதிய திட்டத்தின்கீழ், பொதுமக்கள் அதிகமாக அணுகும் எரிசக்தித் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிருவாகத் துறை, ஆதிதிராவிடர் நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, காவல்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, கூட்டுறவுத் துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை ஆகிய 13 அரசுத் துறைகள் சார்ந்த கோரிக்கைகளைப் பெற்றுத் தீர்வு காண்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடிக் கண்காணிப்பில், அனைத்து நகர்ப்புறங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன. அனைத்து தரப்பு மக்களுக்கும் அரசுத் துறைகளின் சேவைகள் எளிதில் கிடைத்திடவும், தாமதங்களைத் தவிர்த்திட வேண்டும் என்பதும் தான் இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

“மக்களுடன் முதல்வர்” திட்டத்தின் முதற்கட்டமாக அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், நகர்புறங்களை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, இதுவரை 8.74 இலட்சம் மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளன.

ஊரகப் பகுதிகளில்
"மக்களுடன் முதல்வர்" திட்டம் விரிவாக்கம்

நகரப்பகுதிகளில் "மக்களுடன் முதல்வர்" திட்டத்திற்கு மக்களிடையே கிடைத்த வரவேற்பினை அடுத்து, அதனைத் தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளிலும் நடைமுறைப்படுத்திட திட்டமிட்டு, 11.07.2024 அன்று தருமபுரி மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 04.07.2024 அன்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, "மக்களுடன் முதல்வர்" திட்டத்தை ஊரகப் பகுதிகளிலும் விரிவுப்படுத்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் தருமபுரியில் தொடங்கி வைத்து, மக்களிடம் கோரிக்கை மனுக்களைப் பெற்று, மனுக்களை பதிவு செய்யும் சிறப்பு முகாமினைப் பார்வையிட்டு, பதிவு செய்ய வந்த மக்களிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்களைக் கேட்டறிந்தார். தொடர்ந்து, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், பயனாளிகளுக்குக் காப்பீட்டிற்கான அட்டைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். மேலும், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளையும் பார்வையிட்டார்.

ஊரகப்பகுதிகளில் மக்கள் பயன்பெறும் வகையில் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் கீழ் பொதுமக்கள் அதிகளவில் அணுகும் அரசுத் துறைகளான, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை, எரிசக்தித் துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, காவல்துறை, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடுத் துறை, வேளாண்மை-உழவர் நலத்துறை, கால்நடைப் பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, கூட்டுறவுத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை ஆகிய 15 துறைகள் சார்ந்த கோரிக்கைகளைப் பெற்று 30 தினங்களுக்குள் தீர்வு காணும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நேரடிக் கண்காணிப்பில் அனைத்து மாவட்டங்களிலும் சுமார் 2,500 சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை:

உங்கள் அனைவருக்கும் முதலில் என்னுடைய நன்றியை, வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு ஒவ்வொரு தொகுதிக்கும் சென்று மக்களை நான் நேரடியாகச் சந்தித்தேன்! அந்த நிகழ்ச்சிக்கு 'உங்கள் தொகுதியில் ஸ்டாலின்'! என்று பெயர் வைத்தோம்! கொளத்தூர் மட்டுமல்ல, அதாவது என்னுடைய தொகுதி கொளத்தூர் மட்டுமல்ல. தமிழ்நாட்டில் இருக்கும் அனைத்துத் தொகுதிகளும் என்னுடைய தொகுதிகள்தான் என்ற எண்ணத்துடன் அந்த பயணத்தைத் தொடங்கினேன். மேடையில் எனக்கு அருகில் ஒரு பெரிய பெட்டி வைத்து, அதில், பொதுமக்கள் தங்களுடைய தொகுதிக்கான தேவைகளை, கோரிக்கைகளை எழுதிப் போட வைத்தோம்.

ஆட்சிக்கு வந்த 100 நாட்களுக்குள் அதில் சாத்தியமாக இருக்கக்கூடிய அனைத்துக் கோரிக்கைகளையும் நிறைவேற்றி காட்டுவேன் என்று சொன்னேன். உங்கள் முன்னால் அந்த பெட்டியைப் பூட்டித் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை நிலையமான அண்ணா அறிவாலயத்தில் பாதுகாப்பாகக் கொண்டு போய் வைத்தோம். உடனே எதிர்க்கட்சிகள் என்ன பேசினார்கள்? "இவர்கள் ஆட்சிக்கு வரப்போவதும் இல்லை; இந்தப் பெட்டியும் திறக்கப் போவதும் இல்லை" என்ற இறுமாப்பில் கேலி செய்தார்கள், கிண்டல் செய்தார்கள். ஆனால், பொதுமக்களான நீங்கள் தி.மு.க. மீதும், என் மீதும் நம்பிக்கை வைத்து, அந்த கேலி மனிதர்களைத் தோற்கடித்து, எங்களுக்குப் பெரிய வெற்றியைத் தேடி தந்தீர்கள்!

ஆட்சிக்கு வந்ததும், உங்களுடைய மனுக்களைக் கவனிப்பதற்காகவே புதியதாக ஒரு துறையை உருவாக்கினேன். அந்தத் துறையின் பெயர் 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்'! என்னிடம் கொடுக்கப்பட்ட மனுக்களைத்

துறைவாரியாக பிரித்தோம். அதிலிருந்து, நடைமுறைச் சாத்தியம் உள்ள 2 இலட்சத்து 29 ஆயிரத்து 216 மனுக்களுக்கு உடனடியாகத் தீர்வு கண்டோம்! மக்கள் வைத்த கோரிக்கைகளில் சாத்தியம் உள்ள அனைத்தையும் நிறைவேற்றி இருக்கிறோம். தேர்தலுக்கு முன்னால் பெறப்பட்ட மனுக்களுக்குத் தீர்வு கண்டவுடன், எங்களுடைய கடமை முடிந்துவிட்டது என்று நாங்கள் நினைக்கவில்லை. இனிமேல்தான், கடமை தொடங்குகிறது என்று நினைத்து, உழைப்பைக் கொடுத்தோம்! அதனால்தான், தொடர்ந்து மனுக்களைப் பெற்றோம்! அதை முறைப்படுத்தினோம்! எப்படியெல்லாம் முறைப்படுத்தினோம் என்று சொல்ல வேண்டும் என்றால், முதலமைச்சரின் தனிப்பிரிவு, முதலமைச்சரின் உதவி மையம், ஒருங்கிணைக்கப்பட்ட குறைதீர்ப்பு மேலாண்மை அமைப்பு, உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை என்று எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து, “முதல்வரின் முகவரி” என்று புதியதாக ஒரு துறையை உருவாக்கினோம்.

பொதுமக்களின் கோரிக்கைகள் எந்த இடத்திலும் எங்களின் பார்வையில் இருந்து தவறிவிடக் கூடாது என்றுதான் இது எல்லாவற்றையும் ஒருங்கிணைத்தோம். முதலமைச்சரின் தனிப்பிரிவில் பெறப்படும் மனுக்கள் மட்டுமில்லாமல், இணையதளம், அஞ்சல், சமூக வலைதளம், மாவட்ட நிருவாகத்தின் மூலமாகத் தரப்படும் மனுக்கள், அமைச்சர்கள், மக்கள் பிரதிநிதிகளிடம் கொடுக்கப்படும் மனுக்கள், இதுபோல, எல்லா மனுக்களும் ஒரே இடத்திற்குச் சென்று சேருகிறது. மக்களால் தரப்படும் எல்லா மனுக்களையும் ஒரு குடையின்கீழ்க் கொண்டு வந்தோம். அனைத்து மக்களின் கோரிக்கைகளும் தலைமைச் செயலகத்திற்கு வந்துவிடுகிறது.

நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றது முதல், முதல்வரின் முகவரி துறையின்கீழ் தற்போது வரைக்கும் பெறப்பட்ட, 68 இலட்சத்து 30 ஆயிரத்து 281 மனுக்களில் 66 இலட்சத்து 25 ஆயிரத்து 304 மனுக்களுக்கு உரிய முறையில் தீர்வு கண்டிருக்கிறோம்! அதிலும், இந்த தருமபுரி மாவட்டத்தில் மட்டும், 72 ஆயிரத்து 438 மனுக்களுக்குச் சாதகமான முறையில் தீர்வு அளிக்கப்பட்டிருக்கிறது. இப்போது நான் சொன்னதை எல்லாம் நீங்கள் அரசுத் துறையின் அலுவலர்களிடம் சென்று மனுக்களைக் கொடுத்தது பற்றி, ஆனால் அந்த நிலையை மாற்றிப் பொதுமக்கள் அதிகமாக அணுகும் முக்கியமான 13 அரசுத் துறைகள், நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் நேரடியாகச் சென்று மக்களாகிய உங்களிடம் உங்கள் ஊரிலேயே மனுக்களைப் பெற்றுப் பதிவு செய்து அதற்கு 30 நாட்களுக்குள் தீர்வு காணும் வகையில் நான் உத்தரவிட்டேன். அதன்படி உருவானதுதான் இந்த மக்களுடன் முதல்வர் திட்டம்.

முதற்கட்டமாக, மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள், நகர்ப்புறங்களை ஒட்டியிருக்கும் கிராம ஊராட்சிகளில் இந்த முகாம்கள் நடத்தப்பட்டன! இந்த முகாம்கள் வாயிலாகப் பெறப்பட்ட சுமார் 8 இலட்சத்து 74 ஆயிரம் மனுக்களுக்கு இதுவரைக்கும் தீர்வு கண்டிருக்கிறோம். இந்த தருமபுரி மாவட்டத்தில் நகரப் பகுதிகளில், 3 ஆயிரத்து 107 மனுக்கள் பெறப்பட்டு, 30 நாட்களில் 1,868 மனுக்களுக்குச் சாதகமான முறையில்தீர்வுஅளிக்கப்பட்டிருக்கிறது. இப்படி இந்தத் திட்டம் மக்களுக்குப் பயனளிக்கத் தொடங்கிய காரணத்தால்தான், இப்போது ஊரக ஊராட்சிகளுக்கும் விரிவு செய்திருக்கிறோம். அதைத் தொடங்கி வைக்கதான் நான் இங்கே வந்திருக்கிறேன்.

கடந்த முறை தேர்தல் பரப்புரைக்காக நான் வந்தேன். இப்போது, நீங்கள் கொடுத்த வெற்றிக்கு நன்றியாக உங்கள் மாவட்டத்திற்கான அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

ரூ.51 கோடிச் செலவில் அரூர் அரசு மருத்துவமனையின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

கடந்த சட்டமன்றத்தேர்தல் பரப்புரையின்போது கொடுத்த வாக்குறுதியான தருமபுரி – வெண்ணம்பட்டி சாலையில், புதிய இரயில் மேம்பாலம் ரூ.38 கோடிச் செலவில் அமைக்கப்படும்.

மோபிரிபட்டி–தொட்டம்பட்டியை இணைத்து, “அரூர் பேரூராட்சி”, “அரூர் நகராட்சியாக” தரம் உயர்த்தப்படும்.

பஞ்சப்பள்ளி, ராஜபாளையம் அணைக்கட்டுகள் ரூ.5.50 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்படும்.

சிட்லிங், அரசநத்தம் பகுதியில் பழங்குடியினர் உற்பத்தி செய்யும் ராகி, சாமை, வரகு ஆகியவற்றை மதிப்புக் கூட்டுப் பொருளாக்கக் கிடங்கு, பொதுச் செயலாக்க மையம் அமைக்கப்படும்.

தீர்த்தமலையில் துணை வேளாண்மை விரிவாக்க மையம் அமைக்கப்படும்.

இப்போது, இந்த விழா நடைபெற்றுக் கொண்டிருக்கும், பாளையம்புதூர் அரசு மேல்நிலைப்பள்ளியில், பழுதடைந்த நிலையில் இருக்கும் 4 வகுப்பறைகள், அதன் பழமை மாறாமல் புதுப்பிக்கப்படும்.

இந்த ஏழு அறிவிப்புகளுடன், இன்று காலை எனக்கு வரப்பெற்ற இந்தப் பகுதி மக்களின் கோரிக்கைகளை ஏற்று மொத்தம் 15 அறிவிப்புகள் இன்னும் சிறிது நேரத்தில் வெளியாகிவிடும்.

“மக்களிடம் செல் - மக்களைப் பற்றி அறிந்து கொள் - மக்களுக்காகச் செயல்படு!” இதுதான் பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும் எங்களுக்கு சொன்னது! இதுதான், அவர்கள் எங்களுக்கு அமைத்துக் கொடுத்த பாதை! வழிகாட்டு நெறிமுறை! அந்த அடிப்படையில்தான், ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் மக்களுக்கான திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்! அதன் பலனை மக்கள் எனக்கு எழுதும் கடிதங்கள் மூலமாக, நேரடியாக அவர்களைச் சந்தித்துப் பேசும் பொழுதும் நான் உணர்கிறேன்.

எடுத்துக்காட்டாக, உங்களிடம் ஒன்றிரண்டு கடிதத்தைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்றால், காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பூரணி என்பவர், தன்னுடைய வீட்டு வாசல் முன்பு கழிவுநீர் தேங்குவது தொடர்பாக எழுதியிருந்த மனுவுக்கு, ‘மக்களுடன் முதல்வர்’ திட்டத்தில் தீர்வு கண்டோம். அதற்கு நன்றி தெரிவித்து அவர்கள் எழுதிய கடிதத்தில், என்ன சொல்லியிருந்தார்கள் என்றால், இருதய நோயாளியான அவர்களுக்குத் தேவையான மருந்துகள், அரசு மருத்துவமனையிலேயே கிடைத்துவிடுவதாகவும், ஆனால், ஒரே ஒரு மாத்திரையை மட்டும் வெளியே வாங்க வேண்டிய நிலை இருப்பதாகவும் சொல்லியிருந்தார். அந்த மாத்திரையின் விலை, ஒரு அட்டை ரூ.215. ஒரு நாளைக்கு இரண்டு மாத்திரை என்று, ஒரு மாதத்திற்கு 60 மாத்திரைச் சாப்பிட வேண்டும்.

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் கொடுக்கும் ஆயிரம் ரூபாய் இதற்கு மிகவும் உதவியாக இருப்பதாகவும், கடந்த எட்டு மாதமாக, இந்தத் தொகையில்தான் மருந்து வாங்குவதாகவும் அந்தக் கடிதத்தில் அவர்கள் சொல்லியிருந்தார்கள்.

அடுத்து, தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த ஜீனி வேதமுத்து என்பவர் எழுதிய கடிதத்தில், கடந்த இருபது ஆண்டுகளாகச் செப்பனிடப்படாமல் இருந்த கைலாசபுரம் – செட்டியூரணி சாலையைச் சீரமைத்துக் கொடுத்ததற்கு நன்றி சொல்லியிருந்தார். "சொன்னதைச் செய்வோம்! செய்வதைத்தான் சொல்வோம்!" என்று தலைவர் கலைஞர் சொன்னார்! இந்தத் திராவிட மாடல் அரசைப் பொருத்தவரைக்கும் "சொல்லாததையும் செய்வோம்! சொல்லாமலும் செய்வோம்!". பெரிய பெரிய திட்டங்களை, மாவட்டத்திற்கு தேவையானவற்றைத் திட்டமிட்டுச் செய்து தருகிறோம். பொதுமக்களின் தனிப்பட்ட கோரிக்கைகளையும் கேட்டு, செயல்படுத்தி கொடுப்பது மூலமாக, எல்லோரும் மனநிறைவு அடையும் ஆட்சியாக நம்முடைய கழக அரசு செயல்பட்டு வருகிறது. பல்வேறு நலத்திட்டங்கள் மூலமாக ஒவ்வொரு வீட்டிற்கும், ஏதாவது ஒரு பயன்கிடைக்க அதில் அவர்கள் பயனடைந்து கொண்டு வருகிறார்கள். அதேபோன்று 'மக்களுடன் முதல்வர்' திட்டத்தின் மூலமாக 'யாருக்கும் எந்தக் குறையும் இல்லை' என்ற நிலையை உருவாக்க நாங்கள் இப்போது பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

இப்படி மக்களுக்காகச் செயல்படுவது எதிர்க்கட்சிகளுக்கு பொறாமையையும், எரிச்சலையும் ஏற்படுத்துகிறது. அதனால்தான், அவதூறுகள் பொய்ப் பிரச்சாரங்கள் மூலமாக இந்த ஆட்சிக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்த நினைக்கிறார்கள். வாக்களித்தவர்கள், வாக்களிக்க மறந்தவர்கள் என்ற எந்த வேறுபாடும் பார்க்காமல் அனைத்து மக்களுக்குமான அரசாக நாம் செயல்பட்டு வருகிறோம்! ஆனால், இதே பெருந்தன்மையை மற்றவர்களிடம் பார்க்க முடியவில்லை! தமிழ்நாட்டில் தொடர் தோல்வி, படுதோல்வி அடைந்த பிறகும் அதிலிருந்து ஒன்றிய அரசு இன்னும் பாடம் கற்றுக் கொள்ளவில்லை! தமிழ்நாட்டின் முக்கிய கோரிக்கையாக இருக்கும் மெட்ரோ இரயில்

போன்ற திட்டங்களுக்குக் கூட நிதி ஒதுக்க ஒன்றிய அரசுக்கு மனமில்லை! நல்ல குணமில்லை! பாடம் கற்றுக்கொள்வதற்கு நினைப்பும் இல்லை! தங்களின் பத்து வருட காலத்தில் தமிழ்நாட்டில் எந்த ஒரு பெரிய திட்டமும் செய்யவில்லை.

ஒன்றிய அரசு என்பது, விருப்பு வெறுப்புகளைக் கடந்து, அனைத்து மக்களுக்குமான பொதுவான அரசாகச் செயல்பட வேண்டும் என்பதை இனியாவது அவர்கள் உணர வேண்டும் என்று தமிழ்நாட்டு மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்! தி.மு.க.வைப் பொருத்தவரைக்கும் நாங்கள் மக்களுடன் இருக்கிறோம். மக்களாகிய நீங்கள் எங்களுடன் இருக்கின்றீர்கள். இதுதான் எங்களுடைய வெற்றியின் ரகசியம்! இதுதான் தமிழ்நாட்டின் வளர்ச்சியின் ரகசியம்! மக்களுக்கு உண்மையாக இருந்து, உண்மையான வளர்ச்சியை உருவாக்குவோம்! இந்தியாவின் முதன்மை மாநிலமாக இருக்கின்ற தமிழ்நாட்டை உன்னதமான சிறந்த மாநிலமாக உருவாக்கிக் காட்டுவோம், உருவாக்கிக் காட்டுவோம் என்று உறுதி கூறி என் உரையை நிறைவு செய்கிறேன்.

தமிழ்நாட்டிற்குக் காவிரி நீரை உடனடியாக விடுவித்திட கருநாடக அரசுக்கு ஆணையிடக்கோரி தீர்மானம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
16.07.2024 அன்று காவிரி நதிநீர்ப் பிரச்சினை தொடர்பான
சட்டமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஆற்றிய உரை - 16.07.2024

அனைவருக்கும் வணக்கம்.

காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் தமிழ்நாட்டின் உரிமைகளைப் பாதுகாத்திடும் வகையில் நடைபெறும் இந்த அனைத்துச் சட்டமன்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள

மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் அவர்களே,

சட்டமன்ற அனைத்துக் கட்சித் தலைவர்களே,

தலைமைச் செயலாளர் அவர்களே,

அரசுச் செயலாளர் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்களே,

உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவிரி நடுவர் மன்றத்தின் இறுதி ஆணையினையும், மாண்பமை உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பினையும் பின்பற்ற மறுத்து, காவிரி ஒழுங்காற்றுக் குழுவின் ஆணையின்படி நமக்குக் கிடைக்க வேண்டிய குறைந்த அளவு தண்ணீரைக் கூட கருநாடக அரசு வழங்க மறுத்து வருகிறது.

இதனை முறியடித்து, தமிழ்நாட்டின் உரிமைகளை நிலைநாட்டி, காவிரி டெல்டாப் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்குத் தண்ணீர் கிடைக்கச் செய்வதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி பல ஆக்கப்பூர்வமான கருத்துக்களை இங்கு நீங்கள் தெரிவித்து இருக்கின்றீர்கள். அதற்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழ்நாட்டுக்குச் சட்டப்பூர்வமாக உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி, கிடைக்க வேண்டிய நீரினைச் சென்ற ஆண்டில் கருநாடக அரசு விடுவிக்காததால், வேளாண் பெருமக்களுக்கு கடும் பாதிப்பு ஏற்பட்டது. இதுகுறித்து உச்சநீதிமன்றத்தை நாடித் தான் நீரைப் பெற்றோம்.

இந்த ஆண்டில் தென்மேற்குப் பருவமழை சாதகமாக இருக்கக்கூடிய சூழ்நிலையிலும், கருநாடகா அரசு இவ்வாறு நடந்து கொள்வதை எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

எனவே, இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில், ஒருமனதாக எடுக்கப்பட்டுள்ள இந்த முடிவுகளை நான் தீர்மானங்களாக இப்பொழுது படிக்கின்றேன்:

தீர்மானங்கள்

- காவிரி நடுவர் மன்றம் 05.02.2007 அன்று அளித்த இறுதித் தீர்ப்பையும், மாண்பமை உச்சநீதிமன்றம் 16.02.2018 அன்று அளித்த தீர்ப்பையும் அவமதிக்கும் வகையில், காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு தற்போது ஆணையிட்டுள்ளவாறு தமிழ்நாட்டிற்குக் காவிரி நீரைத் தர முடியாது என்று மறுத்துள்ள கருநாடக அரசிற்கு இந்த அனைத்துச் சட்டமன்றக் கட்சிக் கூட்டம் தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.
- காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு, மாண்பமை உச்சநீதிமன்ற ஆணையின்படி, தமிழ்நாட்டிற்குக் காவிரி நீரை உடனடியாக விடுவித்திட கருநாடக

அரசுக்கு ஆணையிடுமாறு காவிரி நதிநீர் மேலாண்மை ஆணையத்தினை இந்த அனைத்துச் சட்டமன்றக் கட்சிக் கூட்டம் வலியுறுத்துகிறது.

- காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு, மாண்பமை உச்சநீதிமன்ற ஆணையின்படி, தமிழ்நாடு பெற வேண்டிய நீரை உடனடியாகப் பெறுவதற்கு, தேவைப்படின், மாண்பமை உச்சநீதிமன்றத்தை நாடி, அனைத்துச் சட்டப்பூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள இக்கூட்டம் ஒருமனதாகத் தீர்மானிக்கிறது.

இந்தத் தீர்மானங்களின் அடிப்படையில் தேவைப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் முழுமூச்சோடு மேற்கொண்டு, காவிரி டெல்டா விவசாயிகளின் உரிமைகளை இந்த அரசு நிலைநாட்டும் என உறுதியளித்து, எனது உரையை நிறைவு செய்கின்றேன்.

தமிழ்நாடு அரசு அகில இந்தியக் குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மையத்தில் பயிற்சிபெற்ற 87 ஆர்வலர்கள் முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி

தமிழ்நாடு அரசால் நிர்வகிக்கப்படும் சென்னையிலுள்ள அகில இந்தியக் குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மையத்தில், மத்திய தேர்வாணையத்தால் நடத்தப்படும், அகில இந்தியக் குடிமைப் பணிகளுக்கான தேர்வுகளை எதிர்கொள்ளும் ஆர்வலர்களுக்கு முதல்நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு, மாதிரி ஆளுமைத் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் அளிக்கப்பட்டு வருகின்றன. கிராமப்புரங்களில் உள்ள ஏழை எளிய குடும்பங்களைச் சார்ந்த ஆர்வலர்கள் பயன்பெறும் வகையில், இப்பயிற்சி மையம் கடந்த 58 ஆண்டுகளாக இலவச பயிற்சியினை வழங்கி வருகிறது.

அமைதியான சூழலில் அமைந்துள்ள இப்பயிற்சி மையத்தில் வகுப்பறைகள், தங்கும் இடவசதி, தரமான உணவு, கணினி மயமாக்கப்பட்ட நூலகம் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் அமைந்துள்ளன. சிறந்த பயிற்றுநர்களைக் கொண்டு பயிற்சி அளிப்பதுடன், ஆர்வலர்கள் தங்களைத் தேர்வுக்குத் தயார்படுத்தி கொள்ளும் வகையில் மாதிரித் தேர்வுகளும் நடத்தப்படுகின்றன.

கடந்த 16.06.2024 அன்று நடைபெற்ற குடிமைப்பணி முதல்நிலைத் தேர்வில் இப்பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்றுத் தேர்வு எழுதிய தேர்வர்களில் 87 ஆர்வலர்கள் தேர்ச்சிப் பெற்றுள்ளார்கள். இவர்களில் 28 பெண் ஆர்வலர்கள் ஒரு மாற்றுத்திறனாளி என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கு 8 மாத காலங்களுக்கு உண்டி உறைவிடத்துடன் கூடிய அறைகள் வழங்கப்பட்டுக் கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. முழுநேர ஆர்வலர்களுக்கு நடப்பாண்டில் 36 நேரடித் தொடர் தேர்வுகள், பகுதிநேர ஆர்வலர்களுக்கு 21 நேரடித் தொடர் தேர்வுகள் நடத்தப்பட்டன. மேலும், இணையவழியில் 06.11.2023 முதல் 16.06.2024 வரை 06 தொடர் தேர்வுகள் (Online Test Series) நடத்தப்பட்டன.

குடிமைப்பணி முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ள ஆர்வலர்களுக்கு ஜூலை 2024 முதல் செப்டம்பர்-2024 வரை மூன்று மாதங்களுக்கு முதன்மைத் தேர்வுப் பயிற்சி வழங்கப்படஉள்ளது. இப்பயிற்சி மையத்தில் பயிற்சி பெற்ற ஆர்வலர்கள் மட்டுமன்றி, குடிமைப்பணி முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற தமிழ்நாட்டைச் சார்ந்த இதர ஆர்வலர்களும் இப்பயிற்சி மையத்தில் சேர்ந்து பயிற்சி பெறலாம். பயிற்சி பெறக்கூடிய மூன்று மாத காலத்திற்கும் ஊக்கத் தொகையாக ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) "நான் முதல்வன்" திட்டத்தின்கீழ் வழங்கப்படும்.

தமிழ்நாடு மதுவிலக்குத் திருத்தச் சட்ட மசோதா 2024 அமலாக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவிப்பு – 13.07.2024

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், கடந்த மாதம் மெத்தனால் கலந்த சாராயம் அருந்தியதால் ஏற்பட்ட உயிரிழப்புகளைத் தொடர்ந்து, இனிக் கள்ளச்சாராயம் காய்ச்சுதல், விற்பனை செய்தல் முதலிய குற்றச்செயல்களை முற்றிலும் ஒழிப்பதற்காகப் பல்வேறு கடுமையான நடவடிக்கைகளை எடுத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டிருந்தார்கள். அதன் ஒரு பகுதியாக, கள்ளச்சாராயம் காய்ச்சுவோர், விற்பனை செய்வோர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்திடும் வகையில், ஏற்கெனவே நடைமுறையிலுள்ள 1937ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தில் பல்வேறு திருத்தங்கள் கொண்டுவரும் வகையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் புதிய சட்ட முன்வடிவு கொண்டு வரப்படுமென மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்.

அதன்படி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 29.06.2024 அன்று, தமிழ்நாடு மதுவிலக்குத் திருத்தச் சட்ட மசோதா 2024 நிறைவேற்றப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அச்சட்ட மசோதாவிற்கு மாண்புமிகு ஆளுநர் அவர்களால் 11.07.2024 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டு, அது தொடர்பான விவரங்கள் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு கொண்டு வந்துள்ள புதிய சட்டத்திருத்தத்தின் விவரங்கள் பின்வருமாறு.

1937ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின்கீழ்,

- பிரிவு 4(1) (aaa) - (1) 100 லிட்டருக்குமேல் சட்ட விரோதமான மதுபானம் இறக்குமதி, ஏற்றுமதி, போக்குவரத்து அல்லது வைத்திருத்தல்;

  பிரிவு 4(1)(b) - (2) சட்ட விரோதமான மதுபானம் தயாரித்தல்;

  பிரிவு 4(1)(f)-(3) சட்டவிரோதமான மதுபான ஆலை (Illicit distillery) அல்லது மதுபான நொதி வடிப்பாலையினைக் (Brewery) கட்டுதல்;

  பிரிவு 4(1)(h)-(4) விற்பனைக்கான சட்ட விரோதமான மதுபானங்களைக் குப்பியில் அடைத்தல் - ஆகியவற்றிற்கு அதிகபட்சமாக மூன்று ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை, ரூ.10,000 வரையிலான அபராதம் என தற்போது விதிக்கப்பட்டு வரும் தண்டனை, திருத்தப்பட்ட சட்டத்தின்படி, மூன்று ஆண்டுகள் முதல் ஏழு ஆண்டுகளுக்குக் குறைவில்லாத கடுங்காவல் சிறை தண்டனை, இரண்டு இலட்சம் ரூபாய் முதல் மூன்று இலட்சம் ரூபாய் வரையிலான அபராதம் விதிக்கப்படும்.

- பிரிவு-4(1)(aa) – ஐம்பது லிட்டருக்குமேல் நூறு லிட்டர் வரையிலான சட்டவிரோதமான மதுபானம் இறக்குமதி, ஏற்றுமதி, போக்குவரத்து அல்லது வைத்திருத்தல் குற்றத்திற்கு அதிகபட்சமாக 6 மாதங்கள் வரையிலான சிறைத்தண்டனை அல்லது ரூ.2,000 வரையிலான அபராதம் எனத் தற்போது விதிக்கப்பட்டு வரும் தண்டனை திருத்தப்பட்ட சட்டத்தின்படி, பிரிவு4(1)(B)ன்படி, இரண்டு ஆண்டுகள் முதல் ஐந்து ஆண்டுகள் வரையிலான கடுங்காவல் சிறைதண்டனை, ஒரு இலட்சம் ரூபாய் முதல் இரண்டு இலட்சம் ரூபாய் வரையிலான அபராதம் விதிக்கப்படும்.

- பிரிவு 4(1)ன்கீழ் ஐம்பது லிட்டர் வரையிலான சட்ட விரோதமான மதுபானம் இறக்குமதி, ஏற்றுமதி, போக்குவரத்து அல்லது வைத்திருத்தல்; (2) சட்ட விரோதமான மதுபானம் அருந்துதல், வாங்குதல்; (3) மேற்கண்ட குற்றங்கள் புரிவதற்குப் பணம் செலவழித்தல்; (4) உரிமம் இல்லாத இடங்களில் மது அருந்த அனுமதித்தல் ஆகிய குற்றங்களுக்கு அதிகபட்சமாக மூன்று ஆண்டுகள் வரையிலான சிறைத்தண்டனை அல்லது ரூ.1,000 வரையிலான அபராதம் என இதுவரை விதிக்கப்பட்டு வந்த தண்டனை, இனித் திருத்தப்பட்ட சட்டத்தில், பிரிவு 4(1)(C)ன்படி, ஓராண்டுக்குக் குறையாத மூன்று ஆண்டுகள் வரையிலான

சிறைத் தண்டனை, ரூ.50,000 முதல் ஒரு இலட்சம் ரூபாய் வரையிலான அபராதம் விதிக்கப்படும்.

- இந்தியாவில் தயாரிக்கப்பட்ட வெளிநாட்டு வகை மதுபானம், வெளிநாட்டு மதுபானம், நொதிபானம் (Fermented Liquor), நொதித்த பழரச மதுவகை (Fermented Fruit Juice Wine) போன்ற அறிவிக்கப்பட்ட மதுபானங்களின் போக்குவரத்து, வைத்திருத்தல், அருந்துதல் தொடர்பான குற்றங்களுக்குச் சட்ட விரோதமான மதுபானம் வைத்திருத்தல், அருந்துதல், போக்குவரத்து, ஆகியவற்றுக்குப் பொருந்தக்கூடிய அபராதம் விதிக்கப்பட்டு வந்த தண்டனை, இனித் திருத்தப்பட்ட சட்டத்தில், பிரிவு4(1)(c)-இன் வரம்புரையின்படி, ஓராண்டு வரையிலான சிறைத்தண்டனை அல்லது இருபத்தைந்தாயிரம் ரூபாய் முதல் ஐம்பதாயிரம் ரூபாய் வரையிலான அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

- பிரிவு-4 (1-A)(i)ன்படி மதுவை உட்கொள்வதால் இறப்பை ஏற்படுத்தும் சட்ட விரோதமான மதுபானம் தொடர்புடைய குற்றங்களுக்கு, இதுவரை ஆயுட்காலத்திற்கு கடுங்காவல் சிறைத்தண்டனை, ஐந்தாயிரம் ரூபாய்க்குக் குறையாத அபராதம் விதிக்கப்பட்டு வந்ததற்குப் பதிலாக, இனி ஆயுட்காலத்திற்குக் கடுங்காவல் சிறைத்தண்டனை, பத்து இலட்சம் ரூபாய்க்குக் குறையாத அபராதம் விதிக்கப்படும்.

- பிரிவு 4(1-A)(ii)ன்படி மதுவை உட்கொள்வதால் இறப்பை ஏற்படுத்தாத பிற கடும் பாதிப்புகளை ஏற்படுத்தும் சட்டவிரோதமான மதுபானம் தொடர்புடைய குற்றங்களுக்கு, இதுவரை விதிக்கப்பட்டு வந்த பத்து ஆண்டுகள் வரையிலான கடுங்காவல் சிறைத்தண்டனை, ஏழாயிரம் ரூபாய் வரையிலான அபராதம், இனி ஐந்து முதல் பத்து ஆண்டுகள் வரையிலான கடுங்காவல் சிறைத்தண்டனை, ஐந்து இலட்சம் முதல் பத்து இலட்சம் ரூபாய் வரையிலான அபராதம் என விதிக்கப்படும்.

- பிரிவு 5ன்படி, மனிதர்கள் அருந்துவதற்கு ஏற்றத்தக்க வகையில் இயல்பு மாற்றப்பட்ட சாராவியை (denatured spirit) மாற்றினால் அல்லது மாற்ற முயற்சி செய்தால், அதற்கு இதுவரை மூன்று ஆண்டுகள் வரையிலான கடுங்காவல் சிறைத்தண்டனை, பத்தாயிரம் ரூபாய் வரையிலான அபராதம் விதிக்கப்பட்டு வந்தது. இனி மூன்று முதல் ஏழு ஆண்டுகள் வரையிலான கடுங்காவல் சிறைத்தண்டனை, இரண்டு இலட்சம் முதல் மூன்று இலட்சம் ரூபாய் வரையிலான அபராதம் விதிக்கப்படும்.

- பிரிவு 5ஏ-யின்படி, மது அருந்துவதற்கு உரிமம் இல்லாத இடங்களைப் பயன்படுத்தும் குற்றத்திற்குப் புதிய பிரிவாக, அந்தக் குற்றத்திற்குப் பயன்படுத்தப்பட்ட இடம் வேறு எவரும் பயன்படுத்தாமல் தடுப்பதற்காகப் பூட்டப்பட்டு, சீல் வைக்கப்படும்.

- பிரிவு 6இன்படி, மதுபானம் தொடர்பான விளம்பரங்களைச் செய்தல் குற்றத்திற்கு, ஆறு மாதங்கள் வரையிலான சிறைத் தண்டனை அல்லது ஆயிரம் ரூபாய் வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்பட்டு வந்தது. இனிமேல், திருத்தப்பட்ட சட்டத்தின்படி, இரண்டு முதல் ஐந்து ஆண்டுகள் வரையிலான கடுங்காவல் சிறைத் தண்டனை, ஒரு இலட்சம் முதல் இரண்டு இலட்சம் ரூபாய் வரையிலான அபராதம் விதிக்கப்படும்.

- பிரிவு 7இன்படி, கூட்டுச்சதி குற்றத்திற்கு, 4ஆம் பிரிவின்கீழ் பெருங்குற்றங்களுக்காக மூன்று ஆண்டுகள் வரையிலான கடுங்காவல் சிறைத் தண்டனை மற்றும் பத்தாயிரம் ரூபாய் வரையிலான அபராதம், 4ஆம் பிரிவின் கீழ் சிறிய குற்றங்களுக்கு மூன்று மாதங்கள் வரையிலான சிறைத் தண்டனை அல்லது ஆயிரம் ரூபாய் வரையிலான அபராதம் ஆகியவை விதிக்கப்பட்டு வந்தன. இனித் திருத்தப்பட்ட சட்டத்தின்படி, 4ஆம் பிரிவின் கீழ்க் குற்றத்திற்காகப் பரிந்துரைக்கப்பட்ட அதே தண்டனை, சட்டத்தின் வகை முறைகளைத் தவிர்க்க அல்லது பயனிழக்கச் செய்ய சதி செய்ததற்காக ஒன்று முதல் மூன்று ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை, ஐம்பது ஆயிரம் ரூபாய் முதல் ஒரு இலட்சம் ரூபாய் வரையிலான அபராதம் விதிக்கப்படும்.

- பிரிவு 11இன் கீழ், இச்சட்டத்தில் வேறுவகையில் வகை செய்யப்படாத குற்றங்களுக்கு இதுவரை ஆறு மாதங்கள் வரை சிறைத்தண்டனை அல்லது ரூ.500 வரை அபராதம் அல்லது

இரண்டும் என விதிக்கப்பட்டு வந்த தண்டனை, இனி ஓராண்டு முதல் மூன்று ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை, ரூ.50,000 முதல் ஒரு இலட்சம் ரூபாய் வரை அபராதம் என விதிக்கப்படும்.

❖ பிரிவு 24-Dயின்படி, குற்றச்செயல்களை இணக்கமாகத் தீர்த்துக் கொள்வதற்கான அதிகாரம் 10,000 ரூபாய்க்கு மேற்படாமல் ஆனால், ரூ.1,000க்குக் குறையாமல் பெருங்குற்றங்களைத் தவிர இதரக் குற்றச் செயல்களை இணக்கமாகத் தீர்த்துக் கொள்வதற்குக் கூட்டுக் கட்டணம் விதிக்கப்பட்டது. புதிய திருத்தச் சட்டத்தின்படி, 25,000 ரூபாய்க்கு மேற்படாமல் ஆனால், ரூ.1,000க்குக் குறையாமல் பெருங் குற்றங்களைத் தவிர இதர குற்றச் செயல்களை இணக்கமாகத் தீர்த்துக் கொள்வதற்குக் கூட்டுக் கட்டணம் விதிக்கப்படும்.

இதுதவிர, மேற்கூறிய குற்றங்களில் பயன்படுத்தப்படும் வாகனங்கள் உள்ளிட்ட அனைத்து அசையும் சொத்துக்களும் பறிமுதல் செய்யப்படும்.

கள்ளச்சாராயம் தொடர்பான மோசமான குற்றச்செயல்களில் தொடர்ந்து ஈடுபடுபவர்களிடம் இருந்து அவர்களது நன்னடத்தைக்கான பிணையப் பத்திரத்தைப் பெற இச்சட்டத்தின் கீழ் நிர்வாக நடுவருக்கு (Executive Magistrate) அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய சட்டத்தின்கீழ் மோசமான குற்றச்செயல்களில் ஈடுபட்டு, ஏற்கெனவே தண்டிக்கப்பட்ட ஒரு நபர் மீண்டும் தண்டிக்கப்படும்போது, அந்த நபரின் சிறைவாசம் முடிந்த பின்பு, அவரது தற்போதைய வசிப்பிடப் பகுதியிலிருந்து அவர் வெளியேறி வேறொரு மாவட்டத்திற்கு அல்லது வேறொரு பகுதிக்குச் சென்று வசித்திட உத்தரவு பிறப்பிக்குமாறு மதுவிலக்கு அலுவலர்கள் நீதிமன்றத்தில் விண்ணப்பிக்க இத்திருத்தச் சட்டம் வழிவகை செய்கிறது.

மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகளுக்குக் கடுங்காவல் சிறைத்தண்டனை வழங்கக்கூடிய குற்றங்கள், பிணையில் விடுவிக்க முடியாத குற்றங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

மேலும், இச்சட்டத் திருத்தத்தின்படி, குற்றம் சாட்டப்பட்டவர்கள் எளிதில் பிணையில் வெளியில் வர முடியாதவாறு கடும் சட்டப்பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது. அரசு தரப்பு வழக்கறிஞரின் சம்மதமின்றிப் பிணை வழங்க இயலாத வகையில் இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ■

படமும்/செய்தியும்

பருவமழை முன்னெச்சரிக்கை உள்ளிட்ட பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகள் குறித்து ஆய்வுக் கூட்டம்

தலைமைச் செயலகத்தில், தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் 13.07.2024 அன்று சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் பருவமழை முன்னெச்சரிக்கை உள்ளிட்ட பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகள் குறித்து அரசு உயர் அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

திருநங்கை சந்தியா தேவி அவர்களுக்கு 2024ஆம் ஆண்டிற்கான சிறந்த திருநங்கை விருது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வழங்கினார் - 29.07.2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 29.07.2024 அன்று தலைமைச் செயலகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் திருநங்கைகளின் நலனிற்காகச் சிறப்பான முறையில் சேவை புரிந்ததற்கான 2024ஆம் ஆண்டிற்கான சிறந்த திருநங்கை விருதினைக் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த திருநங்கை சந்தியா தேவி அவர்களுக்கு வழங்கினார்கள்.

திருநங்கையர்களின் நலன் காத்திட கழக அரசு செயல்படுத்தி வரும் நலத்திட்டங்கள்

மூன்றாம் பாலினத்தவர் என்ற பெயருக்கு மாற்றாக அவர்களின் சுயமரியாதையைக் காக்கும் வகையில் "திருநங்கை" என்ற பெயரினை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அறிமுகப்படுத்தினார். திருநங்கைகளுக்கு சமூக, பொருளாதார ஆதரவை வழங்கி அவர்களுக்கான நலத்திட்டங்களை செயல்படுத்திட 2008ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு திருநங்கைகள் நலவாரியத்தைத் தோற்றுவித்தார். அந்நலவாரியத்தின் வாயிலாக அவர்களுக்கு உயர்கல்விக்கான உதவித் தொகை, தொழில் சார்ந்த திறன் மேம்பாட்டுப் பயிற்சி, சுயதொழில் புரிந்திட மானியம், 40 வயதிற்கு மேற்பட்ட ஆதரவற்ற திருநங்கைகளுக்கு ரூ.1,500 மாதாந்திர ஓய்வூதியத் தொகை, திருநங்கைகள் உயர்கல்வி பயின்றிடக் கல்விக் கனவுத் திட்டம் போன்ற பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுநாள்வரை 9,080 திருநங்கைகளுக்கு நல வாரியத்தின் மூலமாக அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளதோடு, 617 திருநங்கைகளுக்கு சுயதொழில் புரிய மானியமும், 1,599 ஆதரவற்ற திருநங்கைகளுக்கு மாதாந்திர ஓய்வூதியமும், கட்டணமில்லாப் பேருந்துப் பயணத் திட்டமான விடியல் பயணத் திட்டத்தில் திருநங்கைகள் 29.74 இலட்சம் கட்டணமில்லாப் பேருந்துப் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

சிறந்த திருநங்கை விருது

திருநங்கைகளின் நலனிற்காகச் சிறப்பான முறையில் சேவை புரிந்து, அவர்களுள் முன் மாதிரியாக திகழும் திருநங்கை ஒருவர், மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழுவால் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வோர் ஆண்டும் திருநங்கைகள் தினமான ஏப்ரல் 15ஆம் நாளில் அவர்களைச் சிறப்பிக்கும் பொருட்டு, சிறந்த திருநங்கை விருது கடந்த 2021ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதிற்கு தேர்ந்தெடுக்கப்படும் திருநங்கைக்கு 1 இலட்சம் ரூபாய்க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளையைச் சேர்ந்த திருநங்கை சந்தியா தேவி அவர்கள் பூ கட்டும் தொழில் செய்து தன் வாழ்க்கையை நடத்தி வருகிறார். வில்லிசையில் ஆர்வம் ஏற்பட்டுப் புராணக் கதைகளைப் படித்துத் தன் தனித் திறமையால் 1,000க்கும் மேற்பட்ட வில்லிசை நிகழ்ச்சிகளைத் தமிழ்நாடு, கேரளாவில் நடத்தியுள்ளார். வில்லிசை நிகழ்ச்சி மூலம் கொரோனா விழிப்புணர்வு, சமூக நலத் திட்டங்கள், வரதட்சணைத் தடுப்பு, பெண்கள் வன்கொடுமைத் தடுப்பு சட்டம் போன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார். பல திருநங்கைகளுக்கு அவர்கள் சுயமாக வருமானம் ஈட்டும் வகையில் வில்லிசையைக் கற்றுக் கொடுத்து கிராமிய கலைகளில் ஈடுபட உதவி வருகிறார். தோவாளையைச் சார்ந்த 9ஆம் வகுப்பு படிக்கும் ஒரு ஏழை சிறுவனின் படிப்பிற்கான அனைத்து செலவுகளையும் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளதோடு, 8 வயது மனவளர்ச்சி குன்றிய ஒரு குழந்தையைத் தத்தெடுத்து பராமரித்து வருகிறார்.

இவ்வாறு, திருநங்கைகள் சமூகத்திற்கு முன்மாதிரியாகத் திகழ்ந்து, திருநங்கைகளின் முன்னேற்றத்திற்காக வில்லிசையின் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்திச் சேவை புரிந்துவரும் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த திருநங்கை சந்தியா தேவி அவர்கள் 2024ஆம் ஆண்டிற்கான சிறந்த திருநங்கை விருதிற்கு தேர்வு செய்யப்பட்டார். அவரது சேவையைப் பாராட்டி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருநங்கை சந்தியா தேவி அவர்களுக்குச் சிறந்த திருநங்கை விருது, ரூ.1 இலட்சம் காசோலை, பாராட்டுச் சான்றிழை வழங்கிப் பாராட்டினார்கள்.

தமிழ்நாடு
சட்டமன்ற இடைத்தேர்தல்-2024

விக்கிரவாண்டி தொகுதி

மொத்த வாக்குகள் : 2,37,031

பதிவான வாக்குகள் : 1,96,269

அ.அன்னியூர் சிவா (எ) சிவசண்முகம் (தி.மு.க.) வெற்றி

அ. அன்னியூர் சிவா (எ) சிவசண்முகம் (தி.மு.க.)	–	1,24,053
சி. அன்புமணி (பா.ம.க.)	–	56,296
கா. அபிநயா (நா.த.க.)	–	10,602
மற்றவை	–	4,459
நோட்டா	–	859

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையில் நேரில் ஆய்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 23.07.2024 அன்று சென்னை, கிண்டியில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனைக்கு நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டு, அங்கு சிகிச்சைப் பெற்று வரும் நோயாளிகளிடம் அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை விவரங்கள், மருத்துவமனையின் சிகிச்சை வசதிகள் குறித்துக் கேட்டறிந்தார்.

சென்னை, கிண்டி, கிங் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் ரூ.240.54 கோடிச் செலவில் உலகத் தரத்தில் நவீன வசதிகளுடன் கூடிய கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.06.2023 அன்று திறந்து வைத்தார். 1,000 படுக்கை வசதிகள் கொண்ட கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனையில், இருதயவியல் துறை, இருதய அறுவை சிகிச்சைத் துறை, நரம்பியல் துறை, நரம்பியல் அறுவை சிகிச்சைத் துறை, புற்றுநோய் மருத்துவத் துறை, புற்றுநோய் அறுவை சிகிச்சைத் துறை, குடல் இரைப்பை மருத்துவத் துறை, குடல் இரைப்பை அறுவை சிகிச்சைத் துறை, சிறுநீரக அறுவை சிகிச்சைத் துறை, சிறுநீரக மருத்துவத் துறை, இரத்தநாள அறுவை சிகிச்சைத் துறை, மூளை இரத்தநாள கதிரியல் துறை ஆகிய உயர்சிறப்பு மருத்துவச் சிகிச்சைக்கான வசதிகளைக் கொண்டுள்ளது.

கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டார். இந்த மருத்துவமனையில்

செயல்பட்டு வரும் அவசரப் பிரிவில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளின் உடல்நிலை குறித்து விசாரித்ததோடு, அந்த நோயாளிகளின் உறவினர்களுடன் உரையாடினார். மேலும், நரம்பியல் சிகிச்சைப் பிரிவிற்கும் சென்று அங்கு உள்ள நோயாளிகளைச் சந்தித்து, அவர்களுக்கு வழங்கப்படும் இயன்முறை சிகிச்சைகளையும் பார்வையிட்டார். இதனையடுத்து, இங்குச் செயல்பட்டு வரும் இதய கேத்லாப் ஆய்வகத்திற்குச் சென்று ஆய்வு செய்து, நோயாளிகளிடம் சிகிச்சை விவரங்கள் குறித்தும் மருத்துவ வசதிகள் குறித்தும் கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து, நோயாளிகளுக்கு உணவு வழங்கப்படும் உணவுக் கூடத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்று, அங்கு நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தினைச் சுவைத்துப் பார்த்து ஆய்வு செய்தார்.

பின்னர், பணியாளர்களின் வருகைப் பதிவேடு, மருந்துகள் இருப்பு பதிவேடு போன்றவற்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து, அதன் விவரங்கள் குறித்து கேட்டறிந்தார். அதிக எண்ணிக்கையில் நோயாளிகள் வந்து செல்லும் இந்த மருத்துவமனைக்கு, கூடுதல் மருத்துவர்கள், செவிலியர்கள், பராமரிப்புப் பணியாளர்களை நியமிக்குமாறும், டயாலிசிஸ் சிகிச்சை பிரிவிற்குக் கூடுதல் டயாலிசிஸ் இயந்திரங்களை வழங்குமாறும் ஆணையிட்டார்.

இந்த ஆய்வின்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மருத்துவமனை முதல்வர், மருத்துவர்களிடம் மருத்துவமனையை தூய்மையாகவும், சுகாதாரமாகவும் தொடர்ந்து பராமரிக்க வேண்டும் என்றும், நோயாளிகளுக்குத் தேவையான சிகிச்சைகளைத் காலதாமதமின்றி வழங்கிட வேண்டும் என்றும், அத்தியாவசிய மருந்துகள் தேவையான அளவிற்கு இருப்பு வைத்திருப்பதை உறுதி செய்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

ரூ.10.61 கோடி செலவில் 50,000 லிட்டர் திறன்கொண்ட பால்பண்ணைகள்

ரூ.33 கோடி மதிப்பீட்டில் கடலூரில் கால்நடை தீவனத் தொழிற்சாலை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
திறந்து வைத்து, அடிக்கல் நாட்டினார் - 29.07.2024

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 29.07.2024 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் (ஆவின்) சார்பில் ரூ.10.61 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள 50,000 லிட்டர் பால் உற்பத்தித் திறன் கொண்ட 2 பால் பண்ணைகள், 5,000 லிட்டர் திறன் கொண்ட தயிர், மோர் தயாரிக்கும் ஆலை, ஆய்வகக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்து, கடலூர் மாவட்டம், ம. பொடையூரில் ரூ.33 கோடி மதிப்பீட்டில் கால்நடைத் தீவன தொழிற்சாலை அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

ஆவின் நிறுவனம் கிராம அளவில் 9,067 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட அளவில் 27 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள், மாநில அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் என்ற மூன்று அடுக்குக் கட்டமைப்பில் செயல்பட்டு வருகிறது. ஆவின் நிறுவனம் 4 இலட்சம் உற்பத்தியாளர்கள் மூலம் நாளொன்றுக்குச் சராசரியாக 36 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து, 34 இலட்சம் லிட்டர் பால் பாக்கெட்டுகளாக நாள்தோறும் நுகர்வோருக்குத் தமிழ்நாடு முழுவதும் விற்பனை செய்து வருகிறது. மேலும், 2 இலட்சம் லிட்டர் பால், ஆவின் நிறுவனத்தால் வெண்ணெய், பால் பவுடர் போன்ற உபபொருட்கள் தயாரிக்கப்படுகின்றன.

இவ்வரசு பொறுப்பேற்றமே 2021முதல் இதுநாள் வரை ஆவின் நிறுவனத்தின் மேம்பாட்டிற்காக ரூ.94.41 கோடிச் செலவில் புதிய பால் பதப்படுத்தும், பால் பாக்கெட் தயாரிக்கும் தொழிற்சாலைகள், புதிய ஐஸ்கீரீம் தயாரிக்கும் தொழிற்சாலைகள், சேமிப்புக் கிடங்குகள், ஆய்வுக் கூடங்கள், பால் கொள்முதல் பிரிவுக் கட்டடங்கள், நிருவாக அலுவலகக் கட்டடங்கள் போன்ற பல்வேறு கட்டடங்கள் கட்டப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டுள்ளன. ஆவின் நிறுவனம் பால் பொருட்களைக் கொண்டு இளைய தலைமுறையினரைக் கவரும் வகையில் பலாப்பழ ஐஸ்கிரீம், குளிர்ந்த காஃபி, ஆவின்

ஹெல்த் மிக்ஸ், வெண்ணெய் கட்டி (Butter Chiplets). பிரீமியம் மில்க் கேக், யோகர்ட் பானம் (மாம்பழம், ஸ்ட்ராபெரி சுவையில்), பாயாசம் மிக்ஸ், பால் புரத நூடுல்ஸ், டெய்ரி ஒய்ட்னர் போன்ற பல்வேறு புதியப் பொருட்களை தயாரித்து விற்பனை செய்து சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் (ஆவின்) முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்து வைத்தல்

பால் நுகர்வோர்களுக்கு தரமான பால் தங்கு தடையின்றிக் கிடைக்க வழிவகை ஏற்படுத்தும் விதமாகக் கரூர் மாவட்டம், தோரணக்கல்பட்டியில் ரூ.2.30 கோடிச் செலவில் நாளொன்றுக்கு 50,000 லிட்டர் பால் உற்பத்தித் திறன் கொண்ட பால் பண்ணை, திருவண்ணாமலை மாவட்டம், வேங்கிக்காலில் ரூ.2.85 கோடிச் செலவில் நாளொன்றுக்கு 50,000 லிட்டர் பால் உற்பத்தித் திறன் கொண்ட பால் பண்ணை;

நுகர்வோர்களுக்குத் தரமான தயிர், மோர் தங்கு தடையின்றிக் கிடைக்க வழிவகை ஏற்படுத்தும் விதமாக, திருவள்ளூர் மாவட்டம், காக்களூர் பால் பண்ணையில் ரூ.3.57 கோடிச் செலவில் நாளொன்றுக்கு 5,000 லிட்டர் திறன் கொண்ட தயிர், மோர் தயாரிக்கும் ஆலை;

திருவள்ளூர் மாவட்டம், மாதவரத்தில் ரூ.1.89 கோடிச் செலவில் கட்டப்பட்டுள்ள நோய்க் கிருமிகளைக் கண்டறியும் மேம்படுத்தப்பட்ட ஆய்வகம்;

என மொத்தம் ரூ.10.61 கோடிச் செலவிலான முடிவுற்ற திட்டப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

புதிய கால்நடைத் தீவனத் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டுதல்

பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளின் கலப்புத் தீவனத் தேவையைப் பூர்த்தி செய்யும் வண்ணம் கடலூர் மாவட்டம், திட்டக்குடியில் ரூ.33 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 300 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட கால்நடைத் தீவன ஆலைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

ம.பொடையூர் கிராமத்தில் 6.77 ஏக்கர் நிலப்பரப்பில் அமையவுள்ள இந்தத் தீவன தொழிற்சாலையால் இப்பகுதியைச் சார்ந்த மக்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைப்பதுடன், கடலூர், விழுப்புரம், அருகில் உள்ள மாவட்ட கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்களின் கறவை மாடுகளுக்குத் தரமான கலப்புத் தீவனம் கிடைக்கப் பெறும். இதன்மூலம், பால் உற்பத்தி அதிகரிப்பதுடன் பால் உற்பத்தியாளர்களின் வருவாயும் உயரும்.

படமும்/செய்தியும்

தியாகிகள் தினம்

தியாகிகள் தினத்தையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில், தியாகிகளை நினைவு கூர்ந்திடும் வகையில் 17.07.2024 அன்று சென்னை காந்தி மண்டப வளாகத்தில் தியாகிகள் மணிமண்டபம் முகப்பில் அமைந்துள்ள தியாகி செண்பகராமன், தியாகி ஆர்யா என்கிற பாஷ்யம், தியாகி சங்கரலிங்கனார் ஆகியோர் திருவுருவச் சிலைகளுக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படங்களுக்கு மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன், பெருநகரச் சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கு.செல்வபெருந்தகை, திரு.ஜே.எம்.எச்.ஹசன் மௌலானா, திரு.ஏ.எம்.வி.பிரபாகரராஜா, பெருநகரச் சென்னை மாநகராட்சி துணை மேயர் திரு. மு.மகேஷ்குமார், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

ரூ.13.98 கோடி மதிப்பில் 589 வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகை

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் சென்னை, நேரு உள்விளையாட்டரங்கத்தில் 30.07.2024 அன்று International Master, Women Grandmaster பட்டம் பெற்ற செஸ் வீரர், வீராங்கனைகள், All India Inter-University Games, பல்வேறு தேசிய அளவிளான போட்டிகளில் வெற்றிப் பெற்று பதக்கங்களை வென்ற 589 வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.13.98 கோடி மதிப்பில் உயரிய ஊக்கத்தொகைக்கான காசோலைகளை வழங்கி வாழ்த்துகளை தெரிவித்தார்,

> மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.**உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் வழங்கினார் - 30.07.2024

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது

சர்வதேச, தேசிய அளவிலான போட்டிகளில் கலந்துகொண்டு பல்வேறு சாதனைகளைப் படைத்து இருக்கக்கூடிய நம்முடைய தமிழ்நாட்டு விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகை வழங்குகின்ற இந்தச் சிறப்பான நிகழ்ச்சியில் பங்கேற்று உங்களை எல்லாம் சந்திப்பதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றோம். தமிழ்நாடு அரசைப் பொறுத்த வரையிலும் விளையாட்டுத் துறையில் சாதனை படைத்துவரும் நம்முடைய தமிழ்நாட்டு வீரர்களை எப்பொழுதும் பாராட்டி ஊக்கப்படுத்தி வருகின்றது. அந்த வகையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின்படி பல்வேறு சர்வதேச, தேசிய அளவிலான போட்டிகளில் வென்று பதக்கங்களைப் பெற்ற 589 வீரர்களுக்குச் சுமார் ரூ.14 கோடி அளவிற்கு உயரிய ஊக்கத்தொகை இங்கே வழங்க இருக்கின்றோம். இந்தத் திட்டத்தில் பயன்பெறக் கூடிய நீங்கள் அனைவரும் நம்முடைய முதலமைச்சருக்கு நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள்.

ஒலிம்பிக் போட்டிகள்

அதுமட்டுமல்ல, நீங்கள் முதலமைச்சருக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களுடைய நம்பிக்கைக்கும் பாத்திரமானவர்கள். உங்களுடைய அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும், நன்றிகளையும் அரசின் சார்பாகத் துறையின் சார்பாக நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இங்கு வந்துள்ள பலபேர் தமிழ்நாடு விளையாட்டு

மேம்பாட்டு ஆணையத்தினுடைய விளையாட்டு விடுதியைச் சேர்ந்தவர்கள் என்பது எங்களுக்கு கூடுதல் பெருமை. மகிழ்ச்சி. இப்போது ஒட்டுமொத்த உலகமும் விளையாட்டைப் பற்றி பேசிக் கொண்டிருக்கக் கூடிய ஒலிம்பிக் போட்டிகள் பாரிஸில் இரண்டு நாட்களுக்கு முன்பு துவங்கியிருக்கிறது. இதில் நமது இந்தியாவின் சார்பாக மொத்தம் 117 வீரர்கள் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்கிறார்கள். பஞ்சாப், ஹரியானா மாநிலங்களை அடுத்து அதிக விளையாட்டு வீரர்களை அனுப்பி இருக்கும் மாநிலமாக நம்முடைய தமிழ்நாடு அமைந்திருப்பது நமக்கெல்லாம் மிகப்பெரிய பெருமை.மகிழ்ச்சியான செய்தி. தமிழ்நாட்டிலிருந்து மட்டும் 11 வீரர் வீராங்கனைகள், சுமார் 6 மாற்றுத்திறனாளிகள் உட்பட மொத்தம் 17 பேர் பாரிஸ் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கிறார்கள். இந்த 17 வீரர்களுக்கும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி தலா ரூபாய் 7 இலட்சம் வீதம் 1.19 கோடி ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வெற்றி பெற்று வர சொல்லி வாழ்த்தி வழியனுப்பி வைத்தார்கள்.

இந்த மாநிலத்தின் முதலமைச்சராக மட்டுமல்ல, உங்கள் ஒவ்வொருவரையும் தன்னுடைய சொந்தப் பிள்ளையாக குடும்பமாக நினைத்துத்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த ஊக்கத் தொகையை வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். நானும் உங்களுடைய கூடப்பிறந்த சகோதரனாக, அண்ணனாக வந்து இந்த உயரிய ஊக்கத்தொகையை வழங்க வந்திருக்கின்றேன். பாரிஸ் ஒலிம்பிக்ஸ் 2024 நாளில் பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த மனு பாக்கர் எனும் வீராங்கனை துப்பாக்கிச் சுடும் போட்டியில் வெண்கலப் பதக்கத்தை வென்று இந்தியாவின் பதக்கப் பட்டியலை நேற்று தொடங்கி வைத்திருக்கிறார்.

இலக்கை நோக்கி முன்னேற்றம்

இன்றைக்கு ஒட்டுமொத்த இந்தியாவும் அவரை வாழ்த்திக் கொண்டிருக்கிறது. கடந்த 2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டியின்போது தனது துப்பாக்கியில் ஏற்பட்ட பழுது காரணமாக பதக்கத்தைத் தவறவிட்ட மனு பார்க்கர். கடந்த 3 ஆண்டுகளுக்கும் மேலாக கடினமாக முயற்சி எடுத்து இன்றைக்கு இந்தியாவுக்குப் பதக்கத்தை வென்று கொடுத்திருக்கிறார். கடந்த டோக்கியோ ஒலிம்பிக் போட்டியின்போது சிந்திய கண்ணீரை தனது விடா முயற்சியின் மூலமாக 3 ஆண்டுகளில் வெற்றியாளராக மாற்றியிருக்கிறார் மனு பார்க்கர். உங்களைச் சுற்றியிருப்பவர்கள் எத்தனை முட்டுக்கட்டைகளை போட்டாலும் எவ்வளவு இகழ்வான வார்த்தைகளைக் கூறினாலும், உங்கள் இலக்கை நோக்கி நீங்கள் முன்னேறிக் கொண்டே இருக்க வேண்டும். அவரைப் போலவே ஒலிம்பிக் பதக்கம் வெல்ல வேண்டும் என்ற இலட்சியத்தோடு இங்கு அமர்ந்திருக்கின்ற வீரர், வீராங்கனைகளை நான் பார்க்கின்றேன். இந்தியாவின் பதக்கப் பட்டியலில் உங்களுடைய பெயர்களும் ஒரு நாள் வரும் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கும் எனக்கும் இருக்கின்றது. இதற்குத் தமிழ்நாடு அரசும், நம்முடைய விளையாட்டு மேம்பாட்டு துறையும் உங்களுக்கு என்றென்றும் உற்ற துணையாக இருக்கும்.

சமுதாய முன்னேற்றத்தில் பெண்களின் பங்கு

குறிப்பாக இங்கு வீராங்கனைகள் அதிக எண்ணிக்கையில் மேலே வந்திருக்கிறீர்கள் என்பதில் கூடுதல் மகிழ்ச்சி. பல்வேறு சமூகத் தடைகளை எல்லாம் தாண்டித்தான் நீங்கள் இந்த இடத்திற்கு வந்திருப்பீர்கள் என்று எங்களுக்குத் தெரியும். பெண் பிள்ளைக்கு எதற்கு விளையாட்டு என்று இன்றைக்குக் கேட்கிற இவர்கள்தான் 50 ஆண்டுகளுக்கு முன்பு அடுப்பு ஊதும் பெண்ணுக்குப் படிப்பு எதற்கு என்றும் கேட்டார்கள். 100 ஆண்டுகளுக்கு முன்பு பெண் பிள்ளைக்கு வீட்டுப் படிக்கட்டை தாண்டி என்ன வேலை என்றுகூட கேட்டார்கள். அந்தக் கேள்விகளை எல்லாம் கண்டு பயப்படாத பெண்கள்தான். சமுதாயத்தை இந்தளவுக்கு நீங்கள் முன்னேற்றி இருக்கிறீர்கள். அந்த வரிசையில் நீங்களும் நாளை இடம்பிடிக்க வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கும் ஏற்பட வேண்டும்.

இந்த மேடையில் உட்கார்ந்து இருக்க கூடிய கால்பந்தாட்ட வீராங்கனை இந்துமதி வாழ்க்கையில் பல்வேறு இன்னல்களைக் கடந்து இந்திய மகளிர் கால்பந்து அணியினுடைய கேப்டனாக உயர்ந்தார். அகில இந்தியக் கால்பந்து சம்மேளனத்தின் இந்தியாவின் சிறந்த கால்பந்து வீராங்கனை என்ற விருதையும் பெற்றுள்ளார். அவருக்கு என் சார்பாகவும், உங்களுடைய சார்பாகவும் வாழ்த்துகளை நாம் தெரிவித்துக் கொள்வோம். அதேபோல் இந்துமதி, சகோதரி பவானி தேவி போன்றவர்களைத்தான் நாம் அனைவரும் முன்னுதாரணமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்றைக்கு உங்களுக்கெல்லாம் உயரிய ஊக்கத்தொகையை இந்த அரசு கொடுத்திருக்கிறது. இது உங்களுக்கு எந்த அளவுக்கு உதவிகரமாக இருக்கப் போகிறதோ அதே அளவுக்கு விளையாட்டுத் துறையில் சாதிக்கத் துடிக்கும் வீரர்களுக்கு ஊக்கம் அளிக்கின்ற ஒன்றாக அமையும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. இதுமட்டுமல்லாமல் High Cash Incentives மட்டுமல்லாமல் Elite Sports Person Scheme, Mission International Medal Scheme, Champion Development Scheme போன்றவற்றின் மூலமாகவும் நம்முடைய அரசு விளையாட்டு வீரர்களுக்கு என்றென்றும் துணை நிற்கின்றன. சிறப்பாக விளையாடும் விளையாட்டு வீரர்களுக்கு பொருளாதாரம் ஒரு தடையாக இருக்கக் கூடாது என தொடங்கப்பட்டது தான் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை. கிட்டத்தட்ட ஒரு ஆண்டுக்கும் மேலாக 100க்கும் அதிகமான வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.9 கோடி அளவுக்கு அறக்கட்டளை மூலம் நிதி உதவிகளை வழங்கி ஊக்கப்படுத்தி வருகின்றது இந்த திராவி மாடல் அரசு.

கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டி

தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் நிதியுதவி பெற விரும்பும் விளையாட்டு வீரர்கள் www.sdat.tn.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். உங்களுடைய நண்பர்கள் வட்டாரத்திலும் இருக்கின்ற விளையாட்டு வீரர்களுக்கும் இதனை நீங்கள் எடுத்துச் செல்லுங்கள். தமிழ்நாடு அரசின் இந்த முன்னெடுப்புகளால் நம்முடைய வீரர்கள் பல்வேறு சாதனைகளைப் படைத்து பெருமையைத் தேடித் தருகின்றார்கள். சில மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டியில் நம்முடைய தமிழ்நாடு மாநிலம் முதன் முறையாக பதக்கப் பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பிடித்து சாதனை படைத்தது.

இந்த வகையில் தமிழ்நாடு அரசு விளையாட்டுத் துறையில் எடுத்துவரும் முயற்சிகளைப் பாராட்டி பல்வேறு திசைகளில் இருந்து நம்முடைய மாநிலத்திற்கு பாராட்டுகளும், விருதுகளும் குவிந்து வருகின்றன. குறிப்பாக The Hindu - Sportstar சார்பாக 'The Best State for Promotion of Sports' எனும் விருது, அதேபோல். CII - Sports Business Award-ல் 'Best State Promoting Sports' எனும் உயரிய விருது போன்ற விருதுகள் நம்முடைய தமிழ்நாடு அரசுக்கு வழங்கப்பட்டன.

இந்த விருதுகளும் அங்கீகாரங்களும் தமிழ்நாட்டுக்கு கிடைக்கின்றன என்றால் அதற்குக் காரணம் இங்கு வந்திருக்கக்கூடிய விளையாட்டு வீரர்கள் நீங்கள்தான் ஒரே காரணம். உங்கள் ஒவ்வொருவருக்கும் கிடைத்த விருதுகள்தான் அவை என்பதை நான் பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகின்றேன். உங்களுடைய வெற்றிப் பயணம் தொடர்ந்திட தமிழ்நாடு அரசு எல்லா வகையிலும் துணை நிற்கும்.

நூறு வீரர்களுக்கு அரசு வேலை

தமிழ்நாடு அரசுத்துறை மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் உள்ள விளையாட்டு வாய்ப்புகளில் வேலை வாய்ப்புகளில் விளையாட்டு வீரர்களுக்கான 3 சதவிகித இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் என்று உங்களைப் போன்ற வீரர்கள் பல ஆண்டுகளாகப் பல கோரிக்கைகளை வைத்து வருகின்றார்கள். கழக அரசு அமைந்த பிறகு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தன்னுடைய சீரிய நடவடிக்கையின் காரணத்தால் முதற்கட்டமாக 100 வீரர்களுக்கு அரசு வேலை வாய்ப்பினை வழங்க இருக்கிறோம் என்று சட்டசபையிலேயே நான் பதிவு செய்தேன். அதில் முதல்கட்டமாகக் குறிப்பாகக் கூடிய விரைவில் 50 வீரர்களுக்கான பணிநியமன ஆணைகளை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவருடைய கைகளாலேயே வழங்க இருக்கின்றார் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.எனவே உங்களுடைய கோரிக்கைகளை, தேவைகளை அரசுக்குத் தெரியப்படுத்துங்கள். அவற்றை நிறைவேற்ற தமிழ்நாடு அரசும், நம்முடைய துறையும் எப்போதும் தயாராக இருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு அமைந்தது முதல் இதுவரை 2,756 வீரர்களுக்கு ரூ.90.24 கோடி அளவிற்கு உயரிய ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வருங்காலத்திலும் இது தொடரும். நாம் எல்லோரும் இணைந்து தமிழ்நாட்டை இந்திய விளையாட்டுத் துறையில் தலைநகராக மாற்றுவோம். உயரிய ஊக்கத்தைப் பெற வந்துள்ள அத்தனை வீரர், வீராங்கனைகளுக்கும் என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் மீண்டும் ஒருமுறை தெரிவித்து விடைபெறுகின்றேன்.

ஆதிதிராவிட மக்களின் நலன்காப்பதில் இந்தியாவிலேயே முன்னணி மாநிலமாக விளங்கும் தமிழ்நாடு...

- ரூ.2,252 கோடியில் இளைஞர்களுக்கான கல்வித் திட்டங்கள்,
- ரூ.300 கோடியில் விடுதிக் கட்டடங்கள்,
- 2,000 ஆதிதிராவிட, பழங்குடியின விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்புகள்,
- ரூ.100 கோடியில் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்,
- ரூ.1,000 கோடியில் அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத்திட்டம்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, டாக்டர் அம்பேத்கர் ஆகியோர் வழியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் ஆதிதிராவிடர்கள் மேம்பாட்டிற்காக வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

குறிப்பாக 1974ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் இலவச வீட்டுவசதித் திட்டத்தைத் தொடங்கி குடிசைகளில் வாழ்ந்த ஆதிதிராவிடர்களுக்கு கான்கிரிட் வீடுகள் கட்டித் தந்தார்கள்.

ஆதிதிராவிடர்களைத் தொழில் முனைவோர்களாக மாற்றுவதற்கு தாட்கோ நிறுவனம் வாயிலாக மானியக் கடன்கள், உரிய பயிற்சிகள் வழங்கினார்கள்.

ஆதிதிராவிடர்கள் கல்வியில் முன்னேற்றம் அடைந்திட பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு வரை இலவசக் கல்வி வழங்கினார்கள்.

ஆதிதிராவிடர்கள் வேலைவாய்ப்புகளைப் பெற அவர்களுக்கான இடஒதுக்கீடுகளை 1971இல் 16 சதவிகிதம் என்பதை 18 சதவிகிதமாக உயர்த்தினார்கள். ஆதிதிராவிடர் மக்களுள் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்பட்ட அருந்ததியினர் மக்களுக்கு 2009ஆம் ஆண்டில் 3 சதவிகித உள் இடஒதுக்கீடு வழங்கினார்கள்.

பெரியார் நினைவு சமத்துவபுரங்களை ஏற்படுத்தி சாதிமத பேதமின்றி ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர் உட்பட அனைத்து மக்களுடன் சேர்ந்து வாழும் வரலாற்றுப் பெருமையை நிகழ்த்தினார்கள். ஆதிதிராவிடர் சமுதாயத்திற்கு பாடுபட்ட சுவாமி சகஜானந்தா கலையரங்கம், தியாகச் சீலர் கக்கன் மணிமண்டபம், அண்ணல் அம்பேத்கர் மணிமண்டபம், கட்டபொம்மன் தளபதி வீரன் சுந்தரலிங்கம் மணிமண்டபம் ஆகியவற்றை கலைஞர் அமைத்ததோடு, அண்ணல் அம்பேத்கர் பெயரில் இந்தியாவிலேயே முதன்முதலாகச் சட்டப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தி ஆதிதிராவிடச் சமுதாய சீர்திருத்தவாதிகள், முன்னோடிகளை உலகிற்கு அடையாளம் காட்டினார்கள்.

சென்னை உயர்நீதிமன்றம் தொடங்கப்பட்டு 112 ஆண்டுகளுக்குப் பிறகு முதன்முதலாக ஓர் ஆதிதிராவிடர் ஜஸ்டிஸ் ஏ. வரதராஜன் உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிப்பதற்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புகள் காரணமாகும். பின்னர், இவர் உச்சநீதிமன்ற நீதிபதியாகப் பொறுப்பேற்றார் என்பது ஆதிதிராவிடருக்குச் செய்த முத்திரைச் சாதனையாகும். இது மட்டுமல்ல தமிழ்நாட்டின் காவல்துறைத் தலைவராகவும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவராகவும், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளராகவும், முதலமைச்சரின் செயலாளர்களாகவும் ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை நியமித்து ஆதிதிராவிடர் சமுதாயத்திற்குப் பெருமைகளைச் சேர்த்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்குச் சிலை, அயோத்திதாசப் பண்டிதருக்குச் சிலை, திவான் பகதூர் திராவிடமணி இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்குச் சிலை, மணிமண்டபம் உள்ளிட்ட ஆதிதிராவிட

சமுதாயப் பெருமக்களுக்குச் சிறப்புகளைச் செய்து வருகிறார்கள்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் வழியினைப் பின்பற்றி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் ஒருங்கிணைந்த சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காக எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள்.

அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக, ஆழ்ந்த சிந்தனைகளுடன் ரூ.100 கோடி நிதி ஒதுக்கீட்டில் "அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்" 2023 - 2024ஆம் ஆண்டு மே திங்களில் அறிவிக்கப்பட்டது.

இந்த, அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களைத் தொழில் முனைவோராக்கும் ஓர் அருமையான உன்னதமான திட்டமாகும்.

இத்திட்டத்திற்கான தொழில் முதலீட்டில் 35 சதவிகித தொகையை மானியமாகவும், 65 சதவிகித தொகைக்குரிய வங்கிக் கடன் வட்டியில் 6 சதவிகிதத் தொகையை வட்டி மானியமாகவும் அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தில் மிகவும் குறுகிய காலத்திற்குள்ளாகவே 2,136 ஆதிதிராவிட பயனாளிகளுக்கு வங்கிகளால் கடன்கள் அனுமதிக்கப்பட்டன. அவர்களில் தகுதியானவர்களான 1,303 தொழில் முனைவோர்க்கு அரசு மானியமாக மட்டும் ரூ.159.76 கோடி வழங்கப்பட்டது. இதில் 288 மகளிர் தொழில்முனைவோர் ரூ.33.09 கோடியை மானியமாகப் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம்

ஊரகப் பகுதிகள் மட்டுமல்லாது நகர்ப்புறப் பகுதிகளிலும் உள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்திட அயோத்திதாச பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம் ஆண்டுக்கு ரூ.200 கோடி வீதம் ஐந்தாண்டுகளில் ரூ.1,000 கோடிச் செலவில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கு இவ்வாண்டில் ரூ.230 கோடி அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் உருவாக்கிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாநில அளவில் ஆதிதிராவிடர், பழங்குடியினரின் சட்டபூர்வமான உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களுடைய முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், தன்னாட்சி அதிகாரத்துடன் கூடிய "தமிழ்நாடு மாநில ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம்" எனும் அமைப்பை உருவாக்கியுள்ளார்கள்.

வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம்

வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழக்கின் தன்மைக்கு ஏற்றவாறு, 85,000/- ரூபாயிலிருந்து 8 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் வரை வழங்கப்பட்டு வந்த தீருதவித் தொகை குறைந்தபட்சம் ஒரு இலட்சம் ரூபாயாகவும், அதிகபட்சமாக 12 இலட்சம் ரூபாயாகவும், மாநில அரசு நிதி மூலம் உயர்த்தி வழங்கப்படுகிறது.

வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சார்ந்த 154 பேருக்கு வேலைவாய்ப்புகளும், 535 பேருக்கு ஓய்வூதியமும், ஒருவருக்கு இலவச வீட்டுமனையும் வழங்கப்பட்டுள்ளன.

சாதி வேறுபாடுகளற்ற முன்மாதிரி கிராமங்களுக்குப் பரிசுகள்

சாதி வேறுபாடுகளற்ற மயானங்கள் கொண்டுள்ள 37 மாவட்டங்களில் ஒரு கிராமம் வீதம் 37 முன்மாதிரிக் கிராமங்களில் வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்த அரசு சார்பில் தலா ரூ.10 இலட்சம் வீதம் ரூ.3.70 கோடி பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

எழுத்தாளர்களுக்குப் பரிசுத்தொகை உயர்வு

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூகங்கள் தொடர்பான கலை, பண்பாடு, இலக்கியப் படைப்புகளை ஊக்குவிக்கும் பொருட்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரில் சிறந்த எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை ரூ.50,000/- என்பது ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் எழுத்தாளர்களின் சிறந்த தமிழ்ப் படைப்புகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

ஆதிதிராவிட இளைஞர்களின் கல்வி வளர்ச்சிக்கு 75.27 விழுக்காடு நிதி ஒதுக்கீடு

2024-2025ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் நலத்துறைக்கு மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.2,992.57 கோடி. இதில், கல்வி சார்ந்த திட்டங்களுக்காக மட்டும் ரூ.2,252.51 கோடி. அதாவது, 75.27 விழுக்காடும், பழங்குடியின இளைஞர்களின் கல்விக்காக 43.23 விழுக்காடும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடச் சமுதாய இளைஞர்களின் கல்வி மேம்பாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் செலுத்தி வரும் ஆர்வமும் அக்கறையும் எளிதில் விளங்கும்.

சட்டக் கல்விக்குச் சிறப்புச் சலுகை

அரசு சட்டக் கல்லூரிகளில் இறுதி ஆண்டு பயிலும் மாணவர்கள் சிறந்த நிறுவனங்களிலும் மூத்த வழக்கறிஞர்களிடமும், உட்பயிற்சி (Intenship) பெறுவதற்கு உதவித்தொகை ரூ.10 ஆயிரம் வழங்கும் திட்டத்தில் 774 மாணவர்களுக்கு ரூ.77.40 இலட்சமும், சென்னை, மதுரை உயர்நீதிமன்ற நீதியரசர்களிடம் பயிற்சி பெற உதவித் தொகையாக ரூ.15,000 வீதம் 15 மாணவர்களுக்கு ரூ.65 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் உயர்கல்வி பெறுவோர்க்கு ஊக்கத் தொகை

இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பிரான்ஸ், பெல்ஜியம் போன்ற நாடுகளில் பொறியியல், நிதி, உலகச் சுகாதாரம், உலகத் தொழில், சட்டம் போன்றவைகளில் முதுகலைப் படிப்பு, ஆராய்ச்சிப் படிப்பு மேற்கொள்ளும் ஆதிதிராவிட – பட்டியலின மாணவர் ஒருவருக்கு ஆண்டுக்கு ரூ.36 இலட்சம் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் 54 ஆதிதிராவிட – பட்டியலின இளைஞர்கள் ஆண்டுதோறும் பயன்பெறுகின்றனர்.

ஆதிதிராவிட – பழங்குடியின மாணவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்து வரும் உயர்த்தப்பட்ட உதவித்தொகை, விடுதி வசதிகள் முதலிய பல்வேறு சலுகைகளால் தமிழ்நாடு முழுவதிலும் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளிலும், பழங்குடியின உண்டி உறைவிடப் பள்ளிகளிலும் 28,85,168 ஆதிதிராவிட மாணவர்களும் 25,337 பழங்குடியின மாணவர்களும் பயின்று வருகின்றனர்.

ஆதிதிராவிட, பழங்குடியின இளைஞர்களின் உயர்கல்வி ஆர்வத்தை தூண்டும் பொருட்டு முனைவர் பட்டப் படிப்புகளுக்கான கல்வி உதவித் தொகையினை ரூ.50,000 என்பது ஒரு இலட்சம் ரூபாய் என்று உயர்த்தப்பட்டுள்ளது.

ரூ.100 கோடி மதிப்பில் 150 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் 480 புதிய வகுப்பறைகள், 15 அறிவியல் ஆய்வுக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன.

விடுதி மாணவர்களுக்கு உயர்த்தப்பட்ட உணவுப்படி

மாணவர்களுக்குச் சரிவிகித சத்தான உணவினை வழங்கும் பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், பள்ளி மாணவர் விடுதிகளுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் உணவுப்படி ரூ.1,100/-லிருந்து, ரூ.1,400/-ஆகவும், கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகளில் தங்கிப் பயிலுவோருக்கு மாதம் ஒன்றுக்கு வழங்கப்படும் உணவுப்படி ரூ.1,100/- என்பது ரூ.1,500/-ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. இதனால், 1,71,844 ஆதிதிராவிடப் பழங்குடியின மாணவர்கள் பயன்பெறுகின்றனர்.

12ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் மாணாக்கருக்கு உயர் தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர்வதற்கான JEE / NEET / CLAT நுழைவுத் தேர்விற்கான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

மாணவர்கள் தங்கள் கல்வியினைச் சிறப்பாக பயிலும் பொருட்டு ரூ.300 கோடி மதிப்பீட்டில் பல்வேறு இடங்களில் விடுதிக் கட்டடங்களும், விடுதிகள் பராமரிப்புப் பணிகளும் நடைபெறுகின்றன.

பொருளாதார மேம்பாடு

2,000 ஆதிதிராவிடர், பழங்குடியின விவசாயிகள் மின் இணைப்புகள் ரூ.46.65 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளன.

2,000 ஆதிதிராவிடர், பழங்குடியின விவசாயிகளுக்கு நீர்ப் பாசனத்திற்கான பி.வி.சி., குழாய்கள் (P.V.C. Pipes) வாங்குவதற்காகத் தலா ரூ.15,000 வீதம் ரூ.3 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2,000 ஆதிதிராவிடர், பழங்குடியின விவசாயிகளுக்கு புதிய மின்மோட்டார் வாங்க தலா ரூ.10,000 வீதம் ரூ.2 கோடி மானியங்களாக வழங்கப்பட்டுள்ளது.

10,000 ஆதிதிராவிடர், பழங்குடியின பட்டதாரிகள் வேலைவாய்ப்பு / போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ளும் பயிற்சிகள் வழங்க ரூ.10.00 கோடிச் செலவிடப்பட்டுள்ளது.

2,000 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு மதிப்புக் கூட்டப்பட்ட தொழில் திட்டங்கள் தொடர்பான பயிற்சிகள் ரூ.250 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

100 ஆதிதிராவிடர், பழங்குடியின தொழில்முனைவோருக்கு தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தின் விற்பனை முகவராக ரூ.90 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

40 ஆதிதிராவிடர், பழங்குடியின மகளிர் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்திடவும், 1,000 ஆதிதிராவிடர், பழங்குடியின விவசாயிகளுக்குத் தீவனப்புல் வளர்க்கவும் விதைத் தொகுப்பு, புல்கறணைகள் ரூ.100 கோடிச் செலவில் வழங்கப்பட்டுள்ளன.

13 மகாத்மா காந்தி தொழிலாளர்கள் ஒப்பந்தம், திறன் மேம்பாட்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ரூ.196 கோடி மதிப்பீட்டில் சுகாதார அங்காடிகள் அமைக்கப்படுவதற்கு ரூ.98 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் வாழ்வாதாரத் தொழில்களை மேற்கொள்ள தாட்கோ வழங்கும் ரூ.2.50 இலட்சம் மானியத் தொகை ரூ.6 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வசிக்கும் வீடற்ற 443 இருளர் பழங்குடியினக் குடும்பங்களுக்கு ரூ.19.38 கோடிச் செலவில் வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளன.

ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் ஆண்டுதோறும் ரூ.100 கோடி மதிப்பீட்டில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

17 மாவட்டங்களில் ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் 20 சமுதாயக் கூடங்கள் ரூ.24 கோடி மதிப்பீட்டில் கட்டப்படுகின்றன.

அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய இருளர் பழங்குடியினர்களுக்கு (Particularly Vulnerable Tribal Groups) 1,094 புதிய வீடுகள் ரூ.50 கோடி மதிப்பீட்டில்கட்டித்தர அரசாணை வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

1,000 தூய்மைப் பணியாளர்களுக்குத் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் கட்டும் பயனாளிகள் பங்களிப்புடன் கூடிய வீடுகள் வாங்க மானியம் வழங்கப்பட்டுள்ளது.

சாதி வேறுபாட்டைக் களைய சமத்துவச் சுடுகாட்டுடன் சமூக நல்லிணக்கம் வளர்த்து வாழும் 37 மாவட்டங்களில் உள்ள 37 கிராமங்களுக்கு ரூ.10 இலட்சம் நிதி வழங்கப்பட்டு, அக்கிராமங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றது முதல் ஒவ்வொரு ஆண்டும் நடைபெற்று வருகின்றது.

2023-2024ஆம் நிதியாண்டில் மாநில அரசு நிதியுதவியுடன் 12 நபர்களைக் கொண்ட மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஒரு குழுவிற்கு ரூ.2.50,000 வீதம் 229 குழுக்களுக்கு ரூ.5.72 கோடி மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது.

தூய்மைப் பணியாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காகத் தேசியத் துப்புரவுப் பணியாளர்கள் நிதி, மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் 587 தூய்மைப் பணியாளர்கள், அவர்தம் குடும்பத்தார்களுக்கு ரூ.1.09 கோடி கால முறை கடன் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆதிதிராவிடச் சமுதாய மக்களின் முன்னேற்றத்தில் தனிக்கவனம் செலுத்தி வருவதன் காரணமாக வாழ்க்கைத்தரம் நாளுக்கு நாள் முன்னேற்றம் அடைந்து வருகிறது. அரசின் சீரிய முயற்சி காரணமாக ஆதிதிராவிட இளைஞர்கள் கல்வியிலும் தொழிலிலும் முன்னேற்றமடைந்து சமத்துவ சமுதாயத்தின் பிரதிநிதிகளாக உருவாகி வருகிறார்கள். இந்தியாவின் தலைசிறந்த உயர்கல்வி நிறுவனங்களிலும், வெளிநாடுகளிலுள்ள சிறந்த கல்வி நிறுனங்களிலும் உயர்கல்வி படிப்பினையும், முனைவர் படிப்பினை மேற்கொண்டு வருகின்றனர்.

சென்னை, இராயப்பேட்டை, ஆலம்பாக்கம், பூந்தமல்லியில் ரூ.63,246 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டுவரும் இரண்டாம் கட்ட மெட்ரோ இரயில் திட்டப் பணிகள்

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார் - 21.07.2024

சென்னை பெருநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைத்திடவும், மக்களின் பயண நேரத்தைக் குறைத்து, பயணத்தை எளிமையாகவும், அதிநவீன வசதியாக அமைத்திடவும் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அரசால் 2007ஆம் ஆண்டு ஒப்புதல் அளிக்கப்பட்டு, முதல்கட்ட திட்டத்தின் கட்டுமானப் பணிகளை அப்போதைய மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் 2009ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடங்கி வைக்கப்பட்டு, தற்போது சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது.

சென்னை மாநகரம், அருகில் உள்ள பகுதிகளின் எதிர்கால மக்கள் தொகையினைக் கருத்தில்கொண்டு விரைவான, பாதுகாப்பான, திறன்மிக்க, நிலையாக நீடிக்கும் பொதுப்போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகச் சென்னை மெட்ரோ இரயிலின் இரண்டாம் கட்டம் திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை மெட்ரோ இரயிலின் இரண்டாம் கட்ட திட்டமானது இந்தியாவிலேயே ஒரே தடவையில் செயல்படுத்தப்படும் மிகப்பெரிய திட்டமாகும்.

சென்னை மெட்ரோ இரயிலின் இரண்டாம் கட்ட திட்டத்தின்கீழ், மாதவரம் முதல் சிறுசேரி சிப்காட் வரையிலான வழித்தடம் (45.8 கி.மீ.), கலங்கரை விளக்கம் முதல் பூந்தமல்லி புறவழிச் சாலை வரையிலான வழித்தடம் (26.1 கி.மீ.), மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலான வழித்தடம் (47.0 கி.மீ.), என மொத்தம் 118.9 கி.மீ. நீளத்திலான 3 வழித்தடங்களை ரூ.63,246 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை

அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 21.07.2024 அன்று சென்னை ஒருங்கிணைந்த பெருநகர் போக்குவரத்துக் குழுமத்தின் ஆய்வில் உள்ள ஒருங்கிணைந்த நகர்வுத் திட்டமான பன்முகப் போக்குவரத்து ஒருங்கிணைப்பு, பொதுவான நகர்வு அட்டை, பெருந்திரள் துரித போக்குவரத்து அமைப்பின் ஒருங்கிணைப்பு, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தை மேம்படுத்தல் ஆகியவை குறித்து உயர் அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

மேலும் மதுரை, கோயம்புத்தூர் மெட்ரோ இரயில் திட்டங்கள், ஓசூர், பொம்மசந்திராவை இணைக்கும் பெருந்திரள் துரிதப் போக்குவரத்து அமைப்புக்கான சாத்தியக்கூறுகள், சென்னை பெருநகருக்குள் உருவாக்கப்படவுள்ள எதிர்கால மெட்ரோ வழித்தடங்கள், அவற்றை நடைமுறை படுத்த மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

அத்துடன் சென்னை மாநகரம், அருகில் உள்ள பகுதிகளின் எதிர்காலப் போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்ய தயாரிக்கப்பட்டுள்ள தாம்பரம் வழியாக விமான நிலையத்திலிருந்து கிளாம்பாக்கம் பேருந்து முனையம் வரையிலான 15.5 கி.மீ வழித்தடத்திற்கான விரிவானத் திட்ட அறிக்கை, 16.07 கி.மீ. நீளத்திலான கோயம்பேடு-ஆவடி வழித்தடத்திற்கான விரிவானத் திட்ட அறிக்கை, 43.63 கி.மீ. நீளத்திற்கான பூந்தமல்லி முதல் பரந்தூரில் உத்தேசிக்கப்பட்ட விமான நிலையம் வரையிலான வழித்தட விரிவான திட்ட அறிக்கை ஆகியவை குறித்தும், 10 கி.மீ. நீளத்திலான மாதவரம் புறநகர் பேருந்து நிலையம், நல்லூர் வரையில் பெருந்திரள் துரிதப் போக்குவரத்து அமைப்பினை செயல்படுத்துவதற்கான போக்குவரத்து ஆய்வு, 26 கி.மீ. நீளத்திலான வேளச்சேரி வழியாகத் தாம்பரம் முதல் கிண்டி வரையிலான வழித்தடத்திற்கான போக்குவரத்து ஆய்வு, விரிவான சாத்தியக்கூறு ஆய்வுகளை மறுமதிப்பீடு செய்தல், மேம்படுத்துதல் ஆகிய பணிகள் குறித்தும் உயர் அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

அதனைத்தொடர்ந்து, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வெஸ்ட்காட் சாலையின் அடியில் ரூ.250 கோடி மதிப்பீட்டில், 150 மீட்டர் நீளம், 22 மீட்டர் அகலம், 21.5 மீட்டர் ஆழத்தில் அமைக்கப்பட்டு வரும் இராயப்பேட்டை மெட்ரோ நிலையத்தில் நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகளின் முன்னேற்றத்தை ஆய்வு செய்தார். மேலும் மெட்ரோ இரயில் திட்டத்தின் கட்டம்-2,

வழித்தடம்-3-இல் பவானி என்று பெயரிடப்பட்ட சுரங்கம் தோண்டும் இயந்திரம் மூலம் இராயப்பேட்டை முதல் டாக்டர் இராதாகிருஷ்ணன் சாலை வரை 910 மீட்டர் சுரங்கம் அமைக்கும் பணியை இராயப்பேட்டையில் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.

தொடர்ந்து மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மெட்ரோ இரயில் திட்டத்தின்கீழ்ப் பேரூரில் ஆலப்பாக்கம் இரண்டு அடுக்கு மெட்ரோ இரயில் பாதை (Alapakkam Double Decker) அமைக்கப்பட்டு வரும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஆலப்பாக்கம் இரண்டடுக்கு அமைப்பு இந்தியாவிலேயே முதலாவது வகை ஆகும். சுமார் 3.75 கிலோ மீட்டர் நீளத்தில் உள்ள இப்பகுதியில் வழித்தடம்-4-ற்கு மேல் வழித்தடம் 5 செல்கிறது. இதனால் இடப்பயன்பாடு, செலவு குறைகின்றது. இது ஆழ்வார் திருநகர், வளசரவாக்கம், காரம்பாக்கம், ஆலப்பாக்கம் இடங்களில் அமையும் நிலையங்களை இணைக்கிறது.

பின்னர், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின்கீழ் பூந்தமல்லி அரியமந்தநல்லூர் கிராமத்தில் ரூ.187 கோடிச் செலவில் 40.5 ஏக்கர் நிலத்தில் பிரம்மாண்டமாக உருவாகி வரும் பூந்தமல்லி பணிமனைக் கட்டுமான பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்தப் பணிமனையில் நிருவாகக் கட்டடம், பணிமனை கிடங்கு, பணிமனைக் கூடம், இரயில்கள் நிறுத்தும் வசதி, சிறப்பு வசதிகளான ஒரு சோதனைத்தடம், தானியங்கி இரயில்கள் கழுவும் அமைப்பு போன்ற 17 கட்டடங்கள் உள்ளன. இப்பணிமனையில் 6 பெட்டிகள் கொண்ட 56 இரயில்கள் வரை பராமரிக்கப்படவுள்ளன, இந்த இரயில்கள் தானியங்கி அமைப்புகளைக் கொண்டதுடன் ஓட்டுநர் இல்லாத இரயில்கள் இயக்க அமைப்பினை கொண்டுள்ளது.

தற்போது 82 சதவிகித கட்டுமானப் பணிகள் முடிவுற்றுள்ளன. இதில் இரயில் நிறுத்தும் பகுதி, சோதனைத் தடம் ஆகிய பணிகள் 6 மாதத்திற்குள் இறுதிக்கட்டத்தை அடையும்.

இந்த ஆய்வின்போது, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காகத் துரிதமாகப் பணிகளை முடிக்குமாறு சென்னை மெட்ரோ இரயில் நிறுவன அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார்.

படமும்/செய்தியும்

சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகு முத்துக்கோன் அவர்கள் பிறந்தநாள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 11.07.2024 அன்று சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் பிறந்தநாளையொட்டிச் சென்னை, எழும்பூர் இரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் அழகு முத்துக்கோன் அவர்களின் திருவுருவச்சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

வறுமை ஒழிப்பு, மகளிர் முன்னேற்றம், தரமான கல்வி, சுகாதாரத்தில் இந்தியாவிலேயே நம்பர் 1 இடத்தைப் பிடித்திருக்கிறது தமிழ்நாடு

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நீலாங்கரையில் நடைபெற்ற விழாவில் 1,984 பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்களை வழங்கி ஆற்றிய உரை - 24.07.2024

சென்னை, நீலாங்கரையில் 24.07.2024 அன்று வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் நடைபெற்ற வீட்டுமனைப் பட்டா வழங்கும் விழாவில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 1,984 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார்.

சென்னை, அதன் புறநகர் பகுதிகளில் வீட்டுமனைப்பட்டா பெறுவதில் பொதுமக்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, சிறப்புத்திட்டச் செயலாக்கத் துறையின் சார்பில் அரசாணை எண்.12, 01.03.2024 அன்று பிறப்பிக்கப்பட்டது. இந்த அரசாணையில், சென்னை, புறநகர் பகுதிகளில் வீட்டு மனைப் பட்டா வழங்குவதில் உள்ள சிக்கல்களைத் தீர்க்க மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்புர வளர்ச்சித்துறை அமைச்சர், மாண்புமிகு குறு, சிறு (ம) நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், மாண்புமிகு மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் ஆகியோர் உட்பட 18 உறுப்பினர்கள் கொண்ட மாநில அளவிலான உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டது.

இக்குழு 13.06.2024 அன்று கூடி, தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம் கிரயப் பத்திரங்கள் வழங்கப்பட்ட மனைகளுக்குப் பட்டா வழங்குவது, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கிரயப் பத்திரங்கள் வழங்கப்பட்ட மனைகளுக்குப் பட்டா வழங்குவது. அரசாணை (நிலை) எண்.168, வருவாய் துறை, நாள்: 27.03.2000, அரசாணை (நிலை) எண்.854, வருவாய்த் துறை, நாள்: 30.12.2006-இன்படி ஒருமுறை வரன்முறை செய்யும் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்களை வருவாய் ஆவணங்களில் பதிவேற்றம் செய்து கணினிப் பட்டா வழங்குவது, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழும மனைகளுக்குப்

பட்டா வழங்குவது - ஆகியவற்றில் உள்ள சிக்கல்கள் குறித்தும், அச்சிக்கல்களுக்குத் தீர்வு காணுவது குறித்தும் விவாதித்து, தொடர்புடைய துறைத் தலைவர்களுக்கும், சென்னை மாவட்ட ஆட்சியருக்கும் தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டன.

அதனடிப்படையில். தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மனை இடங்களில் 411 பட்டாக்கள், தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய அம்பத்தூர் திட்டப்பகுதி மனை இடங்களில் 516 பட்டாக்கள், நகர நிலவரித் திட்டத்தின்கீழ் மாதவரம், அம்பத்தூர் வட்டங்களில் 5,070 பட்டாக்கள், ஒருமுறை வரன்முறை செய்யும் திட்டத்தின்கீழ் வரன்முறை செய்து வழங்கப்பட்ட மனைப் பட்டாக்கள் வருவாய் ஆவணங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டுச் சோழிங்கநல்லூர் வட்டத்தில் 484 பட்டாக்கள், அரசாணை எண்.105, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள்:13.03.2024-இன்படி, சோழிங்கநல்லூர், ஆலந்தூர், திருவொற்றியூர், மதுரவாயல், மாதவரம் வட்டங்களில் நத்தம் நிலஆவணங்களில் ரயத்துவாரி மனை என மாற்றம் செய்யப்பட்ட 19,114 பட்டாக்கள், நகர நிலஅளவை ஆவணங்களில் தனியார் நிலங்கள் சர்கார் நஞ்சை / புஞ்சை எனப் பதிவாகியுள்ளதைச் சரி செய்து ரயத்துவாரி நஞ்சை/ புஞ்சை என வகைபாடு மாற்றம் செய்யப்பட்ட 3,253 பட்டாக்கள், ஆக மொத்தம் 28,848 பட்டாக்கள் பொதுமக்களுக்கு அரசால் வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது,

சோழிங்கநல்லூர் பகுதிகளைச் சேர்ந்த கிட்டத்தட்ட 2,000 பயனாளிகளுக்கு வீட்டு மனைக்கான பட்டாக்கள் வழங்குகின்ற இந்தச் சிறப்புக்குரிய நிகழ்ச்சியில் பங்கேற்பதில் நான் மிகுந்த பெருமைப்படுகிறேன். மகிழ்ச்சி அடைகின்றேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான நம்முடைய திராவிட மாடல் அரசு உங்களுக்குத் தொடர்ந்து பல்வேறு நலத்திட்டங்களை வழங்கிக் கொண்டு வருகிறது. நம்முடைய அரசின் சாதனைகளை முதலமைச்சரின் உழைப்பை அங்கீகரிக்கின்ற வகையில் சமீபத்தில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் 40-க்கு 40 என்ற 100 சதவீத வெற்றியைக் கொடுத்து, மிகப்பெரிய வெற்றியை நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்திற்குத் தமிழ்நாட்டு மக்களாகிய நீங்கள் வழங்கினீர்கள். அதற்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான அரசாக இருந்தாலும், நம்முடைய முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசாக இருந்தாலும் ஏழை, எளிய அடித்தட்டு மக்கள், நடுத்தர வர்க்க மக்களுடைய ஏற்றத்திற்காகத் தினம், தினம் பல்வேறு திட்டங்களை தொடர்ந்து நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அளித்துக் கொண்டு வருகிறார்கள். திராவிட முன்னேற்ற கழகமும், திராவிட மாடல் அரசும், எப்போதும் உங்களுடன் நிற்கிறது. அதேபோல நீங்களும் எப்பொழுதும் நம்முடைய தலைவருக்கும், நம்முடைய அரசுக்கும் பக்க பலமாகத் தொடர்ந்து இருந்து கொண்டு வருகிறீர்கள்.

உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் என்ற தேவைகள் ஒவ்வொரு மனிதனுக்கும் அடிப்படை உரிமையாகும். கலைஞருடைய ஆட்சி காலத்தில் இருந்தே உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் என்கின்ற அடிப்படைத் தேவைகளைப் பார்த்து, பார்த்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. குறிப்பாக, வீடு என்பது எல்லோருக்குமான ஒரு அத்தியாவசிய தேவையாகும். அது ஒரு கனவு. அதற்காகதான் கலைஞர் அவர்கள் 1970களிலேயே இந்தியாவில் முதன்முறையாகத் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

இன்றைக்கு அதனைத் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மேம்படுத்தியிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டிலேயே முதன் முதலாகக் கட்டட அனுமதி ஆன்லைன் மூலமாக உடனடியாக பெற வேண்டும் என்ற திட்டத்தையும் நேற்று முன்தினம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்திருக்கிறார்கள். வீடு எவ்வளவு முக்கியமோ, அதே அளவு, அந்த வீட்டுக்கான பட்டாவும் மிகமிக முக்கியம். அந்த வகையில் பார்த்தால் உங்கள் ஒவ்வொருவருக்கும் இந்த நாள் மிக மிக மகிழ்ச்சியான முக்கியமான ஒரு நாள். ஏனென்றால், பட்டா வேண்டும் என்பவருடைய பல வருடக் கனவு இன்று நனவாகி இருக்கிறது. குறிப்பாக, சென்னையில் நான் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி, உங்களுக்கெல்லாம் ஒரு வாக்குறுதியை வழங்கியிருந்தேன். சென்னையில் பட்டா பிரச்சினை பல வருடங்களாக இருக்கிறது. அப்படி பட்டா கிடைக்காமல் இருப்பவர்களுக்கு நிச்சயம் பட்டா வழங்கப்படும் என்ற அந்த வாக்குறுதியைத் தேர்தல் பிரச்சாரத்தின்போது நான் அளித்திருந்தேன். தேர்தல் முடிவுகள் முடிந்து 2 மாதம்தான் ஆகியிருக்கிறது. இந்த 2 மாதத்திற்குள் முதலமைச்சர் அவர்கள், உங்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி இருக்கிறார்கள். நம்முடைய திராவிட மாடல் அரசு, பல வருடங்களாக பட்டா இல்லாமல் இருந்தவர்களுக்குக் கூட இன்றைக்கு பட்டா வழங்கியுள்ளது.

பட்டா வழங்குவதில் பல நிருவாகச் சிக்கல்கள் இருந்து வந்தன. ஆனால் இந்தச் சிக்கல்களை எல்லாம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது, எத்தனை சிக்கல்கள் இருந்தாலும் சரி, மக்களுடைய மகிழ்ச்சி தான் முக்கியம் என்று ஒரே குறிக்கோளோடு பணியாற்றவேண்டும், அந்தச் சிக்கல்களை எல்லாம் தீர்க்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கும், அதிகாரிகளுக்கும் உத்திரவிட்டு இருந்தார்கள்.

உங்கள் வீட்டுக்கான பட்டா என்பது உங்கள் ஒவ்வொருவருடைய உரிமை. அதனால்தான், இந்த பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதற்கான பரிந்துரைகளை வழங்க, ஒரு குழுவை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நியமித்தார்கள். அதன் காரணமாகதான் இன்றைக்கு அந்தக் குழு எடுத்த முயற்சியின் காரணமாக 28,848 பயனாளிகளுக்குப் பட்டாக்கள் வழங்கத் தயார் நிலையில் இருக்கிறது.

குறிப்பாக, இன்றைக்குச் சோழிங்கநல்லூர் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சியில் கிட்டத்தட்ட 2,000 குடும்பங்களுக்குப் பட்டாக்களை வழங்க இருக்கின்றோம். நேற்று இதேபோன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மாதவரம், அருகாமையில் உள்ள தொகுதிகளைச் சேர்ந்த 2,124 பட்டாக்களை வழங்கியிருக்கின்றோம். இதைத் தொடர்ந்து சென்னையில் உள்ள சட்டமன்றத் தொகுதிகளில், அந்தந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாகத் தொடர்ந்து பட்டாக்கள் வழங்கப்பட இருக்கின்றன.

நம்முடைய திராவிட மாடல் அரசின் முயற்சியால் இன்றைக்கு உங்களுடைய ஒவ்வொருடைய கையிலும், வீட்டு மனைப் பட்டாக்கள் வந்து சேர்ந்திருக்கின்றது.

இவ்வளவு நாள் சொந்த வீடாக இருந்தாலும், பட்டா இல்லையே என்று ஒரு தயக்கமும் - கலக்கமும் இருந்திருக்கும். இனிமேல், அந்த பிரச்சினை உங்களுக்கு எதுவும் கிடையாது. இன்றிலிருந்து உங்கள் வீட்டுமனை, வீடு சட்டப்பூர்வமாக உங்களுக்குச் சொந்தமாகி இருக்கிறது.

நம்முடைய திராவிட மாடல் அரசு இன்றைக்கு எண்ணற்றத் திட்டங்களைச் செயல்படுத்திட்டு இருக்கிறது. மகளிருக்குக் கட்டணமில்லா பேருந்து விடியல் பயணத்திட்டம் மூலமாகக் கிட்டத்தட்ட 500 கோடிப் பயணங்களை மகளிர் மேற்கொண்டு இருக்கிறார்கள்.

மகளிரின் சுமையைக் குறைக்கின்ற வகையில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அறிமுகம் செய்தார்கள். இந்தத் திட்டத்தை இன்றைக்குப் பல வெளி மாநிலங்களும் பின்பற்றிக் கொண்டிருக்கிறார்கள். கனடா, இலங்கை போன்ற வெளிநாடுகளும் நம்முடைய திட்டங்களை எல்லாம் பின்பற்றிக் கொண்டிருக்கின்றன என்பதை நான் பெருமையாகக் கூறிக்கொள்கிறேன்.

இன்றைக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மூலமாகக் கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் 20 இலட்சம் மாணவர்களுக்குப் பள்ளிகளிலேயே தரமான காலை உணவு வழங்கப்படுகிறது. அதேபோல, புதுமைப்பெண் திட்டம் மூலமாக அரசுப் பள்ளியில் படித்து, உயர்கல்வி படிக்கின்ற 3 இலட்சத்து 25 ஆயிரம் மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகின்றது.

இவை எல்லாவற்றையும்விட மிக மிக முக்கியமான ஒரு திட்டம் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம். இந்தத் திட்டம், பெண்கள் மத்தியில மிகப்பெரிய ஒரு வரவேற்பை பெற்றிருக்கின்றது. இதுவரை கிட்டத்தட்ட ஒரு கோடியே 16 இலட்சம் மகளிர் கடந்த 11 மாதங்களாக மாதம் ரூ.1,000 கலைஞர் உரிமைத் தொகைத் திட்டம் மூலமாக பயன்பெற்று வருகிறார்கள்.

இதுபோல, நம்முடைய அரசு தமிழ்நாட்டையும், தமிழ்நாட்டு மக்களின் வளர்ச்சியையும் அடுத்த கட்டத்திற்கு எடுத்துக்கொண்டு போகின்ற வகையில் தொடர்ந்து செயல்படுத்திக்கொண்டு இருக்கிறது. இந்தத் திட்டங்களை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தியிருக்கின்ற காரணத்தால்தான் தமிழ்நாடு அரசு இன்றைக்கு வறுமை ஒழிப்பு - மகளிர் முன்னேற்றம், தரமான கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட 13 துறைகளில் இந்தியாவிலேயே நம்பர் 1 இடத்தை பிடித்திருக்கிறது.

நம்முடைய திராவிட மாடல் அரசின் சாதனைகளில் ஒன்றாகதான் இன்றைக்கு உங்களுக்கு எல்லாம் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது.

நீங்கள் அனைவரும் கழக அரசின் திட்டங்களுடைய பயனாளிகள் மட்டுமல்ல. நீங்கள் அனைவரும் இந்த திட்டங்களின் பங்கேற்பாளர்கள்.

திராவிட மாடல் அரசின் சாதனைத் திட்டங்களை எல்லாம் நீங்கள் அனைவருக்கும் எடுத்துச் செல்லவேண்டும். இந்த அரசின் பிராண்ட் தூதராக நீங்கள் திகழவேண்டும்.

உங்களுக்காக இந்தத் திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது. தொடர்ந்து உங்களுக்கும், உங்களுடைய அடுத்தடுத்த தலைமுறைகளுக்காகவும் உழைக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். எங்களை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

வீட்டுமனைப்பட்டா பெற்ற அத்தனை பேருக்கும் மீண்டும் என்னுடைய அன்பையும், வாழ்த்தையும் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில்

“தமிழ்நாடு நாள் விழா”

காஞ்சிபுரம் ஏ.கே.ஜி திருமண மாளிகையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் 18.07.2024 அன்று நடைபெற்ற "தமிழ்நாடு நாள்" விழாவில் மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் ஆகியோர் தமிழன்னை, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவப்படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

மேலும் தமிழ்நாடு நாள் விழாவை முன்னிட்டு பள்ளி மாணவர்களுக்கு நடத்தப்பட்ட மாநில அளவிலான பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பரிசுத் தொகை, பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் ஆண்டுதோறும் ஜூலை 18ஆம் நாளினைத் தமிழ்நாடு நாள் விழாவாகக் கொண்டாடப்பட வேண்டும் என்று உத்தரவிட்டார். அதனடிப்படையில் கடந்த 2 ஆண்டுகாலமாக இவ்விழா சென்னையில் நடத்தப்பட்டு, 3ஆம் ஆண்டாக நம்முடைய காஞ்சியில், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த மண்ணில் நடத்த வேண்டும் என்கின்ற வகையில் மாண்புமிகு முதலமைச்சரின் வழிகாட்டுதலோடு நடத்தப்பட்டு வரும் இந்நிகழ்ச்சிக்கு வருகை புரிந்துள்ள அனைவருக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சென்னை மாகாணம் என்று இருந்த நம்முடைய மாநிலத்தின் பெயரை மொழிவாரி மாநிலமாகப் பிரிக்கப்பட்ட பிறகு, தமிழ்நாடு என்று பெயர் வைக்க வேண்டும் என்கின்ற அடிப்படையில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏகமனதாகத் தீர்மானத்தை நிறைவேற்றி, அன்றைக்கு (18.07.1967) அறிவித்தது தான் ஜூலை 18 ஆம் நாள். அது வெளிப்படாமல் இருக்கின்றது என்பதை அறிந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எங்களது துறைக்கு உத்தரவிட்டு இன்றைக்குத் தமிழ் வளர்ச்சி துறையும், செய்தித் துறையும் இணைந்து

இன்றைய தினத்தை தமிழ்நாடு நாள் விழாவாக மூன்றாம் ஆண்டாக கொண்டாடி வருகிறோம். தமிழ்நாட்டிற்கென்று பல்வேறு சிறப்புக்களை நாம் பெற்றிருக்கின்றோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்று தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகப் பல்வேறு திட்டங்களையும், அதே போல், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தினார்கள். நாட்டு மக்களின் வாழ்வாதாரத்திற்காகவும், மாநிலத்தின் முன்னேற்றத்திற்காகவும் தொடர்ந்து இன்றைக்குத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்கிற வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள். இன்னும் சொல்லப்போனால், இதே மண்ணில் நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மகளிருக்கான மாத உரிமைத் தொகை ரூ.1,000 என்னும் திட்டத்தை இங்கு தான் தொடங்கி வைத்தார் என்பது நாம் எல்லோரும் அறிவோம். இது போல், பல்வேறு திட்டங்கள். அரசுப் பேருந்துகளில் மகளிருக்கான கட்டணமில்லா பயணம், அரசுப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படித்து கல்லூரிகளுக்குச் செல்லும் உங்களைப் போன்ற மாணவர்களுக்கு, அந்தக் கல்லூரிகளில் தடையின்றி உயர்கல்வி கிடைக்க வேண்டும் என்பதற்காக மகளிருக்கான புதுமைப்பெண் திட்டம், இந்த ஆண்டு முதல் நம்முடைய மாணவர்களுக்கும் வழங்குகின்ற வகையில் தமிழ்ப்புதல்வன் திட்டம் போன்ற எண்ணற்றத் திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தி வருகின்றார்.

விவசாயிகளுக்கும், நெசவாளர்களுக்கும், அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருவதால் தான், தமிழ்நாடு மேலும், மேலும் வளர்ச்சி பெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த வகையில், இந்த விழா நடைபெறுவது பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த மண் ஆகும். பேரறிஞர் அண்ணா அவர்கள் தனது பேச்சால், எழுத்தால் இந்தத் தமிழ்நாட்டின் சூழலையேமாற்றிக்காட்டியவர் ஆவார். அவர்களின் வழியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், அதே போல், அவர்கள் இருவரையும் சேர்ந்து, ஒரே உருவமாக விளங்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நல்லாட்சியை நடத்திக் கொண்டிருக்கின்றார். அந்த ஆட்சிக்கு நீங்கள் அனைவரும் தொடர்ந்து உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இங்குச் சிறப்பான கருத்தரங்கம் நடக்கவிருக்கிறது. வந்திருக்கும் அனைவரும் முக்கியமாக, மாணவச் செல்வங்கள் இந்தக் கருத்தரங்கத்தில் தெரிவிக்கப்படும் கருத்துக்களைக் கேட்டறிந்து, தெளிவு பெற வேண்டும். நீங்கள் எல்லோரும் தான் தமிழ்நாட்டின் எதிர்காலம். இந்நேரத்தில், உங்கள் அனைவரையும் வருக, வருக என்று வரவேற்று, வருகை தந்திருக்கும் அனைவருக்கும் நன்றி, வாழ்க தமிழ்நாடு.

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் ஆகியோர் தமிழ்நாடு நாள் விழாவை முன்னிட்டு மாநில அளவில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற சென்னை மாவட்டம் கோ.தீபஸ்ரீ என்ற மாணவிக்கு ரூ.50,000க்கான காசோலை, பாராட்டுச் சான்றிதழையும், இரண்டாம் பரிசு பெற்ற திருவள்ளூர் மாவட்டம் ம.ஜெயஜனனி என்ற மாணவிக்கு ரூ.30,000க்கான காசோலையும், பாராட்டுச் சான்றிதழையும், மூன்றாம் பரிசு பெற்ற ஈரோடு மாவட்டம் மு.வீரமணிகண்டன் என்ற மாணவனுக்கு ரூ.20,000க்கான காசோலையும், பாராட்டுச் சான்றிதழையும், பேச்சுப் போட்டியில் முதல் பரிசு பெற்ற திருவாரூர் மாவட்டம் ச.கௌ.பாவேஷ் பிரசன்னா என்ற மாணவனுக்கு ரூ.50,000க்கான காசோலையும், பாராட்டுச் சான்றிதழையும், இரண்டாம் பரிசு பெற்ற திருச்சிராப்பள்ளி மாவட்டம் அ.அப்துல் ஹக்கீம் என்ற மாணவனுக்கு ரூ.30,000க்கான காசோலையும், பாராட்டுச் சான்றிதழையும், மூன்றாம் பரிசு பெற்ற சென்னை மாவட்டம் நா.ரிஸ்வானா பர்வின் என்ற மாணவிக்கு ரூ.20,000க்கான காசோலையும், பாராட்டுச் சான்றிதழையும் வழங்கினார்கள்.

இவ்விழாவினையொட்டி திரு.ஆழி.செந்தில்நாதன் அவர்களின் தலைமையில் கருத்தரங்கம் நடைபெற்றது. இக்கருத்தரங்கத்தில் “தமிழ்நாடு வாழ்வும் வரலாறும்” என்ற தலைப்பில் முனைவர் பர்வீன் சுல்தானா அவர்களும், “சென்னை மாகாணமும் செயற்கரிய போராட்டங்களும்” என்ற தலைப்பில் செல்வன் சிவ. சதீஷ் அவர்களும், “சென்னை மீட்பும் வரலாறும்” என்ற தலைப்பில் திருமதி அனு கிரகா அவர்களும், “திராவிட இயக்கத் தலைவர்களும் நவீனத் தமிழ்நாடும்” என்ற தலைப்பில் திரு. சூர்யா கிருஷ்ணமூர்த்தி அவர்களும், “தமிழ்நாடு பெயர் மாற்றப் போராட்ட வரலாறு” என்ற தலைப்பில் செல்வன் மா.மதன் குமார் அவர்களும் கருத்துரையாற்றினார்கள்.

அகில இந்திய குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மையம்

ஒரு பார்வை...

பட்டியலினத்தைச் சார்ந்த தேர்வர்களுக்கு பயிற்சியளிக்க 1966ஆம் ஆண்டு முன்தேர்வு மையம் தொடங்கப்பட்டது. அதைப் போன்றே 1971ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்ட (ம) மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்காகச் சிறப்புப் பயிற்சி மையம் அமைக்கப்பட்டது. இவ்விரண்டு மையங்களும் ஒன்றிணைக்கப்பட்டு "அகில இந்தியக் குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையம்" என்று பெயரிடப்பட்டு 2000ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் முதல் இயக்குநர், அண்ணா நிருவாகப் பணியாளர் கல்லூரி, பயிற்சித் துறைத்தலைவர், சென்னை-28 அவர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகிறது.

குடிமைப்பணித் தேர்வு

மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நடத்தப்படும் குடிமைப்பணித் தேர்வுகள் மூன்று கட்டங்களாக நடத்தப்படுகின்றன. தெரிவுவினா அடிப்படையில் ஒருவரின் தகுதியை அறிந்து அதன் மூலம் உயர்நிலை முதன்மைத் தேர்வை எதிர்கொள்ள ஆற்றல் கொண்ட தேர்வர்களைக் கண்டறிய முதல் நிலைத் தேர்வு, நடத்தப்படுகிறது. முதன்மைத் தேர்வில் வெற்றி பெறுகிறவர்கள் புதுதில்லியிலுள்ள மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பெறும் ஆளுமைத் தேர்வுக்கு அழைக்கப்படுகிறார்கள். முதன்மைத் தேர்விலும், ஆளுமைத் தேர்விலும் பெறும் மதிப்பெண்கள் கூட்டப்பட்டுத் தரவரிசை நிர்ணயிக்கப்படுகிறது.

முதல்நிலைத் தேர்வுக்கான பயிற்சி (Preliminary Examination):

ஒவ்வொரு ஆண்டும், அகில இந்திய குடிமைப் பணித் தேர்வு பயிற்சி மையத்தால் நுழைவுத் தேர்வு நடத்தப்பட்டு 325 தகுதி பெற்ற மாணவர்கள் (225 முழு நேரப் பயிற்சியாளர்கள் +100 பகுதி நேரப் பயிற்சியாளர்கள்) தேர்வு செய்யப்பட்டு முதல் நிலைத் தேர்வுப் பயிற்சிக்கு அனுமதிக்கப்படுகிறார்கள். ஆகஸ்ட் / செப்டம்பர் மாதத்தில் பத்திரிகைச் செய்தி, இணையதளத்தில் விளம்பரம் கொடுத்து நுழைவுத் தேர்வானது செப்டம்பர் மாதத்தில் நடத்தப்பட்டு, நுழைவுத் தேர்வில் எடுக்கும் மதிப்பெண்கள் அடிப்படையில் மாணவர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். முதல்நிலைத் தேர்வுக்கு ஏறத்தாழ எட்டுமாத கால அளவில் (அக்டோபர் முதல் மே மாதம் வரை) பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு (2023-2024) ஆர்வலர்கள் சேர்க்கை, நான் முதல்வன் திட்டத்துடன் இணைந்து பொது நுழைவுத்தேர்வு 19,800 விண்ணப்பங்கள் பெறப்பட்டு நடத்தப்பட்ட நுழைவுத் தேர்வில் 13,000 ஆர்வலர்களால் நுழைவுத்தேர்வு எழுதப்பட்டது, அதன் அடிப்படையில் (225 முழு நேரம் + 95 பகுதி நேரம்) ஆர்வலர்கள் தேர்வு செய்யப்பட்டு உள்ளார்கள். மேலும் அண்ணா நூற்றாண்டுப் பயிற்சி மையங்களான மதுரை (ம) கோயம்புத்தூர் குடிமைப்பணி பயிற்சி மையங்களில் தலா 97 பேர் முதல்நிலைத் தேர்விற்குப் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இட ஒதுக்கீடு

இனம்	முழு நேரம்	பகுதி நேரம்
ஆதிதிராவிடர்	89	40
அருந்ததியர்	18	08
பழங்குடியினர்	06	02
மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்	40	18
பிற்படுத்தப்பட்டோர்	54	24
பிற்படுத்தப்பட்ட - (முஸ்லீம்)	07	03
இதர வகுப்பினர்	11	05
மொத்தம்	**225**	**100**

4 சதவிகித மாற்றுத்திறனாளிகளுக்கு ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

அகில இந்திய குடிமைப் பணி தேர்வில்
நான் முதல்வன் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற பயனாளி
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி

செல்வி **சுவாதி**

அகில இந்திய குடிமைப் பணி தேர்வில் நான் முதல்வன் திட்டத்தின்கீழ், பயிற்சி பெற்றுத் தேர்ச்சி அடைந்த இராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் நகராட்சியைச் சேர்ந்த செல்வி சுவாதி அவர்கள் நம்மிடம் கூறிய போது;

என் பெயர் சுவாதி. நான் இராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் நகராட்சியில் இருந்து வந்திருக்கேன். நான் கடந்த ஆண்டு 2023 செப்டம்பர் மாதம் தமிழ்நாடு ஸ்கில் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் கீழ் இருக்கும் நான் முதல்வன் ஸ்கீமில் ஆல் இந்தியா சிவில் சர்வீஸ் கோச்சிங் எனப்படும் அகில இந்தியக் குடிமைப்பணித் தேர்வு பயிற்சி மையமும் சேர்ந்து யு.பி.எஸ்.சி. கோச்சிங் ஆக நடத்தப்படும் எக்ஸாமில் நான் கிளியர் பண்ணி இந்த ஆல் இந்தியா சிவில் சர்வீஸ் ரெசிடென்சி ப்ரோக்ராம்-ல செலக்ட் ஆனேன். அக்டோபர் மாதம் தொடங்கி ஜூன் 16 வரை எங்களுக்கு எக்ஸாம் நடந்த ஒன்பது மாதம் வந்து நான் முதல் நிலைத் தேர்வுக்காக இங்கதான் பயிற்சி பெற்றேன். அது மட்டுமில்லாமல் எங்களுக்கு நான் முதல்வன் ஸ்கீம்ல மாதம் 7,500 ரூபாய் என ஒரு பத்து மாதம் 75,000 ரூபாய் கிடைத்ததோடு, இங்கு வந்து தங்கும் வசதியும், உணவும் கிடைத்தது. அதுமட்டும் இல்லாமல் ஒரு கரெக்டான பெயர், குரூப் மற்றும் கண்டிஷன் எம்ப்பயர்மெண்ட் இங்கு வந்து கிடைச்சது.

இந்த கோச்சிங் சென்டரில் எப்படி இருக்கும்னு பார்த்தீங்கின்னா ஒரு 225 மாணவர்களை எடுப்பாங்க. இதில் ஃபுல் டைம், பார்ட் டைம் இன்க்ளூடிங் ஆவாங்க. பார்ட் டைம்-ல வேலைக்கு போறவங்களோ இல்ல ஹையர் ஸ்டடி படிச்சுக்கிட்டே இங்க வந்து பார்ட் டைம் ஆக வந்து சேர்ந்து படிக்கலாம். வீக்கிலியா கிட்டத்தட்ட 36 டெஸ்ட் வச்சாங்க. இப்படி நான் முதல்வன் ஸ்கீமும், ஆல் இந்தியா சிவில் சர்வீஸ் கோச்சிங் சென்டர் ஓட இன்ஸ்டிடியூட்டும் சேர்ந்து எங்களுக்கு ஹெல்ப் பண்ணியதால இந்த வாட்டி எப்பவுமே இல்லாத ரிசல்ட்டு 85 ஸ்டூடன்ட்ஸ்-க்கு கிடைச்சிருக்கு. இந்த வாட்டி பிரிலிமினியரி எக்ஸாம்-ல கிளியர் பண்ணியிருக்காங்க.

அதுமட்டுமில்லாமல் இப்ப கிளியர் பண்ணின எங்களுக்கு மெயின் ரெசிடென்சி ப்ரோக்ராம்க்காக இங்கேயே ஒரு மூன்று மாதமாக தங்கியிருக்கோம். அதற்காக 25,000 ரூபாய் தமிழ்நாடு கவர்மெண்ட்ல இருந்து எங்களுக்குக் கொடுத்திருக்காங்க. இது மாதிரி கொடுத்த பைனான்சியல் சப்போர்ட்டும் சரி, இந்த ரெசிடென்சியல் சப்போர்ட்டும் சரி ஒரு லக்ஷரியாக இல்லாமல் என்ன மாதிரி மிடில் கிளாஸ்ல இருந்து வர ஸ்டூடண்ட்ஸ் எல்லோருக்கும் ஹெல்ப் பண்ணியதனால கண்டிப்பா தமிழ்நாட்டோட யு.பி.எஸ்.சி-இல் கிளியர் பண்றதோட கவுண்ட் இன்க்ரீஸ் ஆகும். இத கொடுத்த தமிழ்நாடு அரசுக்கும், நான் முதல்வன் ஸ்கீம்-ஐ தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் எங்களது நன்றி.

முதன்மைத் தேர்வு பயிற்சி
(Main Examination)

ஒவ்வொரு ஆண்டும் முதல்நிலைத் தேர்வு முடிவுகள் வரப்பெற்றவுடன், வெற்றி பெற்றவர்கள் முதன்மைத் தேர்வினை எதிர்கொள்ளும் பொருட்டு சுமார் மூன்று மாத காலம் உரிய பயிற்சி (ஜூலை முதல் செப்டம்பர் வரை) அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி மையத்தில் பயின்று வெற்றி பெற்ற ஆர்வலர்கள் அல்லாமல் முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெற்ற இதர ஆர்வலர்களும் பயிற்சி மையத்தில் சேர்ந்து பயிற்சி பெறுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் 225 மாணவ / மாணவியர்களுக்குக் குடிமைப்பணித் தேர்வில் முதன்மைத் தேர்வுக்கான பயிற்சி அளிக்கும் வகையில் இம்மையம் செயல்பட்டு வருகிறது. முதன்மைத் தேர்வுக்குப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு வருமான உச்சவரம்பின்றி மாதம் ஒன்றுக்கு ரூ.3,000 வீதம் மூன்று மாதங்களுக்கு உதவித்தொகை, படிக்கும் தகவல்களைத் திரட்டும் பொருட்டு வழங்கப்பட்டு வந்தது. 2023இல் நடைபெற்ற நான் முதல்வன் திட்டத்தோடு இணைந்து 149 ஆர்வலர்களுக்கு நடத்தப்பட்ட முதன்மைத்தேர்வு பயிற்சிக்காக ரூ.25,000 உதவித்தொகையாக ஆர்வலர்களுக்கு வழங்கப்பட்டது.

தொடர்ச்சி அடுத்த மாத இதழில்....

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

(TNPSC) குரூப் – I, II, IV

8ஆம் வகுப்பு, அறிவியல், திறனறி மற்றும் பொது அறிவுக்கான வினா - விடைத்தாள் - 18.11.2023

1. Which among the following statement is correct?
   A) SI units are metric system of units,
   B) Temperature is a measure of total kinetic energy of the particles in a system.
   C) In thermometers, freezing point of water is taken as the Upper Fixed Point.
   D) One coulomb of charge flowing per minute is called ampere.

   பின்வரும் கூற்றுகளில் எது சரியானது?
   A) எஸ்ஐ அலகுகள் அலகுகளின் மெட்ரிக் அமைப்பு.
   B) வெப்பநிலை என்பது ஒரு அமைப்பில் உள்ள துகள்களின் மொத்த இயக்க ஆற்றலின் அளவீடு ஆகும்.
   C) வெப்பமானிகளில் நீரின் உறைநிலையானது மேல் நிலையான புள்ளியாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.
   D) நிமிடத்திற்கு ஒரு பாய்ச்சல் கட்டணம் 'ஆம்பியர் என்று அழைக்கப்படுகிறது

2. Which clock are used in Global positioning system and Global Navigation Satellite System ?
   A) Quartz clock B) Atomic clock
   C) Nuclear clock D) Mechanical clock

   குளோபல் பொசிஷனிங் சிஸ்டம் மற்றும் குளோபல் நேவிகேஷன் சேட்டிலைட் சிஸ்டத்தில் எந்தக் கடிகாரம் பயன்படுத்தப்படுகிறது
   A) குவார்ட்ஸ் கடிகாரம் B) அணு கடிகாரம்
   C) அணுக்கரு கடிகாரம் D) இயந்திரக் கடிகாரம்

3. The first accurate atomic clock build by Lauis Essar in UK is based on
   A) Uranium - 235 B) Plutonium - 239
   C) Caesium - 133 D) None

   இங்கிலாந்தில் லாயிஸ் எஸார் உருவாக்கிய முதல் துல்லியமான அணு கடிகாரத்தை அடிப்படையாகக் கொண்டது
   A) யுரேனியம் - 235 B) புளூட்டோனியம் - 239
   C) சீசியம் - 133 D) எதுவுமில்லை

4. Pascal's law is used in
   A) Hydraulic lift B) Brake system
   C) Pressing Heavy Bundles D) All the above

   பாஸ்கல் விதி பயன்படுத்தப்படுகிறது
   A) ஹைட்ராலிக் லிப்ட் B) பிரேக் சிஸ்டம்
   C) கனமான மூட்டைகளை அழுத்துதல் D) மேலே உள்ள அனைத்தும்

5. Match the following :-

1) Static friction	–	A) Viscosity
2) Kinetic friction	–	B) Least friction
3) Rolling friction	–	C) Objects are in motion
4) Friction between	–	D) Objects are sliding the liquid layers
5) Sliding friction	–	E) Objects are at rest

A) DECAB B) ECBAD

C) CDEAB D) ADCBE

பின்வருவனவற்றைப் பொருத்துங்கள் :-

1) நிலையான உராய்வு	–	A) பாகுத்தன்மை
2) இயக்க உராய்வு	–	B) குறைந்த உராய்வு
3) உருட்டல் உராய்வு	–	C) பொருள்கள் இயக்கத்தில் உள்ளன
4) இடையிலான உராய்வு	–	D) பொருள்கள் நெகிழ் திரவ அடுக்குகள்
5) நெகிழ் உராய்வு	–	E) பொருள்கள் ஓய்வில் உள்ளன

A) DECAB B) ECBAD

C) CDEAB D) ADCBE

6. The Reflective index of Water is

A) 1.0 B) 1.33 C) 1.4 4 D) 1.52

நீரின் ஒளிவிலகல் குறியீடு

A) 1.0 B) 1.33 C) 1.4 4 D) 1.52

7. The mirror used by the ophthalmologist to examine the eye is:-

A) Convex mirror B) Plane Mirror

C) Concave mirror D) None

கண் பரிசோதிக்க கண் மருத்துவர் பயன்படுத்தும் கண்ணாடி

A) குவி ஆடி B) சமதள ஆடி

C) குழி ஆடி D) எதுவுமில்லை

8. Liquid metal is used in thermometer

A) Copper B) Mercury C) Silver D) Gold

வெப்பமானிகளில் பயன்படுத்தப்படும் திரவ உலோகம்

A) காப்பர் B) மெர்குரி C) வெள்ளி D) தங்கம்

9. Melting point of most metal is -------------- non-metal

A) Higher than B) Lower than

C) Equal to D) None

பெரும்பாலான உலோகத்தின் உருகும் தன்மை அலோகத்தை விட

A) உயர்ந்தது B) குறைவானது

C) சமம் D) எதுவும் இல்லை

10. Which among the following are the characteristic non-metals?

1) Sonorous 2) Highly ductile 3) Low densities
4) Low melting point 5) High Boiling point 6) None malleable

A) 1, 2, 4, 6 only B) 3, 4, 6 only
C) 1, 5, 6 only D) 1, 2, 4, 6 only

பின்வருவனவற்றில் எவை அலோகத்தின் பண்புகளைக் கொண்டுள்ளது?

1) ஒலி எழுப்பும் தன்மை 2) அதிக நீர்த்துப்போகும் 3) குறைந்த அடர்த்தி
4) குறைந்த உருகும் இடம் 5) உயர் கொதிநிலை 6) இணக்கமில்லாதது

A) 1, 2, 4, 6 மட்டும் B) 3, 4, 6 மட்டும்
C) 1, 5, 6 மட்டும் D) 1, 2, 4, 6 மட்டும்

11. Match the following :-

1) Rusting – A) Photosynthesis
2) Electrolysis – B) Haber's process
3) Thermolysis – C) Iron
4) Food – D) Brine
5) Catalysis – E) Decomposition of limestone

A) ADCEB B) BCDEA
C) CDEAB D) ADECB

பின்வருவனவற்றைப் பொருத்துங்கள் :-

1) துருப்பிடித்தல் – A) ஒளிச்சேர்க்கை
2) மின்னாற்பகுப்பு – B) ஹேபரின் செயல்முறை
3) தெர்மோலிசிஸ் – C) இரும்பு
4) உணவு – D) உப்பு நீர்
5) வினையூக்கம் E) சுண்ணாம்பின் சிதைவு

A) ADCEB B) BCDEA
C) CDEAB D) ADECB

12. Lime stone is a raw material for

1) Quick lime 2) Slaked lime 3) Cement 4) Mortar

A) 1, 2, 3 only B) 1, 3 only
C) 1, 3, 4 only D) All the above

சுண்ணாம்புக் கல்லின் மூலப்பொருள்

1) விரைவான சுண்ணாம்பு 2) வெட்டப்பட்ட சுண்ணாம்பு 3) சிமெண்ட் 4) மோட்டார்

A) 1, 2, 3 மட்டும் B) 1, 3 மட்டும்
C) 1, 3, 4 மட்டும் D) அனைத்தும்

13. ------------- are the infectious protein particles.

A) Virion B) Biotin
C) Capsid D) None

------------ என்பது தொற்றுப் புரதத் துகள்கள்.

A) விரியன் B) பயோட்டின்

C) கேப்சிட் D) எதுவுமில்லை

14. Match the following

1) Nitrogen fixing bacteria – A) Vaccine

2) Tuberculosis – B) Prion

3) Kuru – C) Lactobacillus acidophilus

4) Probiotics – D) Bacteria

5) Edward Jenner – E) Rhizobium

A) BDACE B) AECBD

C) EDBCA D) AEBCD

பின்வருவனவற்றைப் பொருத்துங்கள்

1) நைட்ரஜன் நிலைப்படுத்தும் பாக்டீரியா – A) தடுப்பூசி

2) காசநோய் – B) ப்ரியான்

3) குரு – C) லாக்டோபாகிலஸ் அமிலோபிலஸ்

4) புரோபயாடிக்குகள் – D) பாக்டீரியா

5) எட்வர்ட் ஜென்னர் – E) ரைசோபியம்

A) BDACE B) AECBD

C) EDBCA D) AEBCD

15. Match the following :-

1) Malaria – A) Plasmodium

2) Common Cold – B) Entamoeba histoly

3) Tuberculosis – C) Influenza

4) Amoebic dysentery – D) Mycobacterium

A) DCAB B) ACDB

C) DACB D) DCBA

பின்வருவனவற்றைப் பொருத்துங்கள் :-

1) மலேரியா – A) பிளாஸ்மோடியம்

2) சாதாரண சளி – B) என்டமொபா ஹிஸ்டோலி

3) காசநோய் – C) காய்ச்சல்

4) அமீபிக் வயிற்றுப்போக்கு – D) மைக்கோபாக்டீரியம்

A) DCAB B) ACDB

C) DACB D) DCBA

16. Assertion (A) Penicillion is an antibiotic extracted from Penicillium notatum.
Reason (R): It can kill (or) inhibit the growth of the other micro organism.

A) Both A and R True, R explains A B) A only correct, R doesn't explain A

C) A True, R explains A D) Both A and R False

வலியுறுத்தல் (A) பென்சிலியன் என்பது பென்சிலியம் நோட்டாட்டத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஒரு ஆண்டிபயாடிக் ஆகும்.
காரணம் (R): இது மற்ற நுண்ணுயிரிகளின் வளர்ச்சியைக் கொல்லலாம் (அல்லது) தடுக்கலாம்

A) A மற்றும் R இரண்டும் உண்மை. Rஆனது Aஐ விளக்குகிறது.
B) A மட்டும் சரி. Rஆனது Aஐ விளக்கவில்லை
C) A மட்டும் சரி. R ஆனது Aஐ விளக்குகிறது
D) இரண்டும் தவறு

17. -------------- is not a fungal disease.

A) Athlet's foot
B) Foot and Mouth
C) Dandruff
D) Ringworm

-------------- ஒரு பூஞ்சை நோய் அல்ல.

A) தடகளக் கால்
B) கால் மற்றும் வாய்
C) பொடுகு
D) படை

18. Each glucose molecule produce ------ ATP

A) 38 B) 40 C) 36 D) 34

ஒவ்வொரு குளுக்கோஸ் மூலக்கூறும் ------- ATP உற்பத்திச் செய்கிறது

A) 38 B) 40 C) 36 D) 34

19. Which of the following are the characteristics of vibrations?

i) Frequency ii) time period iii) pitch iv) loudness

A) i and ii
B) ii and iii
C) iii and iv
D) i and iv

பின்வருவனவற்றில் அதிர்வுகளின் பண்புகள் யாவை?

i) அதிர்வெண் ii) கால அளவு iii) சுருதி iv) சத்தம்

A) i மற்றும் ii
B) ii மற்றும் iii
C) iii மற்றும் iv
D) i மற்றும் iv

20. The hearing range of human ear is

A) 20 HZ to 20 KHZ
B) less than 20 KHZ
C) More than 20 KHZ
D) More

மனித காதுகளின் கேட்கும் வீச்சு

A) 20 HZ முதல் 20 KHZ வரை
B) 20 KHZ க்கும் குறைவாக
C) 20 க்கும் மேற்பட்ட KHZ
D) மேலும்

21. The magnetic strength is -------------- at the poles

A) Maximum
B) Minimum
C) either or minimum
D) neither or minimum

காந்த வலிமைத் துருவங்களில் -------------- ஆக உள்ளது?

A) அதிகபட்சம்
B) குறைந்தபட்சம்
C) இரண்டும் அல்லது குறைந்தபட்சம்
D) இரண்டும் இல்லை அல்லது குறைந்தபட்சம்

22. Which among the following has more iron content

A) Hematite B) Magnetic C) Siderite D) Lignite

பின்வருவனவற்றில் இரும்பு எதில் அதிகம் உள்ளது

A) ஹேமடைட் B) காந்தம் C) சைடரைட் D) லிக்னைட்

23. Chandrayaan - 1 was launched on --------------

A) 22nd October 2008 B) 8th November 2008

C) 22nd July 2019 D) 22nd October 2019

சந்திரயான் 1 -------------- அன்று தொடங்கப்பட்டது

A) 22 அக்டோபர் 2008 B) 8 நவம்பர் 2008

C) 22 ஜுலை 2019 D) 22 அக்டோபர் 2019

24. Who is the father of Indian space program

A) Homi J babha B) Sathish dhawan

C) Vikram A sarabhai D) None

இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தை யார்

A) ஹோமி ஜே பாபா B) சதீஷ் தவான்

C) விக்ரம் ஏ சாராபாய் D) எதுவுமில்லை

25. Which of the following is a water pollutant

A) Lead B) Alum C) Oxygen D) Chlorine

பின்வருவனவற்றில் எது நீர் மாசுபடுத்தும்

A) ஈயம் B) படிகாரம் C) ஆக்ஸிஜன் D) குளோரின்

26. The density of water is maximum at

A) 8° C B) 6°C C) 2°C D) 4° C

நீரின் அடர்த்தி அதிகபட்சம்

A) 8° C B) 6°C C) 2°C D) 4° C

27. The boiling point of water increases with -------------- pressure

A) increase B) decrease C) no effect D) None

நீரின் கொதிநிலை -------------- அழுத்தத்துடன் அதிகரிக்கிறது

A) அதிக B) குறைந்த C) எந்த விளைவும் இல்லை D) எதுவுமில்லை

28. The main component of natural gas is --------------

A) methane B) ethane C) propane D) butane

இயற்கை வாயுவின் முக்கியக் கூறு

A) மீத்தேன் B) ஈத்தேன் C) புரோபேன் D) பியூட்டேன்

29. -------------- is a good fuel and burn without smoke

A) Coal B) lignite C) bituminous D) coke

-------------- ஒரு நல்ல எரிபொருள் மற்றும் புகை இல்லாமல் எரியும்

A) நிலக்கரி B) லிக்னைட் C) பிட்மினஸ் D) கோக்

30. A biodiversity knowledge centre named Neelakkurinji has been opened in which state?

A) Tamil Nadu B) Kerala C) Andhra Pradesh D) Karnataka

நீலக்குறிஞ்சி என்ற பல்லுயிர் அறிவு மையம் எந்த மாநிலத்தில் திறக்கப்பட்டுள்ளது?

A) தமிழ்நாடு B) கேரளா C) ஆந்திரப் பிரதேசம் D) கர்நாடகா

31. Which institution is associated with National Broadcasting Policy?

A) NITI Aayog B) NASSCOM C) TRAI D) Prasar Bharati

எந்த நிறுவனம் தேசிய ஒலிபரப்புக் கொள்கையுடன் தொடர்புடையது ?

A) NITI ஆயோக் B) நாஸ்காம் C) TRAI D) பிரசார் பாரதி

32. As of 2023, how many countries are present in the European Union bloc?

A) 21 B) 27 C) 32 D) 35

2023ஆம் ஆண்டு நிலவரப்படி, எத்தனை நாடுகள் ஐரோப்பிய யூனியன் முகாமில் உள்ளன?

A) 21 B) 27 C) 32 D) 35

33. Tharman Shanmugaratnam has been sworn in as the President of which country?

A) Indonesia B) Vietnam C) Japan D) Singapore

எந்த நாட்டின் அதிபராக தர்மன் சண்முகரத்தினம் பதவியேற்றார்?

A) இந்தோனேசியா B) வியட்நாம் C) ஜப்பான் D) சிங்கப்பூர்

34. Which Indian state launched free breakfast scheme in schools for students, after Tamil Nadu?

A) Kerala B) Telangana C) West Bengal D) Rajasthan

தமிழ்நாட்டிற்கு அடுத்தபடியாக எந்த இந்திய மாநிலம் மாணவர்களுக்குப் பள்ளிகளில் இலவச காலை உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது?

A) கேரளா B) தெலுங்கானா C) மேற்கு வங்காளம் D) ராஜஸ்தான்

35. Which country is the host of the Asian Games 2023?

A) Japan B) China C) India D) Sri Lanka

2023 ஆசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் நாடு எது?

A) ஜப்பான் B) சீனா C) இந்தியா D) இலங்கை

36. What is the rank of India in the World Happiness Index 2023?

A) 126 B) 121 C) 118 D) 108

உலக மகிழ்ச்சிக் குறியீடு 2023இல் இந்தியாவின் தரவரிசை என்ன?

A) 126 B) 121 C) 118 D) 108

37. Which Union Ministry is the top procurer on Government e- Marketplace (GeM) as of 2023?

A) Ministry of Defence B) Ministry of MSME

C) Ministry of Commerce and Industry D) Ministry of Housing and Urban Affairs

எந்த மத்திய அமைச்சகம் 2023 ஆம் ஆண்டுவரை அரசாங்க இ-சந்தையில் (GeM) சிறந்த கொள்முதல் செய்கிறது?

A) பாதுகாப்பு அமைச்சகம் B) MSME அமைச்சகம்

C) வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சகம் D) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம்

38. Recently, Scientists have engineered E. Coli Bacteria to Generate Electricity from which material ?

A) Wastewater B) Sandpaper C) Air D) Seawater

சமீபத்தில், விஞ்ஞானிகள் ஈ.கோலி பாக்டீரியாவை எந்தப் பொருளில் இருந்து மின்சாரத்தை உருவாக்குவதற்காக வடிவமைத்துள்ளனர்?

A) கழிவு நீர் B) உப்பு காகிதத் தாள் C) காற்று D) கடல் நீர்

39. What is one of the primary objectives of the Aditya-L1 mission regarding the Sun's upper layers?

A) To explore the Sun's core
B) To investigate the solar wind
C) To study the chromosphere and corona
D) To measure the Sun's magnetic field

சூரியனின் மேல் அடுக்குகள் தொடர்பான ஆதித்யா - எல்1 பணியின் முதன்மை நோக்கங்களில் ஒன்று என்ன?

A) சூரியனின் மையத்தை ஆராய
B) சூரியக் காற்றை ஆராய
C) குரோமோஸ்பியர் மற்றும் கரோனாவைப்பற்றி கற்றறிய
D) சூரியனின் காந்தப்புலத்தை அளவிட

III . திறனறி வினாக்கள்

40. The value of (5/4) - (8/3) is:

A) -17/12 B) 17/12 C) 12/17 D) -12/17

(5/4) - (8/3) இன் மதிப்பு என்ன?

A) -17/12 B) 17/12 C) 12/17 D) -12/17

41. The multiplicative identity of rational numbers is:

A) 0 B) 1 C) 2 D) -1

விகிதமுறு எண்களின் பெருக்கல் சமனி

A) 0 B) 1 C) 2 D) -1

42. The solution of 2y + 9 = 4 is:

A) 9/2 B) 4/9 C) -2/5 D) -5/2

2y + 9 = 4 இன் தீர்வு?

A) 9/2 B) 4/9 C) -2/5 D) -5/2

43. If AB and CD are two parallel sides of a parallelogram, then:

A) AB > CD B) AB < CD C) AB = CD D) None of the above

AB மற்றும் CD ஆகியவை இணைகரத்தின் இரண்டு இணையான பக்கங்கள் எனில்:

A) AB > CD B) AB < CD C) AB = CD D) எதுவுமில்லை

44. If the three digit number 24x is divisible by 9, the value of x is:

A) 3 B) 7 C) 1 D) None of the above

மூன்று இலக்க எண் 24x ஆனது 9 ஆல் வகுபடும் எனில், x இன் மதிப்பு:

A) 3 B) 7 C) 1 D) எதுவுமில்லை

45. If x and y are directly proportional, then which of the following is correct?

A) x + y = constant B) x - y = constant C) xy = constant D) x/y = constant

x மற்றும் y நேர் விகிதமாக இருந்தால், பின்வருவனவற்றில் எது சரியானது?

A) x + y = மாறிலி B) x - y = மாறிலி C) xy = மாறிலி D) x/y = மாறிலி

46. The value of 2^{-2} is:

A) 4 B) 1/4 C) 2 D) 1/2

2^{-2} இன் மதிப்பு என்ன?

A) 4 B) 1/4 C) 2 D) 1/2

47. Volume of a cuboid of length (l), width (w) and height (h) is:

A) lbh B) lb + bh + hl C) 2 (lb + bh + hl) D) 2 (I + b) h

நீளம் (l). அகலம் (w) மற்றும் உயரம் (h) கொண்ட கனசதுரத்தின் கன அளவு?

A) lbh B) lb + bh + hl C) 2 (lb + bh + hl) D) 2 (I + b) h

48. The area of a rhombus whose diagonals are of lengths 10 cm and 8.2 cm is:

A) 41 cm^2 B) 82 cm^2 C) 410 cm^2 D) 820 cm^2

10 செ.மீ மற்றும் 8.2 செ.மீ நீளமுள்ள மூலைவிட்டங்களைக் கொண்ட சாய் சதுரத்தின் பரப்பளவு:

A) 41 cm^2 B) 82 cm^2 C) 410 cm^2 D) 820 cm^2

49. The height of a cylinder whose radius is 7 cm and the total surface area is 968 cm^2 is:

A) 15 cm B) 17 cm C) 19 cm D) 21 cm

ஒரு உருளையின் ஆரம் 7 செமீ மற்றும் மொத்த பரப்பளவு 968 செமீ^{2} எனில் அதன் உயரம்?

A) 15 cm B) 17 cm C) 19 cm D) 21 cm

விடைகள்

1. – A)	2. – B)	3. – C)	4. – A)	5. – B)	6. – B)	7. – C)
8. – B)	9. – A)	10. – B)	11. – C)	12. – D)	13. – C)	14. – C)
15. – B)	16. – A)	17. – B)	18. – C)	19. – C)	20. – A)	21. – A)
22. – B)	23. – A)	24. – C)	25. – A)	26. – D)	27. – A)	28. – A)
29. – D)	30. – B)	31. – C)	32. – B)	33. – D)	34. – B)	35. – B)
36. – A)	37. – A)	38. – A)	39. – C)	40. – B)	41. – B)	42. – D)
43. – C)	44. – A)	45. – D)	46. – B)	47. – A)	48. – A)	49. – A)

தமிழரசு
Tamilarasu

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2024-2026
& WPP No. TN/PMG (CCR) 518/2024-2026

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் பள்ளிகளிலும்
1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்

விரிவாக்கம்

Published by : Dr. R. Vaithinathan, I.A.S., on behalf of Information and Public Relations Department Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS, Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor : Dr. R. Vaithinathan, I.A.S.,

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள்

மெட்ரோ இரயில் திட்ட பணிகள் ஆய்வு

சென்னை, ராயப்பேட்டை முதல் டாக்டர். ராதாகிருஷ்ணன் சாலை வரை சுரங்கம் அமைக்கும் பணி ஆய்வு


சென்னை, பேரூரில் ஆலப்பாக்கம் இரண்டு அடுக்கு மெட்ரோ இரயில்பாதை ஆய்வு